2902

T.N.L.A. Debates

official Report

DIGITIZED

Vol. LXVII No. 1

27th January 1986

D 1
V211, 31 N86
N86.17.1.31
136445

Issued: 11-7-1986 வெளியீடு: 11-7-1986

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜனவரி 27, 1986–தொகுதி XVII எண். 1

**Monday the January 27, 1986,—Volume XVII No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

**Legislative Assembly, Secretariat, Fort St. George,**

Madras-6000 009

விலை ரூ 3.00 காசுகள்] [Price Rs. 3.00 Paise

T
Y2:1, 31 N86
11.6-17.131

136445
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

**27-1-1986**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| | (அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | iii—iv |
| | (ஆ) Personnel of the Government of Tamil Nadu. | v—v |
| | (இ) சட்டமன்ற பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vii |
| | (ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல். | viii—xv |
| 1. | வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—37 |
| 2. | அறிவிப்பு— | |
| | உறுப்பினர் திரு. வை. பாலச்சந்திரன் கைது செய்யப் பெற்றுள்ளது. | 37 |
| 3. | தகவல் கோரல்— | |
| | (அ) அரசு நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய இடம் வழங்கப் பெறுதல். | 38— 39 |
| | (ஆ) இந்திய மாணவர்கள் சங்க மாநாடு. | 39 |
| | (இ) குழந்தைகளுக்கு அளிக்கப் பெறும் சத்துணவு. | 39 |
| 4. | அறிக்கை அளித்தல் — | |
| | (அ) ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை. | 40—41 |
| | (ஆ) கூட்டுறவுத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை. | 41 —42 |
| | (இ) பொதுக் கணக்குக் குழு | 53 |
| 5. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) கோவை, சேலம் மாவட்ட பஞ்சாலைகள் மூடப் பெற்றுள்ளது குறித்து. | 42—50 |

| | | பக்கங்கள். |
|---|---|---|
| (ஆ) | தென்னாற்காடு மாவட்டம் மொடையூர், குழந்தைகள் நல மையத்தில் வழங்கப் பெற்ற உணவை உண்ட பல குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. | 50—53 |
| 6. | அரசினர் தீர்மானம்— | |
| | கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல். | 54 |
| 7. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) | சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு—1986. | 54 |
| (ஆ) | கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986. | 54—56 |
| (இ) | வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு—1986. | 56—57 |
| (ஈ) | சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு—1986 | 57—113 |
| (உ) | கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு—1986. | 113—115 |
| (ஊ) | மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1986. | 116—118 |
| (எ) | நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம் திருத்தச் சட்ட முன்வடிவு—1986. | 119—121 |
| (ஏ) | ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு—1986. | 121—123 |
| (ஐ) | ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு—1986. | 124—126 |
| (ஒ) | ஊராட்சிகள் (இரண்டாம்) திருத்தச் சட்ட முன்வடிவு—1986. | 126—128 |
| (ஓ) | மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு—1986. | 128 |
| 8. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

*அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்) —நிதி, வருவாய், பொது நிர்வாகம் சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (மின்துறை அமைச்சர்) மின்சாரம், இருப்பு, எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. டெ. ஏ. கிருஷ்ணசாமி: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல் பொருள் இயல், மற்றும் பயண இசைவு சீட்டு.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழில்துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள். சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை;

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர், சிறைகள், எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உட்பட) மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு,

11. மாண்மிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14, மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (ஆயத்துறை மற்றும் கைத்தறி துறை அமைச்சர்)— மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. க. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (கதர்த்துறை அமைச்சர்)—கதர் பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப்பணித்துறை அமைச்சர்)—பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

---

• 24-1-86 அன்று செய்யப்பட்ட மாற்றங்களுடன்

2902



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDER LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS:

1. HON. DR. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Indian Administrative Service, and other All India Services, Police, Prevention of Corruption,

2. HON. DR. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance)—Finance, Revenue (General Administration) Legislature, Election, Statistics, Youth Service Corps and Ex-Service men.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity) : Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Labour)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development Registration and Stamp Act.

5. HON. THIRU R. M. VEERAPPAN (Minister fo Information and Religious Endowments): Information and Publicity, Film Technology Tourism, Tourism Development Corporation Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowment, Forest, Circhonas grant of Liquor permits, Planning, Archeology and Passports.

6. HON. THIRU K. RAJARAM (Minister for Industries)—Large scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. HON. THIRU P. U. SHANMUGAM Minister for Local Administration)—Municipal Administration, Panchayats, Panchayat Unions Community Development and Rural Indebtedness.

8. HON. THIRU. C. ARANGANAYAGAM (Minister for Education, Education, Official, Language, Tamil Development and Culture.

9. HON. DR. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-Operative Societie , Water Supply and Drainage Board.

10. HON. THIRU C. PONNAIYAN (Minister for Law)—Law, Courts, Prisons, Depty collectors Legislation on Weights and Measures, Registration of Companies, Dept Relief includinb Legislation on Money Lending, Legislation on Chits and Molasses

11. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health and Environmental Pollution Control.

12. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. HON. THIRU. S. THIRUNAVUKKARASU (Minister for Food)—Food, Price Control and Census.

14. HON. THIRU V. V. SWAMINATHAN Minister for Excise and Handlooms)—Prohibitior excluding gran of Liqurr Permils Excise Handloom& Textiles.

15. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister fo Nutritious Meals Nutritious Meals.

16. HON. THIRU T. VEERASAMY (Minister Eor Commercial Taxes)—Commercial Taxes.

17. HON. THIRU N. NALLUSAMY (Minister for Housing)—Housing, Slum clearance Board, Town planning and Accommodation control.

18. HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (Minister for Rural Industries)—Rural Industries including village, Cottage and small industries.

19. HON. THIRU T. RAMASAMY (Minister for Rehabilitation and employment): Employment and training, Indians Overseas, Refugees, and Evacuees.

20. HON. THIRU A. ARUNACHALAM (Minister for Adi dravidar welfare)—Adi dravidar Welfare, Hill tribes and bonded Labour.

21. HON. THIRU M.R. GOVENDAN (Minister for Backeward classes)—Backward classes and Fisheries.

22. HON. TMT. GOMATHI SRINIVASAN (Minister for Social welfare)—Social welfare including women and children welfare Beggars home, orphanages, and correctional administration.

23. HON. TMT VIJAYALAKSHMI PALANISAMY (Ministec for Khadi)—Khadi, Bhoodan and Gramdhan.

24. HON. THIRU Y.S.M. YUSUF (Minister for Public works)—Public works department, Irrigation including minor irrigation and wakf.

25. HON. THIRU K. K.S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation)—Co-operation.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. வி. பி. வேடசந்தூர் பாலசுப்ரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல். **

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. டி. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன் முத்துராமலிங்கம்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி. ஏ. பி. எல்.,

இணைச் செயலாளர்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ. பி. ஜி. எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம், பி. ஜி. எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ. பி. எல்.

குழு அலுவலர்கள்.

திரு. கா சீனிவாசன், பி. எஸ்.சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி. ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. பெ. பாலகிருஷ்ணன் பி. காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி. ஏ., பி. எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி. எல்.
திரு. வ. சா. ஜான், பி. ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி. ஏ., பி. ஜி. எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி. எஸ்.சி., பி. எல்.

எஸ்டேட் அலுவலர்கள்

திரு. கேசவராம், பி. ஏ.
திரு. டி. ஜேக்கப் ஆர்தர்

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. ஜி. வெங்கட்டராமன்.

தலைமை நிருபர்

திரு. வை. இராமச்சந்திரன், எம். ஏ., எல். எல். பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம். ஏ.

---

*27-2-85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்
**10-1-86 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் சமத் திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 2 அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 3 அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4 அரிக்குமார் திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5 அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6 அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 7 அன்பழகன் திரு. க. | பார்க்டவுன் |
| 8 அன்பழகன் திரு. கே. | ஓமலூர் |
| 9 அன்பழகன் திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 10 அன்பழகன் திரு. பொ. | இளையான்குடி |
| 11 ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு. | ஆண்டிமடம் |
| 13 ஆபிரகாம் திரு. ம. | ஆலந்தூர் |
| 14 ஆறுமுகம் திரு. அ. | வந்தவாசி |
| 15 ஆறுமுகம் திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16 ஆறுமுகம் திரு. ஆர். எஸ். | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 17 ஆறுமுகம் திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18 ஆறுமுகம் திரு. செ. | மதுராந்தகம் |
| 19 ஆறுமுகம் திரு. சேலம் மு. | சேலம்-2 |
| 20 ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21 ஆனந்தன் திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22 இரகுபதி திரு. கோ. | காட்பாடி |
| 23 இரகுமான்கான் திரு. அ. | சேப்பாக்கம் |
| 24 இரத்தினம் திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 இரத்தினவேலு திரு. செ. | முசிறி |
| 26 இராசமாணிக்கம் திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 27 இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 இராசரத்தினம் திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 இராசரத்தினம் என்கிற மணி திரு. எம். | விழுப்புரம் |
| 30 இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 31 இராசாம்பாள் திருமதி தா. | தலைவாசல் (செ.வ.) |
| 32 இராசாராம் திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33 இராசாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 34 இராசு திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 இராசேந்திரன் திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 இராமச்சந்திரன் திரு. ஜே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 இராமச்சந்திரன் திரு. ச. | பண்ருட்டி |
| 40 இராமச்சந்திரன் திரு. சோ. ம. | அண்ணாநகர் |
| 41 இராமச்சந்திரன் திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 இராமசாமி திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 இராமசாமி திரு. | ராமநாதபுரம் |
| 44 இராமநாதன் திரு. மு. | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 45 இராமலிங்கம் டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 இளங்கோவன் திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47 ஈஸ்வரன் திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48 உ. சி திரு. கே. | கடலூர் |
| 49 உத்திராபதி திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 எத்திராசன் திரு. தி. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51 கணபதி திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கதிர்வேலு திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53 கந்தசாமி திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 கந்தசாமி திரு. பெ. | பொங்கலூர் |
| 55 கல்லன் திரு. கே. | உதகமண்டலம் |
| 56 கலிதீர்த்தான் திரு. சோ. | சங்கராபுரம் |
| 57 காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 கிருஷ்ணசாமி திரு. கே. எ. | ஆயிரம் விளக்கு |
| 59 கிருஷ்ணசாமி திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 கிருஷ்ணமூர்த்தி திரு. கி. | கும்பகோணம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 61 கிருஷ்ணராஜ் திரு. ஜீ. | சேலம்-1 |
| 62 குப்புசாமி திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63 குப்புசாமி திரு. வே. | செய்யாறு |
| 64 குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 குமரி அனந்தன் திரு. | ராதாபுரம் |
| 66 குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர் |
| 68 கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ) |
| 69 கோவிந்தசாமி திரு. ஆர். | குடியாத்தம் |
| 70 கோவிந்தசாமி திரு. ச. | எடப்பாடி |
| 71 கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 72 சங்கரலிங்கம் திரு. ச. | சங்கரநயினார் கோவில் (செ.வ) |
| 73 சண்முகம் திரு. இரா. | திருத்தணி |
| 74 சண்முகம் திரு. என். | சோளிங்கர் |
| 75 சண்முகம் திரு. ப. உ. | மேல்மலையனூர் |
| 76 சண்முகையா பாண்டியன் திரு. | ஆலங்குளம் |
| 77 சந்திரசேகரன் திரு. அ. | சோழவந்தான் |
| 78 சந்திரசேகர் திரு. பு. | முகையூர் |
| 79 சம்சுல் ஆலம் திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 80 சமரசம் டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 81 சரோஜா திருமதி இரா. | ராசிபுரம் (ஆ.வ) |
| 82 சாமிக்கண்ணு திரு. அ. | செங்கம் (செ.வ) |
| 83 சித்தன் திரு. என். எம். வி. | திருமங்கலம் |
| 84 சித்தன் திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 85 சிவக்குமார் திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ) |
| 86 சிவக்குமார் திரு. எம். | துறையூர் (செ.வ) |
| 87 சிவஞானம் திரு. என். | திருவோணம் |
| 88 சிவப்பிரகாசம் திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வ) |
| 89 சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 90 சிவராஜ் திரு. க. | ரிஷிவந்தியம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 91 சின்னக்குழந்தை திரு. மு. | ஆரணி |
| 92 சின்னச்சாமி திரு. ரா. | தர்மபுரி |
| 93 சின்னசாமி திரு. வே. கு. | பவானிசாகர் |
| 94 சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 95 சின்னராசு திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 96 சுந்தரதாஸ் திரு. மா. | விளவங்கோடு |
| 97 சுப்புராயர் திரு. சி. | கம்பம் |
| 98 சுப்பராயன் திரு. கு. | திருப்பூர் |
| 99 சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 100 சுப்பிரமணியன் திரு. உ. | சிவகங்கை |
| 101 சுப்பிரமணியன் திரு. வி. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 102 சுவாமிநாதன் திரு. வி. வி. | புவனகிரி |
| 103 செங்காளியப்பன் திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 104 செங்கோட்டையன் திரு. கு. அ. | கோபிசெட்டிபாளையம் |
| 105 செங்கோட்டையன் திரு. பெ. | கபிலர்மலை |
| 106 செம்மலை திரு. செ. | தாரமங்கலம் |
| 107 செல்வமுத்து திரு. பொ. | திருவாரூர் (செ.வ.) |
| 108 செல்லப்பா திரு. வி. சோ. | கடலூர் |
| 109 செல்வராசன் திரு. அ. | [illegible] |
| 110 சேகர் திரு. கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 111 சொர்ணலிங்கம் திரு. கா. | திருவாடானை |
| 112 சோலைராசு திரு. க. | மருங்காபுரி |
| 113 சைதை துரைசாமி திரு. சா. | சைதாப்பேட்டை |
| 114 சௌந்திரராஜன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 115 சௌந்திரராஜன் டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 116 ஞானசுந்தரம் திரு. சா. | மன்னார்குடி |
| 117 டேவிட்செல்வராஜ் திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 118 தங்கமணி திரு. மு. | மாயூரம் |
| 119 தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 120 தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 121 தங்கராசு திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 122 தங்கவேல்ராஜ் திரு. ப. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 123 | தங்கவேலு திரு. வி. | வையம்பாறை (செ. வ.) |
| 124 | தமிழ்மணி திரு. | திருப்போரூர் (செ. வ.) |
| 125 | தமிழரசன் திரு. கு. | பெண்ணாபட்டி (செ. வ.) |
| 126 | தனபால் திரு. ப. | சங்ககிரி (செ. வ.) |
| 127 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128 | தியாகராசன் திரு. ர. | விருத்தாசலம் |
| 129 | திருஞானம் திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ. வா.) |
| 130 | திருநாவுக்கரசு திரு. எஸ். | அறந்தாங்கி |
| 131 | திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 132 | தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. | மொரப்பூர் |
| 133 | தீர்த்தராமன் திரு. ப. | பாலக்கோடு |
| 134 | துரை அன்பரசன் திரு. | நெல்லிக்குப்பம் |
| 135 | துரை கிருஷ்ணமூர்த்தி திரு. | தஞ்சாவூர் |
| 136 | துரை கோவிந்தராசன் திரு. | திருவையாறு |
| 137 | துரைராசு திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 138 | துரை ராமசாமி திரு. | வெள்ளக்கோவில் |
| 139 | தெய்வநாயகம் திரு. எ. | மதுரை செண்ட்ரல் |
| 140 | தேவராஜ் திரு. வி. எம். | வேலூர் |
| 141 | நடராசன் திரு. [illegible] | பேரூர் |
| 142 | நரசிம்ம பல்லவன் திரு. க. | உத்திரமேரூர் |
| 143 | நரசிம்மன் திரு. பூ. மு | பள்ளிப்பட்டு |
| 144 | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ. வ) |
| 145 | நல்லுசாமி திரு. எஸ். | திருச்சிராப்பள்ளி |
| 146 | நாச்சிமுத்து திரு. கே. பி. | மேட்டூர் |
| 147 | நாராயணன் திரு. எஸ். | திருநெல்வேலி |
| 148 | நாராயணன் திரு. பு. கோ. | பழனி |
| 149 | நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 150 | பட்டாபிராமன் திரு. மெ. ச. | திருவள்ளூர் |
| 151 | பரமசிவம் திரு. பா. ந. | பல்லடம் |
| 152 | பரிதி இளம்வழுதி திரு. | பெரம்பூர் |
| 153 | பழனி திரு. த. | ஆற்காடு |
| 154 | பழனிச்சாமி திரு. கா. செ. | காங்கேயம் |
| 155 | பழனிமுத்து திரு. [illegible] | [illegible]ந்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 156 | பாண்டியன் திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 157 | பாண்டுரங்கன் திரு. மு. | கலசபாக்கம் |
| 158 | பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 159 | பாரதி திரு. ஜி. கே. ஜெ | திருவொற்றியூர் |
| 160 | பாரமலை திரு. க. | மானாமதுரை (செ. வ) |
| 161 | பாலகிருஷ்ணன் திரு. ச. | மொடக்குறிச்சி |
| 162 | பாலகிருஷ்ணன் திரு. வை. | சிவகாசி |
| 163 | பாலசந்திரன் திரு. வை. | பத்மநாபபுரம் |
| 164 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ. வ) |
| 165 | பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 166 | பாலசுப்பிரமணியன் (வேடசந்தூர் திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 167 | பாலன் திரு. சு. | எழும்பூர் |
| 168 | பாலாஜி திரு. கே. | காஞ்சிபுரம் |
| 169 | பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ. வ) |
| 170 | பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 171 | பிச்சை திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 172 | பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 173 | பிரேம்குமார் திரு. ஆ. | திண்டுக்கல் |
| 174 | புருஷோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 175 | புஷ்பராசு திரு. த. | திருமயம் |
| 176 | பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ. வ) |
| 177 | பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 178 | பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |
| 179 | பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 180 | பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | பழனி (செ. வ.) |
| 181 | பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 | பொன்னுரங்கம் திரு. ப. | ராசிபுரம் |
| 183 | பொன்மலையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| 184 | மணவாளன் திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185 | மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ. வ.) |
| 186 | மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி-I |
| 187 | மனோகரன் திரு. இ. நா. | புரசைவாக்கம் |
| 188 | மனோகரன் திரு. கோ. அ. | திருநாவலூர் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 189 | மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190 | மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 191 | மாதையன் திரு. பு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 192 | மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193 | மாரிமுத்து திரு. மு, | திருப்பரங்குன்றம் |
| 194 | மீனாட்சி சுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 195 | முகம்மது கனி திரு. ஜெ. | புதுக்கோட்டை |
| 196 | முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 197 | முசிறிபுத்தன் திரு. பி. | குளித்தலை |
| 198 | முத்துசாமி திரு. க. | ஈரோடு |
| 199 | முத்துராமலிங்கம் திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200 | முத்துராமலிங்கம் திரு. பொன். | மதுரை மேற்கு |
| 201 | முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 202 | முத்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முருகானந்தம் திரு. டி. என். | செஞ்சி |
| 204 | முனிரத்தினம் திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205 | யசோதா திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ) |
| 206 | ரமணி திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 | ரவீந்திரன் திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 | ராமஜெயம் திரு. ம. நா. | வானூர் (செ.வ) |
| 209 | ராமன் திரு. கி. | ராஜபாளையம் (செ.வ) |
| 210 | ராஜாபாபு திரு. ஜெ. | பேரூர் |
| 211 | ரெங்கசாமி திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 | ரெத்தினராஜ் திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 | லட்சுமி திருமதி டி. | அவினாசி (செ.வ) |
| 214 | வடிவேல் திரு. கு. | கரூர் |
| 215 | வளர்மதி திருமதி பா. | மயிலாப்பூர் |
| 216 | விஜயபாலன் திரு. என். | பூம்புகார் |
| 217 | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி ப. | வீரபாண்டி |
| 218 | வீராணம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 219 | வீரய்யன் திரு. கோ. | நாகப்பட்டினம் |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 220 | வீராசாமி திரு. தா. | ஒரத்தநாடு |
| 221 | வெங்கடரமணன் திரு. டி. ஆர். | தென்காசி |
| 222 | வெங்கடரெட்டி திரு. டி. | ஓசூர் |
| 223 | வெங்கடாசலம் திரு. அ. | ஆலங்குடி |
| 224 | வெங்கடாசலம் திரு. கி. | லால்குடி |
| 225 | வெங்கடாசலம் திரு. டி. எம். | பாகூர் |
| 226 | வேணுகோபால் திரு. எஸ். | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 227 | வேணுகோபால் திரு. கே. வி. | தளி |
| 228 | வேங்கடசாமி திரு. இ. வி. | தண்டராம்பட்டு |
| 229 | ஜான் வின்சென்ட் திரு. மு. | நாங்குநேரி |
| 230 | ஜாகிர் [illegible] ஹுசைன் ப. கோ. | செங்கல்பட்டு |
| 231 | ஜெயந்தன் திரு. க. | அரவக்குறிச்சி |
| 232 | ஜெயச்சந்திரன் திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ) |
| 233 | ஜெயராமன் திரு. வே. இரா. | தேனி |
| 234 | ஜெகந்நாதன் திரு. ஜெ. | திருவட்டாறு |
| 235 | [illegible] திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2 | மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3 | மாண்புமிகு திரு. பா. வை. மு. யூசுப் | அமைச்சர் |
| 4 | திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 சனவரி 27, திங்கட்கிழமை

தை 14, குரோதன திருவள்ளுவர் ஆண்டு—2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.பி.எச்.பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:
''சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்''.

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவு நிலைமையாம்.

## I. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட—வினாக்கள்

#### திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி

138—(*வினா எண். 1012) திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது விரைவில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

#### ஒன்றியங்களில் குடிமராமத்துப் பணிகளுக்காகும் செலவு

139—(*வினா எண். 2337) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் செய்யும் குடிமராமத்துச் செலவில் ஊராட்சி ஒன்றியம் பாதியும் விவசாயிகள் பாதியும் என்று இருப்பதை மாற்றி, தொகை முழுமையும் அரசு ஏற்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) முழுமையாக அரசு ஏற்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்கள்

140—(*வினா எண் 3865) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் பத்து வருடங்களுக்கு மேலாக பணிபுரியும் ஓட்டுநர்களை ''பணி நிரந்தரம்'' செய்வதில் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) ''டெரி காட்டன் சீருடை'' மாநகராட்சி ஓட்டுநர்களுக்கு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) சென்னை மாநகராட்சியில் மொத்தம் உள்ள 467 ஓட்டுநர்களில், 281 ஓட்டுநர்கள் தற்போது நிரந்தரமாகப் பணி புரிகிறார்கள். மீதமுள்ள ஓட்டுநர்களை நிரந்தரம் செய்வதற்கான செயற்குறிப்பு சென்னை மாநகராட்சி ஆணையாளரின் பரிசீலனையிலுள்ளது. அரசிற்கு ஆணையரின் அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஆம், கைத்தறி பாலியஸ்டர் துணியில் ஒரு பேண்ட், ஒரு சட்டை மற்றும் கைத்தறி பருத்தித் துணியில் இரண்டு பேண்ட், இரண்டு சட்டை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சீருடையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கு 30 புதிய லாரிகள் வாங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் அந்த லாரிகள் வாங்கப்படவில்லை. விரைந்து அந்த லாரிகளை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அந்த லாரிகளை வாங்குவதற்கு சமீபத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்திலே அவை வாங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றக் கூடிய மீதி நபர்களையும் பணி நிரந்தரம் செய்வதற்கு நடப்பு நிதியாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, விரைவிலே அரசு பரிசீலனை முடிந்த பிறகு நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியில் பணியாற்றுகின்ற துப்புரவுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் முதலியவர்களுக்குத் தற்போது கொடுக்கப்படுகிற சீருடைகளை சலவை செய்துகொள்வதற்காக அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் அந்தத் தொகையை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 281 நிரந்தர ஓட்டுநர்களுக்கு மட்டும் 1 மாதத்திற்கு ரூபாய் 10 சலவைப் படி என்று வழங்கப்படுகிறது. அதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 33,720 செலவாகும்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளிலே முழுமையான டிரெய்னேஜ் சிஸ்டம் இல்லாததன் காரணமாக பிளஷ்அவுட் உள்ள லெட்டரின்களிலிருந்து கழிவுநீர் அகற்றப்படுவதற்கு சக்கர் என்ற மோட்டார் வாகன ஊர்தியைப் பயன்படுத்துகிறார்கள். தற்போது அது குறைவாக இருக்கிற காரணத்தினால் சென்னையில் புறநகர்ப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு கழிவுநீரை அகற்றுவதிலே சில சிரமங்கள் இருக்கின்றன. அதைக் கருத்தில் கொண்டு அந்தமோட்டார் வாகன ஊர்திகளை அதிகமாக வாங்கிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா;

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற நகராட்சிகளிலே நகர்ப்புறங்களிலே உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு லாரிகளை வாங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரிக்கமுடியும், இருந்தாலும் தெரிவிக்க விரும்புகிறேன். எந்த எந்த நகராட்சிகளிலே நிதிவருவாய் போதுமானதாக இருக்கிறதோ அங்கெல்லாம் லாரிகளை வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷனிலே வேலை செய்யக்கூடியவர்கள் இரண்டு ஆண்டுகளிலே 480 நாட்கள் பணியாற்றியிருந்தால் அந்த தொழிலாளர்களை ஓட்டுநர்கள் உள்பட நிரந்தரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? 480 நாட்கள் பணிபுரிந்து இருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளை கம்ப்ளீட் செய்திருக்கிறார்கள். இப்படி ரொம்பப் பேர் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் பர்மனென்ட் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 480 நாட்கள் பணியாற்றியவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா என்று கேட்டார்கள். அதுபற்றித் தனியாக ஒரு கேள்வி போடுவார்களேயானால் விவரம் சேகரித்துத் தருவதற்கு எனக்கு ஏதுவாக இருக்கும்.

[1986 சனவரி 27

## பெரியகுளத்தில் புதிய பேருந்து நிலையம்

141—(* வினா எண் 4127) டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் புதியதாக பேருந்து நிலையம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது?

(இ) எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் நகராட்சியானது நூறாண்டுகளாகியும் இன்னும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் உள்ளது. பலமுறை அரசிடம் கோரியும் குயிலைத் தோட்டம், கொய்யாத் தோப்பு போன்ற இடங்களைத் தேர்வு செய்து இங்கு அனுப்பியும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.. எனவே, இந்த ஆண்டிலாவது புதியதொரு பேருந்து நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா, நிதியொதுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர் களே, பெரியகுளத்திற்குத் தென்கரை மேல்மங்கலம் சாலையின் முன்னால் வாரச்சந்தையிருந்த கொய்யாத்தோப்பு அருகில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்காக ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1984–85 ஆம் ஆண்டு 19 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்பப்பட்டது. நிதிப்பற்றாக் குறையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இதைப்பற்றி யோசிக்கலாம்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொய்யாத்தோப்பு நகராட்சிக்கு வெளிப் புறமாக உள்ளதால் மக்களின் போக்குவரத்திற்கு வசதியாக இருக்காது என்பதால், பொது மக்களிடையே இப்பொழுது இருக்கும் பழைய பேருந்து நிலையத்தையே புதுப்பேருந்து நிலைய மாக்கித்தர வேண்டுமென்று மக்கள் கூறுவதாலும், நானும் அதையே விரும்புவதாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நிதியாண்டிலேயே அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இருக்கின்ற பேருந்து நிலையம் வளர்ந்து வருகின்ற அந்த நகரத்திற்குப் போதுமானதாக இருக்காது என்று கருதுகிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப் பினரவர்கள் சொன்ன கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.



1986 சனவரி 27]

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பணம் ஈட்டித் தருகின்ற இனங்களிலே இந்தப் பேருந்து நிலையம் என்பது ஒன்றாக இருந்தாலும்கூட, பொதுவாகத் தமிழகமெங்குமே இந்தப் பேருந்து நிலையங்களின் பராமரிப்பு அவ்வளவு திருப்தி கரமாக இல்லையே, ஆதலால் இதிலிருந்து வருகின்ற வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியையாவது கட்டாயமாக இந்தப் பேருந்து நிலையங்களின் பராமரிப்பிற்காகச் செலவழிக்க வேண்டுமென்று உள்ளாட்சி நிறுவனங்களை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற பேருந்து நிலையங்கள் சிராகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே உள்ள பேருந்து நிலையங்கள் நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக சரிவர கவனிக்கப்படவில்லை. இதையெல்லாம் கவனிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள ஓலைச் சுவடிகள்.

142—(* வினா எண் 3354) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள ஓலைச் சுவடிகளை அச்சிட்டு புத்தகமாக வெளியிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சுவடிகளின் தொன்மை, பெருமை, பயன் இவைகளை ஆய்ந்து தேர்ந்து புத்தகமாக அச்சடிக்கப்படுகின்றன. இவ்வாறு தற்பொழுது அடுத்து எடுத்துக் கொள்ளத்தக்க வகையில் 150 சுவடிகள் தேர்ந்து வைக்கப் பட்டுள்ளன.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அச்சிட்டு வெளிவரும் புத்தகங்களைப் பாது காக்கின்ற முறையில் நல்ல புதிய கட்டிடங்கள் இப்போது இல்லாததால் அந்தப் புத்தகங்களைப் பாதுகாப்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஓலைச் சுவடிகளை அச்சிட்டு புதிதாக புத்தகங்கள் வெளிவரும்போது அவைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு, உலகப் பிரசித்தி பெற்ற சரஸ்வதி மகாலில் ஓரமாக புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொழுது இருக்கின்ற நிர்வாக அமைப்பை மாற்றி, மத்திய, மாநில அரசுகளினுடைய நேரடிப் பார்வையின்கீழ் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முயற்சித்துக்கொண்டிருக்கிறது. அந்த முயற்சி முடிவடை கின்றபொழுது இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழம் பெரும் சிறப்பு வாய்ந்த ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பை எந்தத் துறை ஏற்றிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலும், இப்பொழுது கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற கல்வித் துறையின் கீழேதான் இருக்கிறது.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஓலைச் சுவடிகள் எந்தக் காலத்தை, எந்த நூற்றாண்டைச் சார்ந்தவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவை பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளாகும். அதிலும் குறிப்பாக ஓலைச்சுவடிகள் 300, 400 ஆண்டுகளுக்கு மேல் இருக்காது என்கின்ற அபிப்பிராயத்தைச் சொல்கிறார்கள். அதைப்போல ஓலைச் சுவடிகள், இதற்குமுன் இருந்த ஓலைச் சுவடிகளைப் பார்த்து எழுதிய ஓலைச் சுவடிகள்; அவ்வப்பே து புதுப்பித்துக்கொண்டு வந்திருப்பார்கள் என்று அபிப்பிராயமும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே நூல்கள் பழமையாக இருக்கும், ஓலைச் சுவடிகள் 400, 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓலைச் சுவடிகள் மிகப் பழமையானதாக இருக்கும்; அவை அழிகிற வாய்ப்பும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே அவற்றைப் பாதுகாக்க 'மைக்ரோ பிலிம்' எடுக்கிற ஏதாவது கருவியை வாங்கி, வைக்கிற முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறதா? இல்லையென்றால், இப்படி மிக முக்கியமான, அரசு ஓலைச் சுவடிகளைக் காக்கும் பொருட்டு, கூடுதலாகப் பணியாளர்களை நியமித்து, எல்லாவற்றையும் அச்சடிக்கிற முனைப்பான நடவடிக்கைகளை அரசு எடுக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமான வரையில் எல்லா ஓலைச் சுவடிகளையும் நூல் வடிவில் பொதுமக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிற ஒரு விருப்பம் அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பல ஓலைச்சுவடிகள் புத்தகங்களாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. அதிலே இருக்கிற ஒரு முக்கியமான சிரமம், ஓலைச் சுவடியைப் பார்த்து எழுதக்கூடிய தகுதியைப் பெற்றவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்டவர்களுக்கு பயிற்சியும் இப்பொழுது உலகத் தமிழ் ஆராய்ச்சி



நிலையத்திலே நாம் தந்து கொண்டிருக்கிறோம். அத்தகையவர்கள் அதிகமான பேர்கள் வந்தால்தான் இந்த ஓலைச் சுவடிகள் நூல்களாக வந்து, பொதுமக்களுக்குப் பயன்படுகிற நிலைமையை நாம் கொஞ்சம் விரைவுபடுத்த முடியும்.

திரு. க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது அந்த ஓலைச் சுவடிகளைப் பார்த்து எழுதுகிற ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பொதுவாக தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை எடுத்துச் சென்று, அவற்றைக் கொண்டுதான் வைத்தீஸ்வரன் கோவில் போன்ற இடங்களிலே சில தனியார்கள், ஜாதகங்களைக் குறித்து, மிகப் பெருமளவில் வருவாய் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை வைத்து, அந்த ஜாதகங்களைக் குறிப்பது போன்று அதில் அவர்கள் பழகுவப்பட்டிருக்கிறார்கள்—இதையும், குறித்துவந்து, அப்படிப்பட்டவர்களை அழைத்துப் பேசி, எஞ்சியிருக்கிற சுவடிகளை மொழி பெயர்ப்பதற்கும், அச்சடிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, அவர்களை வைத்து எழுத வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனால், இந்த ஆற்றலுள்ளவர்களைப் பயன்படுத்தி, பதிப்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. சரஸ்வதி மகால் நூலகத்தில் ஏறக்குறைய 36,670 சமஸ்கிருத ஓலைச் சுவடிகளும், 2,606 தமிழ் ஓலைச் சுவடிகளும், 776 தெலுங்கு ஓலைச் சுவடிகளும், 2,954 மராட்டிய ஓலைச் சுவடிகளும் இருக்கின்றன.

டாக்டர் [illegible] : பேரவைத் தலைவர் அவர்களே, சரஸ்வதி மகாலில் இருக்கக்கூடிய அந்த ஓலைச் சுவடிகளில் சித்த மருத்துவத்தைப் பற்றி மிகத் தெளிவான பல்வேறு விஷயங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. இப்பொழுது இருக்கக்கூடிய மருத்துவத் துறையில் பல்வேறுவிதமான 'ரியாக்ஷன்ஸ்' என்று சொல்லக்கூடிய வகையில், நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த சித்த மருத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பக் கூடிய வகையிலே, தமிழ்நாட்டிலே முழுமையாக அமுலாக்குகிற வகையிலே, அவைகளை அச்சடித்துப் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ நூல்கள் இப்பொழுது அதிகமான அளவுக்கு, ஓலைச் சுவடிகளில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு, மக்கள் வாங்குகின்ற அளவுக்கு அவை வந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த ஓலைச் சுவடிகளை நூலாக ஆக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற சமயத்தில், தமிழக அரசின் சார்பில்,

நான் கூட எடுத்துச் சொன்னேன். எல்லா ஓலைச் சுவடிகளையுமே அரசு நூல்களாகப் பதிப்பிக்க விரும்புகிறது. ஆகவே, அதிலே எல்லோரும் ஒத்துழைப்பும் முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டேன். ஆனால், அது முடியாமல் போனதற்குக் காரணம், தேவையான பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லாததுதான். அது அவ்வளவு சுலபமான காரியமும் கூட அல்ல.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழிந்து விடுகிற அந்த ஓலைச் சுவடிகளைப் புதுப்பிக்கிற பொழுது, புலவர்கள் இடையிலே தங்கள் கருத்துக் களைச் சேர்த்துவிடுகிற சூழ்நிலை கூட வந்துவிடும். எனவே, பழமை யான புலவர்களின் நோக்கம் அப்படியே இருக்கவேண்டுமென்ற அடிப்படையில், அந்த ஓலைச் சுவடிகள் அத்தனையையுமே, அச்சடிக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதையும் ஓலைச் சுவடிகளைப் புதுப்பிக்கிறபொழுது, இடைச் செருகல் வந்து விடாமல் இருக்க, ஒரு கண்காணிப்புக்குழு அமைக்கிற முறை இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிப்பிக்கின்றபொழுது அத்தகைய பாது காப்புகள் எல்லாம் நாம் வைத்துக் கொண்டுதான், முறையாக, அவைகளை எல்லாம் சரிபார்த்து, அதற்குப் பிறகுதான் அந்த ஓலைச் சுவடிகள் எல்லாம் நூல்களாகப் பதிப்பிக்கப்படுகின்றன.

பள்ளியிறுதி மேல்நிலைத் தேர்வுகளுக்கான கட்டணங்கள்.

*143—(*வினா எண். 4689)* திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் பத்தாவது தேர்வு, மேல்நிலைத் தேர்வு இவைகளுக்கு வசூலிக்கப்படும் தேர்வு கட்டணத்தை ரத்து செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், இலவசக் கல்வி போன்ற வற்றை வழங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இந்தத் தேர்வுக் கட்டணத்தை எல்லாக் கட்டத்திலும் இரத்து செய்ய ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, எஸ்.எஸ்.எல்.சி தேர்வை 5,28,831 மாணவர்கள் சென்ற தடவை எழுதியிருக்கிறார்கள். அதன் மூலம் அரசுக்கு வருமானம் 79,32,465 ரூபாய். ஆனால் செலவு 1,30,64,000 ரூபாய் ஆகும். அதைப்போலவே மேல்நிலைப் பள்ளித் தேர்வை 2,32,957 மாணவர்கள் எழுதினார்கள். அதன் மூலம் வருமானம் 93,18,280





ரூபாய். ஆனால் செலவு 1,45,00,000 ரூபாயாகும். ஆக வருமானத்தைவிட அதிகமாகத்தான் செலவு செய்து கொண்டிருக் கிறோம். பணம் வாங்குகிறோம் என்றால் அந்தப் பணத்தை வைத்துதான் தேர்வு நடத்துகிறோம் என்று பொருள் அல்ல. அதிலும், இந்தக் கட்டணம் எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்டவை. அவற்றை மாற்றாமல் அப்படியே வைத்திருப்பதே நாம் மாணவர்களுக்குச் செய்கின்ற பெரிய உதவியாகும்.

திரு. மா. கதிர்வேலு: தலைவரவர்களே, பெரும்பாலான மாணவர்கள் ஆங்கில மீடியத்தில் படிக்க வேண்டுமென்று சொல்லும்போது தனியார் பள்ளிகளில் பணம் விளையாடுகிறது. இதைப் போக்க எல்லா அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில மீடியத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா? அமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசினுடைய கொள்கை தமிழிலேதான் படிக்க வேண்டும் என்பது. ஆங்கிலப் பயிற்சி மொழித் திட்டத்தை நாம் நம்முடைய அரசுப் பள்ளிகளில் கொண்டுவருவதாக இல்லை என்று முடிவு செய்திருக்கிறோம். ஆனால் இதற்கு முன்னால் இருந்த வகுப்புகள் மட்டும் அப்படியே இருக்கும். ஆகையால் இந்த முடிவினை மாற்றுவதற்கில்லை.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, அரசுத் தேர்வுத் துறை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பொதுக்கல்வி சம்பந்தப்பட்ட தேர்வுகளையும், எவ்வளவு தொழில் கல்வி சம்பந்தப்பட்ட தேர்வு களையும் நடத்துகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, தற்போது இருக்கிற இந்தத் தேர்வு முறை மாணவர்களுடைய அறிவாற்றலைச் சோதிப்பதாக இல்லை என்ற நிலைமையில், சென்ற வாரம் டெல்லியில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், இப்போதிருக்கிற தேர்வு முறையை மாற்றியமைக்க வேண்டு மென்ற கருத்து பேசப்பட்டதா? அதைப்போன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தேர்வு முறையில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்போது இருக்கிற தேர்வு முறை பெரும்பாலும் மனப்பாடம் செய்து எழுதுகிற வகையில்தான் இருக்கிறது. மாணவர்களிடத்தில் அறிவாற்றலை வளர்ப்பதற்குப் பதிலாக மனப்பாடம் செய்கின்ற ஆற்றலை வளர்ப்பதாகத்தான் இப்போதைய கல்வி முறை

இருக்கிறது. மனப்பாடம் முடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அதிக மதிப்பு செய்யும் ஆற்றலில் யார் ஊக்க எண்கள் பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் உண்மை யிலேயே அறிவாற்றல் உள்ளவர்கள் தெரியாமலே போய் விடுகின்ற நிலைமையும் இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் தேர்வு குறைபாடு உடையது. இன்னொன்று, மனப்பாடம் செய்து எழுதுகிற இந்த வாய்ப்பு இருக்கிற காரணத்தால் மாணவர்கள் ஆண்டு முழுவதும் ஒழுங்காகப் படித்து எழுதுகிற வாய்ப்பும், ஆசிரியர்கள் ஆண்டு முழுவதும் ஒழுங்காகச் சொல்லித் தந்து பாடம் நடத்துகிற வாய்ப்பும் குறைந்து வருகிறது. ஆக, இப்போதைய முறையில் கல்வியின் நோக்கம் குறைந்து வருகிறது என்பதை அந்தத் துறையில் இருக்கிற வல்லுநர்களும் உணர்ந் திருக்கிறார்கள்; கல்வி அமைச்சர்களும் உணர்ந்திருக்கிறார்கள். அதனால் இந்தத் தேர்வு முறையில் மாறுதல் செய்ய வேண்டும்; அதற்கு உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அவ்வப் போது பேசப்பட்டு வருகிறது. மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்து இப்போதும் இருந்துவருகிறது. ஆகவே, மாற்றம் தேவை. ஆனால் எப்படி மாற்றத்தைக் கொண்டுவருவது என்பதுபற்றி சம்பந்தப்பட்ட நிபுணர்களை வைத்து ஆராய்ந்து பார்த்துதான் முடிவு எடுக்க முடியும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, பத்தாவது வகுப்பு தேர்வு முதற்கொண்டு தேர்வு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த அரசு கல்வி பற்றி ஆளுநர் உரையில் பிரமாதமாகச் சொல்லியிருக்கிறது. ஆகவே, இலவசப் படிப்பு என்று சொல்லுகிறபோது தேர்வுக்கு மட்டும் கட்டணம் வாங்குவது என்பது சரியல்ல என்பதால் தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இலவசம் என்றால் எல்லாமே இலவசமாகத் தருவது என்பது சரியாகாது. அவ்வாறு எதிர்பார்ப்பதும் பொருத்தமாக இராது. இலவசமாகத் தருவது என்ற நிலைமையைப் பார்க்கிறபோது அதற்காக சர்க்காருக்கு பணம் எங்கிருந்து வருகிறது என்பதையும் பார்க்க வேண்டும். எப்படி இருந்தாலும் யாராவது ஒருவரிட மிருந்து பணத்தை வாங்காமல் இலவசமாக எதையும் தந்துவிட முடியாது. ஆகையால் குறிப்பிட்ட இந்த சந்தர்ப்பத்தில் அவர் களிடமிருந்து பணத்தை வாங்குவது நல்லது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, மனப்பாடம் செய்து எழுதுகிற முறை சரியான முறை அல்ல என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வெளி நாடுகளில் இருப்பதைப் போல புத்தகங்களை வைத்து பார்த்து எழுதுகிற முறை தமிழ்நாட்டில் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்க்காமல் எழுதுவது அல்லது பார்த்து எழுதுவது என்ற அடிப்படையில் இந்தத் தேர்வு முறையை மாற்றி யமைப்பது பற்றிச் சிந்திக்க முடியாது. அறிவின் வளர்ச்சியினை அடிப்படையாக வைத்துத்தான் அதாவது நாடு முழுவதும் மாணவர்கள் ஒழுங்காகப் படித்திருக்கிறார்களா என்பதையும் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் சிந்தித்து அந்த முறையில் தேர்வு முறைகளை மாற்றியமைப்பது என்ற வகையில்தான் ஏற்பாடுகளைச் செய்து மாற்றியமைக்க வேண்டும்.

(முற்பகல் 9-20)

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் ஆசிரியர் போராட்டத்தின் காரணத்தால் 10-வது வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சிலபஸ் ஒழுங்காகச் சொல்லிக்கொடுக்கப்பட முடியாத நிலைமை ஏற்பட்டதன் காரணத்தால் இந்த ஆண்டு நடக்கிற தேர்வில் அவர்களுக்கு சலுகை மதிப்பெண் அளிப்பதற்குரிய திட்டம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அதை முறையாகச் சொல்லிக் கொடுத்து விடுகிறோம் என்ற உறுதியினை ஆசிரியர்கள் தந்திருக் கிறார்கள். அதற்கேற்ப விடுமுறை நாட்களில் கூட அவர்கள் பாடங்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

THIRU. T. VENKATA REDDY: Hon'bl Speaker Sir, we welcome the Hon'ble Minister's suggestion that the present system of byhearting (memorising) by the students is not proper. In countries like America, whenever a Teacher wants to test a boy, he used to conduct an examination then and there. Will the Hon'ble Minister follow that procedure here also thereby discipline and intelligence may be brought out properly?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது இன்டர்னல் அசஸ்மென்ட் என்ற அடிப்படையில் அகமதிப்பீட்டு முறை பற்றியது எனக் கருதுகிறேன். நம்முடைய நாட்டில் அதுவும் ஒருசில இடங்களில் பரிசீலித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் குறைபாடுகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் விரும்பு கின்ற மாணவர்களுக்கு அதிகப்படியான மார்க் போடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வருகின்றது. அவர்கள் விரும்புகிற மாணவர் களுக்கு நிரம்ப மார்க் போட்டுவிடுகிறார்கள் என்ற குற்றச் சாட்டும் இருக்கின்றது. ஆகவே இந்த முறையிலும் சில இடங்களில் கொண்டு வந்து செயல்படுத்திப் பார்த்ததில் இந்த

அக மதிப்பீட்டு முறையினைக் கூட ரத்து செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே தனியாரை வைத்து மதிப்பிடுவது என்பது ஒன்று; சொல்லித் தருகின்ற ஆசிரியர்களே தொடர்ந்து மதிப்பிடுவது என்பது ஒன்று. இந்த இரண்டையும் அடிப்படையாக வைத்து முறையாக மாதா, மாதம் அறிவு வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்பதையும், ஆசிரியர்கள் சரியாகச் சொல்லித் தந்திருக்கிறார்களா என்பதையும், மாணவர்கள் ஒழுங்காகப் படித்திருக்கிறார்களா என்பதையும் சொல்லித் தருகிற வகையில் மதிப்பீடு செய்கின்ற முறை இருக்கவேண்டும் என்ற கருத்துத்தான் இப்போது பலம் அடைந்து வருகிறது.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு முடிவுகள் வருவதற்குக் காலதாமதம் அதிகமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே அதைப் போக்குகின்ற வகையில் தேர்வு முடிவுகள் உடனுக்குடன் வருவதற்கான வகையில் அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வுகளைப் பொறுத்தவரையில் அந்த முடிவுகள் முறையாக வருகின்றன என்பதோடு மட்டுமல்ல; சில ஆண்டுகளில் முன்னதாகவே அறிவிக்கக்கூடிய வகையில் ஆண்டுக்காண்டு முயற்சிகளை எடுத்து வருகிறோம். அதாவது இரண்டுநாள், மூன்று நாள் முன்னதாகவே முடிவுகள் வருகின்ற வகையில் முயற்சி களை எடுத்து வருகிறோம்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியிலே இயல்பாக இருக்கின்ற கல்வி ஆர்வத்தை உணர்ந்து அவர்களுக்கு எத்தகைய துறையில் ஆர்வம் இருக்கிறதோ அத்தகைய துறையில் கல்வியினை அவர்களுக்குக் கொடுக்கிற முறையிலே அதாவது மதிப்பீடு செய்து மார்க் போடு கின்ற முறைக்குப் பதில் சோஷலிஸ்ட் நாடுகளில் உள்ளது போல் மாணவர்களின் அறிவுக் கூர்மையை வளர்க்கின்ற வகையில் சோஷலிஸ்ட் நாடுகளில் கல்வி முறையினைப் போன்ற பொருத்த மான கல்வி முறையினை உருவாக்கக்கூடிய வகையில் கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அரசு அமைக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமான ஆய்வுகளை என்.சி.ஆர்.டி. போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகின்றன. அந்த ஆய்வுப் பணிகளை வைத்துத்தான் மத்தியஅரசும், மாநில அரசும் இதுபற்றிய சில முடிவுகளை மேற்கொண்டு இருக்கின்றன. சோஷலிஸ்ட் நாடுகளில் உள்ளதுபோன்ற கல்வி முறையினை இங்கேயும் கொண்டுவருவதில் அபிப்பிராயபேதம் ஒன்றும் இல்லை. அவற்றை எல்லாம் மனதிலே வைத்துத்தான் சிலபல மாற்றங்



களைச் செய்கிறோம். ஆனால் சோஷலிஸ்ட் நாடுகளில் இருப்பது போன்ற கட்டுப்பாடு இங்கே ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் இல்லை என்பதை நாம் உணருகிற நிலையில் சோஷலிஸ்ட் நாடுகளில் இருப்பது போன்று அப்படியே இங்கே கொண்டு வருகிறபோது அது வெற்றி பெறுமா வெற்றி பெறாதா என்பதையும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக் கிறோம்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு என்ற பெயராலே நூற்றுக்கு 90 சதவீதம் மாணவர்கள் பின்தங்கிவிடுவார்கள் தமிழகத்தில். அதனால் தமிழ் நாட்டில் மாணவர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. எனவே அதை மனதில் கொண்டு மற்ற மாநிலங்களில் பின்பற்றப்படுகின்ற வழியினை நம்முடைய அரசும் பின்பற்றுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1977-க்கு முன்னாலே இருந்ததை விட இப்போது அதிக சதவீதம் மாணவர்கள் தேறிக்கொண்டு வரு கிறார்கள். எனவே 90 சதவீதம் பேர் ஃபெயில் ஆகிவிடுகிறார்கள் என்பது சரியல்ல. நிறையப்பேர் தேறுகிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி குறிப்பிட்ட சில பள்ளிகளில் 100-க்கு 90 பேர் ஃபெயில் ஆகக் கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அந்தப் பள்ளி சரியாக நடக்கவில்லை என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்குத் தேவையான காரியங்களை நாம் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மைய அரசினுடைய கல்விக் கொள்கையை வெளியிட்டிருக் கிற இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நாடு முழுவதுமே ஒரே பாடதிட்டம், ஒரே தேர்வுமுறை என்ற ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்களே, அதைத் தமிழகத்தில் அமல்படுத்துவதற்கு ஏதாவது வழிவகை வைத்திருக்கிறார்களா? கல்வியின் தரத்திற்கு ஆசிரியர்களே பொறுப்பேற்க வேண்டும் என்று அமெரிக்கா நாட்டில் இருக்கும் முறை போன்று தமிழகத் திலும் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தாங்கள் செய்கிற பணிகளுக்கு ஒரு அக்கவுண்டபிலிட்டி அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்து கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான திட்டங்களை மைய, மாநில அரசுகள் எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கல்விமுறை பற்றிச்

சொன்னார்கள். புதிய கல்விக் கொள்கை ஒரேமாதிரியான கல்வி முறை இருக்கவேண்டும் என்று சொல்வது பொதுவான சில முறைகளில் அதாவது 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்று சொல்வது தமிழ்நாட்டில் ஒரு மாதிரியாகவும் பஞ்சாபில் ஒரு மாதிரியாகவும் இருந்தால் இங்கிருந்து மாணவர்கள் அங்கு போய் படிக்கவோ அல்லது அங்கிருந்து மாணவர்கள் இங்கு வந்து படிக்கவோ ஒரே நாட்டில் ஒரே மாதிரியான கல்விமுறை இருக்கவேண்டுமென்று சொல்லி 1968, அதற்கு முன்னால் எல்லாக் கமிஷன்களுமே அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த யூனிபார்மிட்டி என்ற அடிப்படையில் அதை ஒழுங்காக நிறைவேற்றிக்கொண்டிருக்கிற அரசாங்கம் தமிழ்நாடு அரசாங்கம்தான். ஆனால் சில மாற்றங்களோடு மற்ற மாநிலங்களில் செய்திருந்தாலும் ஒரே மாதிரியான கல்வி முறை என்று சொல்லும்போது நம் மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளுக்கேற்ப இங்கு பாடத்திட்டங்கள் அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரத்தோடு செய்கிறோம். இங்கே ஒருவிதமான கணக்கு, பஞ்சாபில் ஒருவிதமான கணக்கு என்று சொல்லித்தர முடியாது. கணக்கு என்றால் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். விஞ்ஞானம் என்றால் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். பூகோளம் என்றால் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஏறக்குறைய ஆங்கிலம் என்றால் கூட ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் நிலை தான். சரித்திரம், மொழி இவைகளில் மாறுபாடுகள் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பள்ளிக் கூடங்களில் தேர்வு விகிதங்கள் குறைவாக வருவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்ற அரசுப் பணிகளில் இருக்கிற அரசாங்க ஊழியர்கள் எல்லாம் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஒரேயிடத்தில் வேலை பார்க்கக்கூடாது என்ற விதி இருக்கும்போது ஆசிரியர்கள் மட்டும் 15, 20 ஆண்டுகள் ஒரே பள்ளிக்கூடத்தில் பணியாற்றுகிற ஒரு சூழ்நிலை உண்மையில் கல்வித் தரத்தைக் கெடுக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படியென்றால் மற்றத் துறைகளைப் போல் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குமேல் ஒரு ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றக்கூடாது என்ற நடைமுறையை கல்வித் துறையிலும் அரசு பின்பற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களிடமிருந்தும் மற்ற பொது மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் வந்து கொண்டுதானிருக்கின்றன. ஆசிரியர்கள் ஒரேயிடத்தில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அங்கே முறையாக எதுவும் நடைபெறுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதைப்பற்றி ஆராய்ந்து அதற்குத்தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.



திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளம் வயது குழந்தைகள் படிக்கும்போது அவர்கள் பெயிலாகிவிட்டால் மறுபடியும் வர்களுக்கு பள்ளிக்கூடங்களுக்குப் போக மனம் வருவதில்லை. ஆதலால் ஐந்தாம் வகுப்பு வரை குழந்தைகளை பெயிலாக்காமல் பாஸாவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா? மேலும் மேல்நிலைப் பள்ளிகளில், எஸ்.எஸ்.எல்.ஸி. வரை உள்ள பள்ளிக்கூடங்களில் பெர்சென்டேஜ் ஆப் மார்க்ஸ் அதிகம் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஆசிரியர்களே பரீட்சை எழுதும்போது அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதாவது கேள்விகளுக்கான பதில் களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மூன்றாவது வகுப்பு வரை பரீட்சை நடத்துவார்கள். ஆனால் அதில் பெயில் பண்ணுவதில்லை. சிறு குழந்தைகளை அப்படிச் செய்யக்கூடாது, அப்படிச் செய்தால் ட்ராப் அவுட்ஸ் அதிகமாகி விடுகிறது, சிலபேர்கள் நின்றுவிடுகிறார்கள், அது ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து படிக்காமல் இருக்கச் செய்கிற நிலைமையை ஏற்படுத்துகிற காரணத்தால் மூன்றாவது வகுப்புவரை வைத்திருக்கிறோம். அதற்கு மேல் அதைக் கொண்டு வருவதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. இதையே கூட நாம் இன்னும் சிந்தித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால், மூன்றாவது வரை பெயிலாக்குவதில்லை என்றால், பாடத்தை ஒழுங்காக நடத்த வேண்டியதில்லை என்ற ஒரு நிலைமை சிலயிடங்களில் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் அதையே மறு பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு நிலைமை வந்திருக்கிறது. தேர்வு நடக்கும்போது பல்வேறு நிலைகளில் ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்ற புகார்கள் வந்ததன் அடிப்படையில் பறக்கும் படை என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி திடீரென்று பரீட்சைகள் நடைபெறும் இடங்களுக்குப் போய் அங்கே தவறுகள் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அதனால் ஓரளவு அமைதியாக பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாச்சார முறைப்படி ஆசிரியர்கள் பணியில் இல்லை என்ற காரணத்தால் கல்வியின் தரம் குறைந்திருப்பதாக ஆசிரியர்கள் மத்தியிலிருந்து ஏதாவது அரசாங்கத்திற்கு குறைபாடு வந்திருக்கிறதா? அதை நிவர்த்தி செய்வதற்காக அரசு என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

பாளையங்கோட்டையில் பல்கலைக்கழகம்

144–(*வினா எண். 4893) திரு.ஆர்.எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டையில் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக, நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு முடிந்து விட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9.30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வியினுடைய வளர்ச்சி அதிகமாக இருந்தாலும் கூட, குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கல்வியின் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. அவ்வாறு இருந்தபோதிலும், அந்தப் பகுதியிலே இதுவரை பல்கலைக்கழகம் அமைக்கப்படவில்லை. இப்போது பல்கலைக் கழகம் அமைக்கப்படயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்போது செயல்படத் துவங்கும்? அவ்வாறு தொடங்கப்படும் பல்கலைக் கழகத்திற்கு விடுதலை வீரர் வாஞ்சிநாதன் பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருநெல்வேலியில் முதுகலை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான இடத்தைப் பார்த்து, அந்த இடத்திலே தேவையான கட்டிடங்களைக் கட்டி, அதை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்போது பல்கலைக்கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கிடையே பாரதிதாசன் பல்கலைக்கழக விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருநெல்வேலியிலே பல்கலைக் கழகம் நிறுவ இருக்கிறோம் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, திருநெல்வேலி பொறியியல் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள 826.28 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்த வேலைகள் ஒரு பக்கம் நடைபெறுகின்றன. அந்த அடிப்படையிலே இந்த மையம் ஒரு உயர்ந்த அளவிற்கு எஸ்டாப்ளிஷ் ஆக வேண்டும். நல்லமுறையிலே, சிறந்த முதுகலை விரிவாக்க மையத்தின் அமைப்பு உயர்வடைகின்றபோது, அதையே பல்கலைக்கழகமாக மாற்ற இருக்கிறோம்.

அரசு பேருந்துகளில் விளம்பரங்கள்

145—(*வினா எண். 3005)—திரு.எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பேருந்துகளில் விளம்பரம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: (அ) சேரன், தீரன்சின்னமலை, கட்டபொம்மன், நேசமணி,
மருதுபாண்டியர், பாண்டியன், ஆகிய ஒன்பது போக்குவரத்துக்
சோழன், ஜீவா மற்றும் அண்ணா பேருந்துகளில் மட்டும் விளம்பரம்
கழகங்களினால் இயக்கப்படும் எஞ்சியுள்ள நான்கு போக்கு
செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. பேருந்துகளில் விளம்பரம்
வரத்துக் கழகங்களில் இயக்கப்படும்
செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

(ஆ) ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் விளம்பரம் செய்
வதற்காக ஒப்பந்தக்காரரை நியமிக்கிறது. விளம்பர ஒப்பந்தக்
காரர் பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு என நியமிக்கப்படுகிறார்.
விளம்பரம் செய்வதற்கான கட்டணத் தொகையின் விவரங்கள்
சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் குழுவின்
அங்கீகாரம் பெறப்படுகிறது.

திரு. கூ.ப்பர் டி. வி. வேலு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே உள்ள பட்டுக்கோட்டைப்
போக்குவரத்துக் கழகம், பெரியார் போக்குவரத்துக் கழகம்,
அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய போக்குவரத்துக்
கழகங்களில் இதுபோன்ற விளம்பரங்கள் இல்லை. எனவே,
தனியார் விளம்பரப்படுத்தக் கூடாது என்று அரசு
முடிவெடுத்திருக்கின்ற காரணத்தினால், அரசாங்க விளம்பரத்தில்
குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரத்தை அரசு விளம்பரப்படுத்த
ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
இந்தக் குடும்பக் கட்டுப்பாடு விளம்பரத்தைப் பொறுத்தவரையில்,
இது எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் கடைபிடிக்கப்
பட்டு வருகிறது. ஆனால், தனியார் விளம்பரத்தைப் பொறுத்த
வரையில் இந்த எஞ்சியுள்ள 4 போக்குவரத்துக் கழகங்கள் தவிர
எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் இதை நடைமுறையில்
வைத்துக் கொண்டிருக்கின்றன.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அரசுப் பேருந்துகளில் திருக்குறள் எழுதப்பட்டி
ருக்கிறது. திருக்குறள் படித்தவர்களுக்கே பொருள் விளக்கம்
தெரிவதில்லை. ஆகவே, பொருள் விளக்கத்தையும் எழுத அரசு
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே!
திருக்குறள் எழுதப்பட்டிருப்பது விளம்பரத்திற்காக அல்ல.
விளம்பரத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. அது வேறு கேள்வி,
இது வேறு கேள்வி. குறளைப் படித்து, அதற்குப்பின் அதனுடைய
பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அது
எழுதப்பட்டிருக்கிறது.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்பொழுது,
விளம்பரம் செய்வதற்கு தனியார்கள் எஞ்சியுள்ள நான்கு
போக்குவரத்துக் கழகங்களில் அனுமதிக்கப்படுவதில்லை என்று
குறிப்பிட்டார்கள். நம்மிடத்திலே 13 போக்குவரத்துக் கழகங்
களுக்கு மேலாக இருக்கின்றன. அரசுத் துறையில் ஒரு விளம்பரப்
பிரிவை ஏற்படுத்தி, அதன் மூலம் விளம்பரம் செய்ய அரசு
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
இப்போது அரசு சம்பந்தமான விளம்பரங்களை நாம் செய்கி
றோம். ஆனால், தனியார் விளம்பரங்களைப் பொறுத்தவரை
அரசாங்கம் ஏற்றுக் கொள்வது என்பது சரியாக இருக்காது.
போக்குவரத்துக் கழகங்கள் ஒழுங்காக, சிறப்பாக நடக்க
வேண்டுமென்று நினைக்கும்போது, இது போன்ற சிறிய சிறிய
பிரச்னையை அரசாங்கம் எடுத்துக் கொண்டால், அதற்கு
வேறு வேலையே இருக்காது. இந்த வேலையைத்தான்
கவனிக்க வேண்டியிருக்கும்.

திரு. கு. அப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில்
சென்னையிலிருந்து தூத்துக்குடி செல்லும் வழித்தடத்தில் திரைப்
பட பேருந்துகள் விடப்படுகின்றன. ஆனால், முக்கியமான வழித்
தடங்களில் திரைப்படப் பேருந்துகள் சில நல்ல முறையில் விடப்
படுகின்றன. நல்ல முறையில் ஓடிக் கொண்டிருக்கின்றன.
இன்னும் இருக்கின்ற சில முக்கியமான தடங்களிலும் திருவள்ளுவர்
பேருந்துகளை, திரைப்படங்களோடு விடுவதற்கு அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
முன்பே இது சம்பந்தமாக கேள்வி அவையில் கேட்கப்பட்டது.
அப்போது இது குறித்து அதிகமாகவே பேசியிருக்கிறோம்.
தற்போதுள்ள கேள்வி விளம்பரம் சம்பந்தப்பட்டது. திரைப்
படம் இதில் அடங்காது.

திரு. கா. செ. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பேருந்து
களில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு தனியாக இடத்தை
ஒதுக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது
மிக நல்ல கேள்வி. முக்கியமான கேள்வியும் கூட. 2 ஆயிரம்
3 ஆயிரம் செலவு செய்து வண்ணம் பூசிய பிறகு, இந்தச்
சுவரொட்டிகளை சுற்றி சுற்றி ஒட்டி விடுவதால், அதிகமாக
பாதிப்பு உண்டாகிறது. ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர்கள் இதில் அதிகமாக ஒத்துழைப்புக் கொடுத்தால், அவை
களைச் சரியாக வைத்திருக்க முடியும். ஆகவே தற்போது



பேருந்துகளின் பின்புறமாக ஒரு இடத்தை ஒதுக்கி வைத்து
விட்டால், யார் யார் ஒட்ட வேண்டும் என்று நினைக்கிறார்களோ
அவர்கள் குறிப்பிட்ட அளவு, ஒரு குறைந்த கட்டணத்தைச்
செலுத்திவிட்டு, அதற்கான அனுமதி அளிக்கும் வகையில் அதைக்
கொண்டு வரலாமா என்று நினைக்கிறோம். எல்லா அரசியல்
கட்சிகளும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தால் இந்தப்
பிரச்னையைத் தீர்த்து விட முடியும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, போக்கு
வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 9 தலைவர்களின்
பெயரால் பேருந்துக் கழகங்கள் இயக்கப்பட்டு, பேருந்துகள்
ஓடிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தத் தலைவர்
களுடைய பெயர் மட்டும்தான் அந்தப் பேருந்துகளில் எழுதப்
பட்டிருக்கிறது. அவர்களுடைய உருவப்படத்தையும் எழுதி
(குறுக்கீடு) பெரியார், சேரன் செங்குட்டுவன், திருவள்ளுவர்
போன்றவர்களின் உருவப் படத்தையும் எழுதினால் பிற்காலத்தில்
வருபவர்கள் அந்தத் தலைவர்களைப்பற்றி அறிந்து கொள்ள
அது வாய்ப்பாக இருக்கும். எனவே அதைச் செய்ய அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது
விளம்பரம் சம்பந்தப்பட்ட மூலக் கேள்வி. தவிர தலைவர்
களுடைய படத்தையெல்லாம் எழுதி வைப்பதை, விளம்பரம்
என்ற முறையில் நாம் எடுத்துக் கொள்வதற்கில்லை.

டாக்டர் ரே. சமரசம் : தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்
களின் பதிலில் 9 போக்குவரத்துக் கழகங்களில் விளம்பரங்களை
எடுத்து வருவதாகவும், 4 போக்குவரத்துக் கழகங்களில் மட்டும்
விளம்பரங்களை எடுப்பதில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.
அதற்குக் காரணம் என்ன ? இதுவரையில் விளம்பரங்களை மேற்
கொண்டதால் அந்தப் போக்குவரத்துகளின் மூலம் அரசுக்கு
கிடைத்த லாபம் எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள்
தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு
ஆண்டிற்கு சுமார் 18½ லட்சம் ரூபாய் என்ற வீதத்திலே இந்த 9
போக்குவரத்துக் கழகங்களிலும் வருமானம் வந்திருக்கிறது. 4
போக்குவரத்துக் கழகங்களிலே, திருவள்ளுவர் போக்குவரத்துக்
கழகம் விளம்பரமே வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறது,
காரணம் அது தொலைதூரப் பேருந்துகள். சென்னையைப்
பொறுத்த வரையில் சென்னையிலே ஏறக்குறைய 3 ஆயிரத்துக்
கில்லரை பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதிலே
எல்லாப் பேருந்துகளிலும் விளம்பரம் செய்தால், அதுவும்
அவைகள் குறிப்பிட்ட இடங்களிலேயே அதிகமாக சுற்றி சுற்றி
வந்து கொண்டிருப்பதால், அது பார்ப்பதற்கு அவ்வளவு நல்ல
முறையில் இருக்காது என்ற காரணத்தால் தவிர்க்கப்பட்
டிருக்கிறது. ஆகவே தான் சென்னையை நோக்கி அதிகமா

வருகிற பேருந்துகளிலும் இந்த விளம்பரம் வேண்டாம் என்று முடிவு செய்திருந்தோம். என்றாலும் இப்போது அதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்லக்குடி—கொளத்தூர் சாலையில் பாலம்.

146—(*வினா எண் 3871) திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தில் கல்லக்குடி, கொளத்தூர் சாலையில், கல்லக்குடி அருகில் உள்ள ஆட்டான் ஓடையில் சருக்கு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திருச்சிக்கு படுக்கை வசதி கொண்ட பேருந்துப் பணி.

147—(*வினா எண் 4001) திரு. எம். குருசாமி என்கிற அண்ணா தாசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சார்பில் படுக்கை வசதி கொண்ட பேருந்து ஒன்றை விடுவதற்கான திட்டம் அரசுக் குறிப்பில் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

போக்குவரத்துக் கழகங்களில் சாதனை ஊக்கத் தொகை.

148—(*வினா எண் 4234) திரு. ஜெ. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் ஊக்க போனஸ் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) தொழில் அமைதி நிலவ ஒத்துழைப்பு கொடுப்பதையும், திறம்பட வேலை செய்ததையும் மெச்சி போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஊழியர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலண்டர் ஆண்டிற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை சாதனை ஊக்கத் தொகையாக கடந்த சில ஆண்டுகளாக தகுதிக்கேற்ப அளிக்கப்பட்டு வருகிறது.



திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, வேலை செய்பவர்களிடத்திலே ஊக்கம் கிடைப்பதற்காக, அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியில் சிறப்பாக நல்ல முறையில் வேலை செய்வதற்காக கொடுப்பதுதான் ஊக்கபோனஸ் என்று சொல்வது. ஆனால் நமது போக்குவரத்துக் கழகங்களில் வேலை நிறுத்தத்திலே ஈடுபடாதவர்களுக்கு மட்டும் என்று சொல்லி ஒரு தனியான போனஸ் கொடுப்பது என்கிற முறை இருக்கிறது. அது அவர்களுடைய தொழிற்சங்க உரிமைகளை பாதிக்கும்படியான முறை. அத்தோடு தொழிலாளர்களிடையே மன எரிச்சலையும், பிளவை உண்டாக்கும் நிலைமையையும் இது ஏற்படுத்துவதாக அவர்கள் நினைக்கமாட்டார்களா? ஆகவே அந்த நிலையில் அரசு இதனை ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன்?

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சாதனை ஊக்கத் தொகை என்பது சாதனையைச் செய்ததற்காக கொடுக்கப்படுகிறது. சாதனையை எதிர்காலத்தில் புரிவதற்காக அல்ல. எனவே அந்தத் தொகையை கொடுக்கிறபோது, பேருந்துகள் முறையாக ஒழுங்காக நிறுத்தப்படாமல் இயங்கினால்தான் அந்த சாதனையை ஏற்படுத்த முடியும். அப்படி பேருந்துகள் இடையில் நிறுத்தப்படுகிறபோது அந்த சாதனை புரிவதற்கு வாய்ப்பு இல்லை. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நாம் ஒன்றும் கொடுக்காமல் இல்லை. போராட்டம் செய்வதற்கு என்று சில சட்ட திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறைப்படி செய்யாமல் திடீரென்று வண்டியை குறுக்கே நிறுத்திவிடுவது போன்று, இப்படி புறம்பாக செய்யப்படுகிற சில இடங்களில் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எனவே இந்தச் சாதனையை செய்வதற்கு இடையூறாக இருக்கிற, மற்ற தொழிலாளர்கள் பணிபுரிவதற்கு இடையூறாக இருக்கிற இடத்திலே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. பிளவு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கம் எப்போதும் இல்லை. இதன் மூலமாக ஒற்றுமையைக் கூட ஏற்படுத்துகிற முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜெ. ராஜாபாபு: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் அரசு தவணை முறையில் வீடுகளைக் கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க இயலும்.

திரு. வி. தங்கவேலு: தலைவர் அவர்களே, போக்குவரத்து கழகங்கள் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் பன்னிரெண்டு இருக்கின்றன. இவற்றில் நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், ஓட்டுநர்கள் நடத்துநர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? அவர்களுக்கு ஊக்க போனஸ் வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது மொத்தம் 13 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. 1—4—1986—லிருந்து இன்னொரு போக்குவரத்துக் கழகம் வரவிருக்கிறது. ஆகவே 14 போக்குவரத்துக் கழகங்கள் ஆகும். இப்போது அந்தத் தொழிலாளர்களில் யார் யார் எந்த மதத்தை, ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கணக்கு சொல்ல இயலாது. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் போக்குவரத்துக் கழகங்களில் ஊக்க போனஸ் வழங்கப்படுகிறதா என்பதைப் பற்றியதாகும். எனவே அது சம்பந்தமாகத்தான் சொல்ல முடியும். ஆகவே உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்படுகிற ஊக்க போனஸ் அப்ரெண்டிஸ் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகிறதா? அதைப் போல அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரே மாதிரியாக ஒரே முறையில் இந்த ஊக்க போனஸ் வழங்கப்படுகிறதா அல்லது ஒவ்வொரு கழகத்திற்குமிடையே அது வேறுபடுகிறதா என்று, அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்ரெண்டிஸ் முறையில் இருப்பவர்களுக்கு இப்போது இந்த ஊக்க போனஸ் வழங்கப்படுவதில்லை, இது எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே முறையில் இங்கே தான் முடிவெடுத்து கொடுக்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களை ஆரம்பித்து பொதுமக்களுக்கு கூடுதல் வசதிகளைச் செய்து கொடுக்கிற நோக்கத்தை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசில் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களின் இடையே இருக்கிற அரசியல் சார்புடைய தொழிற் சங்கங்களின் காரணமாக அங்கே பல பிரச்னைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே ஒரு அரசு நிறுவனம் என்ற முறையில் அரசியல் சார்புடைய தொழிற் சங்கங்கள் இருப்பதால், அதன் காரணமாக பல பிரச்னைகள் எழுவதால். அவைகளை அரசியல் சார்பு இல்லாமல் ஆக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே: இதிலே சில சிக்கல்களை நாம் சந்திக்கவேண்டியிருக்கிறது என்றாலும், இது அவர்களின் சுதந்திரம் என்ற முறையில் அது இருக்கிறது. அதனை நம்மால் தடுக்க முடியாது, தடை செய்யவும் கூடாது. அவர்களுக்கு நியாயங்களை எடுத்துச் சொல்லி, அமைதியை ஏற்படுத்தி எந்தவித போராட்டமும் இல்லாமல் ஆறு வருடங்



களாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செயல்பட்டு வருகிறது என்பது எல்லோரும் அறிவார்கள், எனவே தடைச் செய்கிற நோக்கம் அரசிற்கு இல்லை.

திரு. சோ. கலிதீர்த்தான்: தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மலைவாசி மக்கள், நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் போன்றவர்களை சலுகைகள் அளித்து பணியில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது சேர்ந்தவர்கள் பற்றிய பிரச்னை. சேரப்போகிறவர்களின் பிரச்னையை பின்னாலே பார்க்கலாம். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

சென்னை புறநகர் பகுதியில் இரும்பு சாமான்கள் அங்காடி.

149—*(வினா எண் 2120) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை நகருக்கு வெளியே (லாரி போக்குவரத்தை நகருக்குள் விடாமல் கட்டுப்படுத்துவதற்காக) இரும்பு எஃகு சாமான்களை விற்பதற்காக மார்க்கெட் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் ஏற்படுத்த அரசு எண்ணியுள்ளது?

(இ) அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) ஒரு இடம்.

(இ) சாத்தாங்காடு கிராமத்தில் சுமார் 203 ஏக்கர் நிலப் பரப்பில் இருப்பு எஃகு மற்றும் இரும்புச் சாமான்கள் மொத்த அங்காடி ரூ. 14 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஆரம்ப கட்ட வேலையாக மண் பரிசோதனை நில அளவை போன்ற வேலைகள் துவங்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காக வரைபடம் இறுதியாக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல், சாலை அமைத்தல் போன்ற வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன. 1988 மத்தியில் இத்திட்டம் முடிவு பெற்று அங்காடி இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி, தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சென்னை மாநகரத்தில் இருக்கிற காயலான் கடைகள் பழைய இரும்பு உதிரிச்

சாமான்கள் விற்பனையாளர்கள் ஆகியோருக்கு மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல ஆட்டோ நகர் அமைக்கப்படுமா என்று கேட்ட பொழுது, நல்ல யோசனை பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். அந்த ஆட்டோ நகரில் பழைய, புதிய வாகனங்களுடைய உதிரி பாகங்களை விற்பனை செய்கின்ற கடைகளை அமைக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்திற்கு முன்னாலே, அரசு இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. காரணம் இந்தப் பகுதிக்கு, சாத்தாங்காடுப் பகுதிக்கு இந்த இரும்பு வியாபாரிகள் செல்ல இருக்கின்ற காரணத்தால், அங்கே இரும்பு சம்பந்தப்பட்ட துணை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களையும், அந்தப் பகுதியின் பக்கத்திலே கொண்டுவருவதிலே எந்தத் தவறும் இல்லை. இருந்தாலும் எந்த இடம் என்ற முடிவை அரசு இன்னும் எடுக்கவில்லை. இந்தக் கருத்தை மனதிலே கொண்டு அரசு உதவுகின்ற தன்மையோடு, பரிசீலனை செய்யும்.

திரு. செ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, சென்னை நகரில் உள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கு, சாத்தாங்காடுப் பகுதிக்கு ஒட்டுமொத்தமாக இரும்பு மொத்த வியாபாரத்தைக் கொண்டு செல்ல இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தச் சாத்தாங்காட்டில் அமைய இருக்கின்ற மொத்த வியாபாரத்தினுடைய பகுதியை ஏற்கனவே குறைந்த விலையிலே அரசு ஆர்ஜிதம் செய்து, கடைக்காரர்களுக்கு அதிகமான விலைக்கு இடத்தைக் கொடுப்பதாக நாங்கள் அறிகிறோம். எனவே இதைப் பரிசீலித்து, கூடுமானவரையில் குறைந்த விலையில் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு குறிப்பிட்ட விலைக்கு வெளியிலேயிருந்து வாங்கியிருக்கிறது. மொத்தம் 203 ஏக்கர்கள் இருக்கின்றன, அதிலே 137 ஏக்கர் அரசு நிலம். மற்றத் துறைகளிலே உள்ள நிலங்கள் எல்லாம் இதிலே இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக எவ்வளவு மதிப்பீடு என்று கணக்குப் பார்த்து, அதை கிட்டத்தட்ட 750 இரும்பு வியாபாரிகள் கேட்டிருக்கிறார்கள், அவைகளை எல்லாம் அனுசரித்து, ஒட்டு மொத்தமான விலையை அரசு முடிவு செய்யும்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்த மொத்த இரும்பு வியாபாரம் நடக்கின்ற மார்க்கெட்டினுடைய மொத்த வேலை 1988 மத்தியிலே முடிவு அடையும். அதற்குப் பிறகுதான் பணிகள் அங்கே துவங்கும் என்று சொன்னார்கள்.



ஆனால் 1988 வரையிலும் சென்னையிலே உள்ள முக்கியமான சாலைகளிலே, நெரிசல் அதிகமாகிவிடும் என்ற காரணத்தாலே, இந்த லாரிகளினாலே பல விபத்துக்கள், சென்னையிலே உள்ள அண்ணா சாலை, ராஜாஜி சாலை போன்றவற்றில் ஏற்படுவதால், ஏதாவது குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, இத்தகைய சாலைகளில் தான் இவைகள் வரவேண்டும் என்ற அளவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நேரிடையாக தொடர்பு இல்லாவிட்டாலும், சென்னையிலே பஸ், லாரி போன்ற வாகனங்கள் அதிகமாக உள்ளே வருவதற்கு அனுமதித்தால், இங்கே நகரத்திலே இருக்கிற போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஆகிவிடுகிற காரணத்தால், ஏற்கனவே ஆலந்தூர், மாதவரம், கோயம்பேடு போன்ற 3 இடங்களை தனிப்பட்ட வகையில் பஸ், லாரிகள் நிறுத்துவதற்காக இந்த இடங்களை ஏற்பாடு செய்கின்ற அடிப்படையிலே, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, கோயம்பேடு பகுதியில் வேலைகள் இப்போது துவங்கி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

மேலூர் தொகுதியில் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள்.

150 (*வினா எண் 2326) திரு. பெ. வீராணம்பலம்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி கிராமங்களில் அரசு ஊழியர் குடியிருப்புக் கட்ட ஏதேனும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தியாகிகளுக்கு வீடுகள்.

151 (*வினா எண் 4526) திருமதி த. இராஜம்மாள்: மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1974-ம் ஆண்டிற்குப் பிறகு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாக தியாகிகளுக்கு வீடு ஒதுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் தற்போது மிகவும் முதிய நிலையில் இருக்கிறார்கள். அதைக் கருத்திலே கொண்டுதான், சமீபத்திலே மத்திய அரசு இந்த தியாகிகளுடைய பென்சனை உயர்த்தியது. 1974-க்குப் பிறகு இது போன்ற தியாகிகளுக்கு வீடுகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கேள்வியை அடிப்படையாக வைத்து, மீண்டும் அந்தத் தியாகிகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, அடுத்த 5 ஆண்டுகளுக்காவது அரசு ஒதுக்கித் தருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் திருநகரைப் பொறுத்தவரையில், குடிசை வாசிகளை ஒட்டுமொத்தமாக ஒரு குறிப்பிட்ட இனமாகத்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. காரணம், குடிசை வாசிகளுக்கு இடம் அளிக்க வேண்டும் என்ற அந்தத் தன்மையை மனதிலே கொண்டு அதற்காக உருவாக்கப்பட்ட தனித் தன்மைவாய்ந்த அமைப்பாக இது இருக்கிற காரணத்தால், இதிலே மற்றப் பிரிவைச் சேர்த்தால், நடைமுறைக்கு ஒத்துவருவதற்கு, வாய்ப்பு இல்லை. குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், யார் குடிசைகளில் இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் வீடு தருகிறோமே தவிர, மற்ற ஜாதி, இன வேறுபாடு எல்லாம் பார்ப்பதில்லை.

(முற்பகல் 9-50)

டாக்டர் த. மாதிலகமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசைமாற்று வாரியத் திட்டம் தற்போது பெரிய நகரங்களில்தான் திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதை அறிகிறேன். எனவே, இப்படிப்பட்ட திட்டத்தை தாலூகா தலைநகரங்களுக்கு விரிவுபடுத்தக் கூடிய திட்டம் அரசின் குறிப்பில் இருக்கிறதா? அதோடு மட்டும் அல்லாமல் இந்த குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலமாக கட்டுகின்ற கட்டடங்கள் பல அடுக்கு கட்டடங்களாக கட்டுகிறார்கள். ஏழைகள், சிறுவர்கள், வியாதிஸ்தர்கள், வயோதிகர்கள் அதில் ஏறுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே பல அடுக்கு மாடி கட்டடங்களாக கட்டுவதற்குப் பதிலாக ஒரு அடுக்கு கட்டடம் கட்டினால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலும் இதில் ஏழைகளும், சிறுவர்களும், வியாதிஸ்தர்களும் ஏறுவது கஷ்டமாக இருக்காது என்ற காரணத்தினாலும் இதை மனதில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சின்ன வீட்டில் நாட்டம் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வீட்டிலும் சிறுவர்கள் இருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கேள்விகளை இணைத்து கேட்டு இருக்கிறார்கள். முதலில் சென்னைப் பெரு நகரில் குடிசைமாற்று வாரியத் திட்டம் துவக்கப்பட்டது. அது 1970-லே துவக்கப்பட்டு அதற்குபிறகு 1983-லே திருச்சி, ஈரோடு போன்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டு இப்போது 43 இடங்களில் குடிசைமாற்று வாரியப் பணிகள் துவங்கப்பட்டு இருக்கின்றன. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சின்ன வீட்டில் ரொம்ப அக்கறை காட்டிக்கொண்டு கேட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே ஆதி திராவிடர்களுக்கு நாட்டோட மூலமாக பல திட்டங்கள் மூலம் சிறிய வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. ஆகவே குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் தற்சமயம் 43 இடங்களில் அதிலும் சில திட்டங்களின் மூலம் சிறிய அளவில் இப்படிப்பட்ட வீடுகள் இப்போது கட்டப்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் காத்து இருக்கிற இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக வீடுகள் ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முதல் கேள்விக்கு பதில் அளிக்கும் போது தெளிவாக பதில் அளித்து இருக்கிறேன்.

கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்

152—(*வினா எண் 1637) திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் போலி கையெழுத்திட்டு நேர்முக தேர்வுக்கு கார்டுகளை அனுப்பி மோசடி செய்வதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கு. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து அனுப்பியது போல் மனுதாரர்களின் விபரங்கள் கொண்ட போலியான பட்டியல் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சில அரசு அலுவலகங்களில் பெறப்பட்டதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கவனத்திற்கு கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கொண்டு வந்தார். இதன் தொடர்பாக காவல் துறையினருக்குப் புகார் கொடுக்கப்பட்டு கடலூர் மாவட்ட

வேலைவாய்ப்பு அலுவலகப் பணிக்காப்பாளர். அதன்படி 19-3-1985 அன்று அவரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கு தொடர்பாக கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக காவலர் மற்றும் 2 வெளிநபர்களை காவல் துறையினர் கைது செய்து இருக்கிறார்கள். கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக காவலர் கைது செய்யப்பட்டு இருப்பதை ஒட்டி இவர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரால் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். இந்த வழக்கு காவல் துறையின் புலன் விசாரணையில் இருக்கிறது.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் போலி கையெழுத்திட்டு நேர்முக அழைப்பு கொடுத்ததாகவும் தவறு செய்தவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்ததாகவும், அவர்கள் மேல் வழக்கு தொடரப்பட்டு இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வழக்கு தொடரப்பட்டு விடுதலை ஆனால் மீண்டும் அவர்கள் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவார்களா? அல்லது நிரந்தரமாக வேலையிலிருந்து நீக்கப்படுவார்களா? அல்லது [illegible] நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கு. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுகளை கண்டுபிடித்து செய்கின்றபோது சம்பந்தப்பட்ட துறையினர் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். வழக்குகளின் மீது நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் பொதுமக்கள் நாங்கள் படித்தவர்கள், எங்களுக்கு சீனியாரிட்டி இருக்கிறது. எங்களுக்கு இண்டர்வியூ கார்டு வரவில்லை, எங்களுக்கு ஒரு லெட்டர் எழுதிக் கொடுங்கள் ஒரு நேர்முகத் தேர்விற்கு வாய்ப்பு கொடுக்கச் சொல்லி ஒரு லெட்டர் எழுதிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நாங்களும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் லெட்டர் எழுதிக் கொடுக்கிறோம். ஆனால் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்கள் சீனியாரிட்டிப்படி தான் கார்டு அனுப்புவோம் என்று சொல்லி நாங்கள் எழுதிக் கொடுத்த லெட்டரை கிழித்துப் போட்டு விடுகிறார்கள். ஆனால் எங்களைப் பார்ப்பதற்குப் பதிலாக அவர்களைப் பார்த்து விட்டால் சீனியாரிட்டி இல்லாமலேயே இண்டர்வியூ கார்டு வருகிறது. இதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மாநில அளவில் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் இங்கே [illegible] ஆணை



வினாவை எழுப்பியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற பரிந்துரைக் கடிதங்களை எல்லாம் தமிழக வேலை வாய்ப்புத் துறையைச் சார்ந்தவர்கள் கிழித்துவிடுகிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை. இருந்தாலும் கூட தவறுகளை யார் செய்வதாக இருந்தாலும், அதற்கேற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தூத்துக்குடியில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வீடுகள்**

153.—(*வினா எண் 3456) திரு கு. ரமணி: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு 2,000 வீடுகளைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு மத்திய அரசு தருகிற நிதி உதவி எவ்வளவு?

(இ) எப்பொழுது வீடுகள் கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. இராமசாமி: (அ) தூத்துக்குடி மாப்பிள்ளையூரணியில் 1,000 வீடுகள் மட்டும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1,000 வீடுகள் கட்டுவதற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கும்.

(இ) 1,000 வீடுகள் கட்ட மைய அரசு கொள்கை அளவில் இசைவு தந்துள்ளது. இதற்கான ரூ. 90.68 இலட்சத்திற்கான மதிப்பீடு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு அவர்களின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த வீடுகளைக் கட்டுவதற்கான மதிப்பீடு தயார் செய்து, அரசுக்கு அனுப்ப எவ்வளவு காலமாகிறது? எவ்வளவு காலத்திற்குள் இந்த வீடுகள் கட்டப்படும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கு. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 வீடுகள் கட்டவேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்கு தெரிவித்திருந்தாலும்கூட, அகதிகள் குடியமர்த்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில், முதல் கட்டமாக 100 வீடுகள் ரூ. 10 இலட்சம் செலவில் மாநில அரசு மத்திய அரசு நிதியை எதிர்பார்த்து—100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 100 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஓராண்டிற்கு முன் அனுப்பப்பட்ட மதிப்பீட்டின்படி, இன்னும் 900 வீடுகள் கட்டுவதற்கான அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, இப்படி குடிபெயர்ந்து வந்து, இங்கே நிரந்தரமாக வாழ வேண்டியவர்கள், வீடு கட்டிக் கொடுக்கப்படாமல், அவர்களுக்கு குடியிருப்பு, தொழில் மற்ற வசதிகள் இல்லாமல், குடியிருக்கவும் முடியாமல் பல பகுதிகளில் சென்று திரிந்துகொண்டு ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். இது தமிழகத்தில் நமக்கு பெரிய பிரச்சினையாகும். இது தமிழகத்தினுடைய பொருளாதாரப் பிரச்சினையாக இருந்து வருகிறது என்பதை அரசு அறியுமா? இப்படி எத்தனை பேர்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்முறையால் பாதிக்கப்பட்டு, தமிழகத்திற்கு வருகிற நம்முடைய இலங்கைச்சகோதரர்கள், தாய்மார்கள் எல்லாம் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்படவேண்டுமென்ற தலையாய நோக்கத்தோடு, மிகுந்த அக்கறையோடு, அவசர அவசரமாக இந்த அரசு பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. அவர்கள் இராமேஸ்வரத்தில் வந்திறங்கியவுடன் குடியமர, 1,400 வீடுகளைக் கட்ட மத்திய அரசுக்கு தெரிவித்து, 200 வீடுகள் உடனடியாக கட்டப்பட்டு, அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். 500 வீடுகள் கட்டப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்படாமலும், 700 வீடுகள் கட்டுமானப் பணிகளிலும் இருந்து வருகிறது. அதற்காக ரூ. 2,11,50,000 ஒதுக்கீடு செய்து, அந்த வேலைகள் வேகமாக நடந்து வந்து, அவர்கள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். மண்டபத்தில் ஏற்கனவே இருந்த 726 பழையவீடுகளில் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற 146 அகதிகள் முகாம்களில், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வருகின்ற எல்லா சகோதரர்களுக்கும், தாய்மார்களுக்கும் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக வன்முறையால் வந்த அகதிகள் எந்த இடத்திலேயும் முகாமை விட்டு விட்டு இருப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சே. பாலாஜி: தலைவர் அவர்களே, இப்படி தாயகம் திரும்பிய தமிழர்கள் என்னுடைய தொகுதியிலே களக்காட்டூர் என்ற கிராமத்திலும் முரசவாக்கம் என்ற கிராமத்திலும், விவசாயப் பணிகளில் கூலியாக கிட்டத்தட்ட 200 குடும்பங்கள் பணிசெய்கிறார்கள். அவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது, 1964-லே சாஸ்திரி—பண்டா ஒப்பந்தத்தின் அடிப்படையிலே



தமிழகத்திற்கு வந்தவர்களா? அல்லது இனக் கலவரத்தாலே பாதிக்கப்பட்டு தமிழகத்திற்கு வந்தவர்களா? என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. இனக்கலவரத்தாலே தமிழகத்திற்கு வந்தவர்கள் முறையாக குடியமர்த்தப்பட்டு, பாதுகாக்கப் பட்டு வருகிறார்கள். ஒப்பந்த அடிப்படையிலே வருகிற நம்முடைய சகோதரர்களுக்கு, அரசினுடைய உதவியைக் கொடுத்துத்தான் அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலாஜி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் என்னுடைய தொகுதியான மொரப்பூர் தொகுதியிலே 150-க்கு மேற்பட்ட அகதிகள் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் எந்த வேலைவாய்ப்பும் இல்லாமல், அரசாங்கம் மானியம் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். நண்பர் பாலாஜி அவர்கள், அவர்கள் கூலி வேலைக்குச் செல்கிறார்கள் என்று சொன்னார். என் தொகுதியில், கூலி வேலைக்குக் கூட செல்லாத நிலை இருக்கிறது. பக்கத்தில் இருக்கிற பொதுஜனங்களுக்குக்கூட, அவர்கள் குடியமர்த்தப்பட்டது,சிரமமாகவும், தொல்லையாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது அதற்கு மாற்று ஏற்பாடு செய்து, வேலை வாய்ப்பு அளித்து அந்த அகதிகளுக்கு ஒரு வழி காணமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மூத்த, மதிப்பிற்குரிய உறுப் பினர் அவர்கள் அகதிகள் சம்பந்தமான ஒரு துணைக் கேள்வியை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தப் பகுதியில், இனக் கலவரத் தாலே பாதிக்கப்பட்டு வந்த நம்முடைய இலங்கைச் சகோதரர்கள் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கான உதவிகளை, 5 பேர் கொண்ட குடும்பம், அதாவது 3 பெரியவர், 2 சிறுவர்கள் என்று இருந்தால், மாதம் ஒன்றுக்கு, ஒரு கட்டமாக ரூ. 357.50 வழங்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி 57 பைசாவுக்கு மானியத்திலே கொடுக்கப்படுகிறது. இது தான் அவர்களுக்கு அரசு உதவியாகச் செய்து கொண்டிருக்கிறது. 400 ரூபாய், 600 ரூபாய் அளவுக்கு பாத்திர வசதி, மற்ற வசதிகள் செய்யப் படுகிறது. அந்தந்த கிராமத்திலே உள்ள பெரியவர்கள், நல்ல உள்ளம் கொண்டவர்கள், சகோதரர்கள் தினக்கூலி என்ற அடிப் படையில் வேண்டுமானால் உதவிகள் செய்யலாமே தவிர, அரசினுடைய அதிகாரத்தின் அடிப்படையில் எந்த விதமான வேலைவாய்ப்பும் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். காரணம், அங்கே சுமுகமான சூழ்நிலை உருவானதிற்குப் பிறகு அவர்கள் அந்த நாட்டுக்கு பாதுகாப்பான நிலையில் முறையாக அனுப்பி வைக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தண்ணீர் தான் வருகிறது. ஆகவே அந்தப் பகுதி விவசாயத்திற்கும் குடிநீருக்கும் கஷ்டப்படுகிற பகுதியாகும். இந்தத் திட்டம் ஏற்கனவே காங்கிரஸ் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு உள்ளது. மீதிப் பரிசீலனையையும் செய்து கோவில்பட்டிப் பகுதிக்கு நீர்ப்பாசனத்திற்கும், குடிநீருக்கும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் அறிந்த உண்மை, நானும் அறிந்த உண்மை என்னவென்று சொன்னால், கோவில்பட்டியைப் பொறுத்த மட்டிலும் அங்கே தாமிரபரணியிலிருந்து குடிநீர் எடுத்து தண்ணீர் வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தக் கிரியாறு திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இது மேற்குநோக்கிப் பாயும் கிரியாறாகும். ஆகவே, அதை இந்தப் பக்கம் திருப்ப வேண்டும் என்றால், கேரளஅரசின் கருணாகடாட்சம் தமிழகத்தின் பக்கம் திரும்ப வேண்டும். அதைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் நடவடிக்கையெடுத்தால் நிச்சயமாக இந்த அரசு நன்றியுள்ளதாக இருக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு அந்தத் தண்ணீரால் எந்தப் பயனும் இல்லை. அங்கே அது வேஸ்டாகப் போகிறது. ஆகவே, கேரள அரசைப் பார்த்துப் பேசி நம்முடைய பகுதிக்குத் தண்ணீரை திருப்பினால் வசதியாக இருக்கும். நிச்சயமாக எங்களைப் பொறுத்தவரையில் கேரள அரசோடு முயற்சித்து தாங்கள் செய்கிறோம், அத்துடன் அரசும் இதற்கான முயற்சியைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. நன்றி என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

ஒரத்துப் பாளையம் அணை.

157—(*வினா எண் 4823) திரு. க. ச. பழனிச்சாமி: மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் ஒரத்துப் பாளையத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையினால் பெரியார் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: நொய்யலாற்றில் ஒரத்துப் பாளையம் அணையில் கட்டப்படும் திட்டத்தினால் பெரியார் மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.



திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மண்ணரை மற்றும் அணைப்பாளையம் அணைகளினுடைய மட்டத்தை மேலும் உயர்த்தி, கிடைக்கக்கூடிய உபரி தண்ணீரை அதிகமாகத் தேக்கி, சென்னிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த மேட்டுப் பகுதிகளுக்கு அதிகப் பாசனம் அளிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா? ஆமெனில் இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த மிகக் குறைந்த பகுதி நிலம்தான் இத்திட்டத்தின் வாயிலாகப் பாசன வசதி பெறுவதை உணர்ந்த அரசு, மாண்புமிகு உறுப்பினரவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட மண்ணரை நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றி—நீர்ப் பாசனத் திட்டத்தைப்பற்றி ஆய்வு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. தேவையாயின் அந்த முறையில் ஆய்வுகளை துரிதப்படுத்த இப்பொழுது உத்தரவிடப்படும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்பு.

உறுப்பினர் திரு. வை. பாலச்சந்திரன் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி நேற்று (26–1–1986) பெறப்பட்டது:

பத்மநாபபுரம் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள், திக்கனாங்கோடு நெல்லி முந்தம்மன் கோவில் பகுதியில் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை மீறி ஊர்வலமாகச் செல்ல முயன்றதால் 26–1–1986 ஆம் தேதியன்று காலை 9·40 மணியளவில் குழித்துறை காவல்துறை ஆய்வாளரால் கைது செய்யப்பட்டார் என்ற தகவல் வரப் பெற்றுள்ளது என பேரவைக்கு அறிவிக்கிறேன்."

திரு த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களை குடியேற்றுகின்ற போது, மாவட்ட வாரியாக ஒரு குறிப்பிட்ட இடத்திலே 100 குடும்பங்கள்; 200 குடும்பங்கள் என்று குடியமர்த்தப்படுகிறார்கள். அப்படி ஒரு கிராமத்திலே திடீரென்று 150 குடும்பங்கள், 200 குடும்பங்கள் என்று குடியமர்த்தப்படுகிறபோது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. பொதுவாக, அவர்களுக்கு அன்றாடம் தேவையான வசதிகளைக் கூட செய்து கொடுக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி அவர்களைக் குடியேற்றுகின்ற நிலை ஏற்படுகிற போது, ஒரு கிராம பஞ்சாயத்துக்கு 5 குடும்பங்கள், 10 குடும்பங்கள் என்று பரவலாக குடியேற்றினால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு, மற்ற வசதிகள் கிடைக்கும். இதைக் கருத்திலே கொண்டு, அரசு அதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய மாவட்டங்களில், கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம், சென்னை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களைத் தவிர, 16 மாவட்டங்களில், 146 மையங்களில், முகாம்களில் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஒரு முகாம் என்று வருகிற போது, 25 குடும்பங்களுக்கு மேல் அங்கு இல்லை. 25 குடும்பங்கள் என்ற அளவில் தான் இருப்பார்கள். அதற்கு மேல் எந்த இடத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. நேற்று கூட, வடஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், ஜெயபுரம், வாணியம்பாடி ஆகிய பகுதிகளை நான் சுற்றிப் பார்க்கும் போது, 15, 20 குடும்பம் என்ற அடிப்படையிலே தான் இருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக ஒரே இடத்தில் 100, 200 குடும்பங்கள் வைக்கப்படவில்லை. நமது சட்டமன்ற உறுப்பினர்களும், நண்பர்களும், ஆங்காங்கு இருக்கக்கூடிய முகாம்களிலே இருக்கக்கூடிய அகதிகளைப் பரிவோடு பார்த்து-கேள்விகளை எழுப்புவதோடு மட்டும் அல்லாமல்-உதவிகளையும் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### விபத்துக்குள்ளாகும் பனையேறும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை

154—(* வினா எண் 3662) டாக்டர் தே. குமாரதாஸ் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனையேறும் தொழிலாளர் விபத்தில் மரணம் அடைந்தால் அவர்களுக்கு வழங்கப்படும் தொகையை அவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் ஏதேனும் பணம் கட்டி வருவார்களேயானால் அந்தப் பணத்துடன் இணைந்து உதவித் தொகையை வழங்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்த்து விபத்துக்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை முழுவதும் அரசு செலுத்த முன்வருமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பனையேறும் தொழிலாளர்களுடைய வேலை மிகவும் ஆபத்தான வேலை. அந்தத் தொழிலாளர்கள் கஷ்டத்துடன் தான் ஜீவனம் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணம்முறையாகக் கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. அவர்களுக்கு இப்போது 5 ஆயிரம் என்று அளிக்கப்படும் தொகையை, 10 ஆயிரம் என்று ஆக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திருமதி. விசயலட்சுமி பழனிச்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி என்னிடத்தில் இப்போது விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்,

### ராணுவத்துறைக்கு கதர் விற்பனை

155 (* வினா எண்- 5839) திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கதர்த்துறைக்கு ராணுவத்திற்காக ஆர்டர்கள் தற்போது கிடைக்கிறதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : ஆம்

திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர்த் துறைக்கு இராணுவத் துறையிலிருந்து ஆர்டர்கள் வருகின்றன என்று சொன்னார்கள், எவ்வளவு கோடி ரூபாய்க்கு அந்த ஆர்டர்கள் வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 2.45 லட்சம் செலவில் குறிஞ்சி குளியல் சோப்புகள் கேட்டு பம்பாய் கதர் ஆணைக் குழு மூலமாக தேவை நமூனா பெறப்பட்டுள்ளது.

திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத் துறையிலிருந்து ஆர்டர்கள் பெறும் வாய்ப்பு தமிழ்நாடு கதர்த்துறையிலே நிரந்தர வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்குரிய வளமான ஒன்று என்பதால் கதர்த் துறை தொடங்குகிற இம்முயற்சி, துணி வகைகள் இன்ன பிற வகைகளையும் இராணுவத் துறைக்கு அதிகமாக வழங்குகிற முறையிலே அங்கிருந்து ஆர்டர்கள் பெறுவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திருமதி. விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 50 ஆயிரம் சோப்புக் கட்டிகள் டி. ஜி. எஸ். டி. அவர்களால் பார்வையிடப்பெற்று விநியோக்கக்கூடிய தயார்நிலையில் உள்ளன. மீதமுள்ள 50 ஆயிரம் சோப்புக் கட்டிகளும் டி. ஜி. எஸ். டி. அவர்களுடைய பரிசீல்னைக்காக தயார் நிலையில் உள்ளன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணி வகைகளிலேயும் இராணுவத்திற்கு விநியோகம் செய்யக்கூடிய முறையிலே அரசு ஏற்பாடு செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி கதர்த் துறை வாரியம் துணிகள் மற்றும் கிராமப் பொருட்கள் ரகங் களுக்காக இராணுவத்துறையிலிருந்து தேவை நமூனா பெறப்பட வில்லை. அதற்காக முயற்சி செய்யப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கதர்த்துணிக்கு பொங்கல் விழாவின்போது 40 சதவீதம் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. 20 சதவீதம் மட்டுமே அறிவிக்கப் பட்ட கைத்தறித்துணிக்கு வானொலி மூலமாக விளம்பரம் செய்யப் பட்டது. ஆனால் கதர்த் துணிக்கு வானொலி மூலமாக விளம் பரம் செய்யப்படவில்லை. எனவே கதர்த் துறைத் துணிகளுக் கும் அதை வானொலி மூலமாக விளம்பரம் செய்து விற்பனையை பெருக்குவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, செய்தித்தாள்களிலே நாம் கதர்த் துணிகளுக்கான விளரம்பரங்களைப் போடுகிறோம். வானொலியில் விளம்பரம்செய் யாததற்கு காரணம் நிதி வசதி போதுமானதாக இல்லாதது தான் அதனால் தான் செய்தித்தாள்களிலே மட்டும் போடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர், ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷமருந்துகளைக் குடித்து தமிழகத்திலே பல்வேறு கிராமங்களிலே இறந்து விடுகிறார்கள். அப்படி இறந்தவர்களின் குடும்பத்திற்கு 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வேண்டாம்.



திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கம்பெனிகள் தயாரிக்கின்ற சோப்புகளுக்கு நல்ல முறையிலே விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால் கதர்த் துறையால் செய்யப்படுகிற இந்த சோப்புக்கு விளம்பரம் நல்ல முறையிலே கிடையாது. தனியார் கம்பெனிகள் மூலம் செய்யப் படுகிற சோப்புகளுக்கு சைட் ரீல், நியூஸ் ரீல் மாதிரி எடுத்து படமாக விளம்பரம் செய்கிறார்கள். அதைப் போல கதர்த் துறை தயாரிக்கும் சோப்புகளுக்கும்விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? கதர்த்துறை மானியத்தின் மீது விவாதம் நடை பெறும் போது எம்.எல்.ஏ.க்களுக்கு அந்த சோப்புகளை கொடுத் தால் அது எப்படி இருக்கிறது என்று பார்த்து சொல்லமுடியும். விளம்பரத்திற்காக அவர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எம். எல். ஏ.க்கள் எல்லாம் குறிஞ்சி சோப்பைஅதிக விலை கொடுத்து வாங்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்திருக் கிறேன், நிதி வசதியைப் பொறுத்து தான் விளம்பரம் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்ற உறுப் பினர்களுக்கு எல்லாம் அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன். கதர்கிராம வாரியத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் குறிஞ்சி சோப்புக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நல் ஆதரவைக் கொடுத்து அதையெல்லாம் விளம்பரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓரியாறு திட்டம்.

156-(*வினா எண். 4107)—திரு. ஆர். ரெங்காசமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவில்பட்டி, சங்கரன்கோவில் தாலுக்காக்களிற் நீர்ப்பாசன வசதிக்கென ஓரியாறு திட்டத்தை செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாற்றப்படும்?

(இ) திட்டத்தின் மதிப்பென்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைக் தலைவர் அவர் களே, கோவில்பட்டிப் பகுதியிலே மழையே கிடையாது. தோண்டினால் தண்ணீர் வராது. தண்ணீர் வந்தால் உப்புத்

தண்ணீர் தான் வருகிறது. ஆகவே அந்தப் பகுதி விவசாயத்திற்கும் குடிநீருக்கும் கஷ்டப்படுகிற பகுதியாகும். இந்தத் திட்டம் ஏற்கனவே காங்கிரஸ் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு உள்ளது. மீதிப் பரிசீலனையையும் செய்து கோவில்பட்டிப் பகுதிக்கு நீர்ப்பாசனத்திற்கும், குடிநீருக்கும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் அறிந்த உண்மை, நானும் அறிந்த உண்மை என்னவென்று சொன்னால், கோவில்பட்டியைப் பொறுத்த மட்டிலும் அங்கே தாமிரபரணியிலிருந்து குடிநீர் எடுத்து தண்ணீர் வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தக் கிரியாறு திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இது மேற்குநோக்கிப் பாயும் கிரியாறாகும். ஆகவே, அதை இந்தப் பக்கம் திருப்ப வேண்டும் என்றால், கேரளஅரசின் கருணாகடாட்சம் தமிழகத்தின் பக்கம் திரும்ப வேண்டும். அதைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் நடவடிக்கையெடுத்தால் நிச்சயமாக இந்த அரசு நன்றியுள்ளதாக இருக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு அந்தத் தண்ணீரால் எந்தப் பயனும் இல்லை. அங்கே அது வேஸ்டாகப் போகிறது. ஆகவே, கேரள அரசைப் பார்த்துப் பேசி நம்முடைய பகுதிக்குத் தண்ணீரை திருப்பினால் வசதியாக இருக்கும். நிச்சயமாக எங்களைப் பொறுத்தவரையில் கேரள அரசோடு முயற்சித்து நாங்கள் செய்கிறோம், அத்துடன் அரசும் இதற்கான முயற்சியைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. நன்றி என்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை.

ஓரத்துப் பாளையம் அணை.

157—(*வினா எண் 4823) திரு. க. ச. பழனிச்சாமி: மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் ஓரத்துப் பாளையத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையினால் பெரியார் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: நொய்யலாற்றில் ஓரத்துப் பாளையம் அணையில் கட்டப்படும் திட்டத்தினால் பெரியார் மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.



திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மண்ணரை மற்றும் அணைப்பாளையம் அணைகளினுடைய மட்டத்தை மேலும் உயர்த்தி, கிடைக்கக்கூடிய உபரி தண்ணீரை அதிகமாகத் தேக்கி, சென்னிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த மேட்டுப் பகுதிகளுக்கு அதிகப் பாசனம் அளிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா? ஆமெனில் இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த மிகக் குறைந்த பகுதி நிலம்தான் இத்திட்டத்தின் வாயிலாகப் பாசன வசதி பெறுவதை உணர்ந்த அரசு, மாண்புமிகு உறுப்பினரவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட மண்ணரை நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றி—நீர்ப் பாசனத் திட்டத்தைப்பற்றி ஆய்வு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. தேவையாயின் அந்த முறையில் ஆய்வுகளை துரிதப்படுத்த இப்பொழுது உத்தரவிடப்படும்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்பு.

உறுப்பினர் திரு. வை. பாலச்சந்திரன் கைது செய்யப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி நேற்று (26–1–1986) பெறப்பட்டது;

பத்மநாபபுரம் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள், திக்கனாங்கோடு நெல்லி முத்தம்மன் கோவில் பகுதியில் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை மீறி ஊர்வலமாகச் செல்ல முயன்றதால் 26–1–1986 ஆம் தேதியன்று காலை 9·40 மணியளவில் குழித்துறை காவல்துறை ஆய்வாளரால் கைது செய்யப்பட்டார் என்ற தகவல் வரப் பெற்றுள்ளது என பேரவைக்கு அறிவிக்கிறேன்."

## 3. தகவல் கோரல்

### (அ) அரசு நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சித் தலைவருக்குரிய இடம் வழங்கப் பெறுதல்

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் சென்னையில் குடியரசு தின அணி வகுப்பு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இருந்தாலும் அந்த அணி வகுப்பிலே எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய இடம் அளிக்கப் படவில்லை. அவரை ஒரு முடுக்கிலே உட்கார வைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டதால் அவர்கள் மிகவும் மனம் வருந்தி விழாவிலேயே கலந்து கொள்ளாமல் திரும்பச் சென்று விடலாமா என்றுகூட நினைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கும் அவைக்கும் சம்பந்தமில்லை. நானே அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து பேசுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையொரு பெரிய பிரச்சனையாக நான் கருத வில்லை யென்றாலும், அதேநேரத்திலே தொடர்ந்து இப்படி நடந்து வருகின்ற நிகழ்ச்சிதான் உள்ளது. சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் விருந்து கொடுத்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய இடம் கொடுக்கப்பட வில்லை. மேலும், இந்தியாவின் மேன்மை தங்கிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் வந்தபொழுதுகூட, விமானம் வரை சென்று அவரை வரவேற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சனையை நான கவனித்துக்கொள்கிறேன். சில நேரங்களில், மீனம்பாக்கத்திலே எனக்கு முன்னாலே எத்தனை பேர் போவார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். ஒருமுறை நம்முடைய அவை முன்னவர் மற்றும் நாங்களெல்லாம் இருந்தபோது, எங்களையும் மீறி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னே சென்று நின்று கொண்டி ருந்தார்கள். There are all minor matter முன்னால் போவதால் பெரிய மனிதன் இல்லை, பின்னால் இருப் பதால் சிறிய மனிதன் இல்லை. (குறுக்கீடு) அதைத் தடுக்க முடிய வில்லை. அவரவர்களாக உணர வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: போவது வேறு, இடம் கொடுப்பது வேறு. எதிர்பாராது நடந்தால் பரவாயில்லை.....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்பாராது அல்ல. ஒரு ஆர்வத்தால் அதையெல்லாம் செய்கிறார்கள், அதையெல்லாம் நாம் ஒன்றும் செய்ய முடிவதில்லை. நேற்று எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்து, அங்கேயே சொன்னேன். அதிகாரிகளைப் பார்த்து, இடம் கொடுங்கள் என்று சொன்னேன். நான் பார்த்துக் கொள்கிறேன்.

### (ஆ) இந்திய மாணவர்கள் சங்க மாநாடு.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான அவசர விஷயத்தைத் தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்கிறேன். பழனி நகரத்தில் இந்திய மாணவர்கள் சங்கத்தினுடைய மாணவர்கள் மாநாடு நடத்துவதற்காக, அவர்கள் கால்நடையாகச் சென்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பும் போது, என்னுடைய அறையிலே வந்து, என்னிடம் என்ன எழுப்பப்போகிறேன் என்று சொல்லிவிட்டு எழுப்பினால் முறை யாக இருக்கும். எனக்கே ஆச்சரியம் ஊட்டக்கூடிய அளவுக்கு இங்கே எழுப்புகிறார்கள். நான் காலை 8·30 மணிக்கே வந்து விடுகிறேன். இன்று 8·20-க்கு வந்து விட்டேன். என்ன எழுப்பப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிய வேண்டும் அல்லவா? ஆகவே, என்னுடைய அறையில் வந்து என்னிடம் சொல்லிவிட்டு எழுப்பினால் நல்லது, இதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்து சொல்லுங்கள்.

### (இ) குழந்தைகளுக்கு அளிக்கப்பெறும் சத்துணவு

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, சென்ற 21–1–1986 அன்று கன்னிவாடி ஆர். சி. பள்ளியில், மதிய உணவு சாப்பிடும்போது, குழந்தைகளுடைய உணவிலே குண்டூசி, மின்கம்பி எல்லாம் இருந்தன. இது அரசினு டைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அந்தப் புகாரை அங்குள்ள தலைமை ஆசிரியர் அவர்களிடம் சொல்லி யிருக்கிறார்கள். டவுன் பஞ்சாயத்து எக்சிகியூடிவ் ஆபீசரிடம் சொல்லியிருக்கிறார்கள். அரிசியிலே, குண்டூசி, மின்கம்பி இருப்பதை ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி முன் அனுமதியின்றி, அவையில் எழுப்பினால் அரசிடமிருந்து பதில் எப்படிக் கிடைக்கும்? எந்த விஷயத்தை எந்த முறையில் எப்போதுசொல்வது என்று இல்லையா?

## 4. அறிக்கை அளித்தல்

### ஆயத் தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் விதி 112—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 24-1-1986 அன்று சட்டப் பேரவையில், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் செல்லுமா என்பது பற்றி, சட்ட நடவடிக்கைகள் குறித்து, தற்போதைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட செயல் நடவடிக்கையைப் பற்றி, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது பற்றிய சரியான நிலை, குறித்து திருத்த அறிக்கை ஒன்றை பேரவை முன் வைக்கிறேன்.

1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர்க் காவற்படைச் சட்டத்தின் (சென்னை மாநகருக்குப் பொருந்துவது) 3 ஆம் பிரிவின் படியும், 1930 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாடுதல் சட்டத்தின் (வெளியூர்களுக்குப் பொருந்துவது) 3 ஆம் பிரிவின் படியும், குதிரைப் பந்தயங்கள் நடத்தப்படும் தேதிகளிலும், குதிரைப் பந்தய வளாகத்திற்குள் இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அல்லது இடங்களிலும், அரசின் ஒப்பளிப்புடன், இந்த மாநிலத்தில் குதிரைப் பந்தயம் நடத்தப் படுவதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டில், 1949 ஆம் ஆண்டு சென்னை மாநகர்க் காவற்படை மற்றும் சூதாடுதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்படும் திருத்தச் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அத்திருத்தச் சட்டத்தின் 2,4 ஆகிய பிரிவுகள், சூதாடுதல் (Gaming) என்பதற்குப் புதிய பொருள் வரையறை ஒன்றைக் கொண்டு வந்தன. இந்தப் பொருள் வரையரையின் விளைவு யாதெனில், குதிரைகள் மீது பந்தயங்கட்டுதல் உள்ளடங்கலாக எந்த வகையைச் சேர்ந்த பந்தயங்கட்டுதலையும் (Betting) அல்லது பணயம் வைத்தலையும் (Wagering) தடை செய்வதாகும். ஆனால் மேற்சென்ன சட்டத்தின் (1), (2)—ஆம் பிரிவின்படி, இந்த வகைமுறைகள், அரசு அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வரவேண்டும். அரசு, மேற்சொன்ன பிரிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதை ஒத்திப்போடுவதென்று அப்போதைச்கப்போது முடிவு செய்தது. சட்டத்தின் 2,4 ஆகிய பிரிவுகள், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு குதிரைப் பந்தயங்கள் (பணயம் வைத்தல் அல்லது பந்தயங் கட்டுதல் ஒழிப்பு) சட்டத்தினால் 31-3-1975 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டன. ஆயினும் சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கமும் திரு. எஸ். சத்தியமூர்த்தி என்பவரும் மேற்சொன்ன சட்டங்கள் செல்லாதவை என்று கூறி சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் (நீதிப் பேராணை) மனுக்களைத் தாக்கல் செய்தனர். உயர்நீதி





மன்றம் சில கருத்துரைகளுடன், இந்த ரிட் மனுக்களைத் தள்ளுபடி செய்தது. மேல் முறையீடு செய்துகொள்வதற்கு அனுமதி பெற்றதற்குப் பின்பு சென்னை குதிரைப் பந்தயச் சங்கமானது சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. 20-11-75 அன்று உச்சநீதி மன்றம், ரிட் மனுக்கள் 2353/75 ஆகியவற்றில், 2701/75 சென்னை உயர்நீதிமன்றம் 22-9-1975 அன்று பிறப்பித்த ஆணைகள் மீது தடையாணை பிறப்பித்ததோடு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு குதிரைப் பந்தயங்கள் (பணயம் வைத்தல் அல்லது பந்தயங் கட்டுதல் ஒழிப்பு) சட்டத்தினால் 31-3-1975 முதல் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்ட, 1949-ஆம் ஆண்டு சென்னை மாநகர்க் காவற்படைச் சட்டம் மற்றும் சூதாடுதல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் VII/1949) செயற்படுவதற்கும் தடையாணை பிறப்பித்தது.

C.M.P. 8165/75 என்ற மனுவில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த தடையாணையை நீக்குவது குறித்த ஆணை வேண்டி உச்சநீதி மன்றத்தில் இந்த அரசு C.M.P. 8949/75 என்ற மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. உச்சநீதிமன்றம் 11-12-1975-ஆம் நாளிட்ட C.M.P. 8949/75-இல், மாநில அரசு தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

(முற்பகல் 10-20)

பிறகு, அரசு, குதிரைகள் மீது பந்தயங்கட்டுவதை ஒழிப்பது என்கின்ற தனது முந்திய முடிவில் உள்ளடங்கிய அல்லது அதிலிருந்து எழுந்துள்ள பிரச்சினைகள், அனுமானங்கள், விளைவுகள் ஆகியவற்றை நோக்க ரீதியாக ஆய்வு செய்வதற் காக டாக்டர் எம். எஸ். ஆதிசேஷையா அவர்கள் தலைமையில் குழு ஒன்றை 16-7—1976-ஆம் நாளிட்ட பல் 1713 என்ற எண்ணிட்ட உள் துறையின் அரசாணையில் நியமித்தது. 1977 சூலை மாதத்தில் அக்குழுவினால் அளிக்கப்பட்ட அறிக்கை ஆராயப்பட்டது. ஆனால் O.A. 15/1975 என்ற மேல் முறையீட்டில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்நோக்கி, முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. ரிட் மேல்முறையீடு விரைவாக, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்காக, உச்சநீதிமன்றத் திலுள்ள தமிழ்நாடு அரசு வழக்குரைஞருக்கு 29-6-1978, 20-3-1979, 12-6-1979, 27-12-1979 ஆகிய நாட்களிலும் அதற்குப் பிறகு காலமுறை தோறும் இந்த அரசினால் நினை வூட்டுகள் அனுப்பப்பட்டு வந்துள்ளன. இறுதியாக, விரைவு மனு ஒன்று, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஆ) கூட்டுறவுத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் விதி 112-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: [1986 சனவரி 27
தலைவர் அவர்களே, திரு. செ. செம்மலை எம்.எல்.ஏ. அவர்கள்
உடுக்குறியிட்ட வினா எண் 753-ன் கீழ் எழுப்பிய துணை
வினாவில், பானாபுரம், அமரகுந்தி, தொளசம்பட்டி ஆகிய மூன்று
இடங்களிலும் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு,
அந்தச் சங்கங்களுடைய தலைவர்கள் மற்றும் நிர்வாகஸ்தர்கள்,
செய்த தவறுகளின் காரணமாக அவைகள் "லிக்குடேட்" செய்யப்
பட்டு, பக்கத்தில் உள்ள சங்கங்களோடு அது இணைக்கப்பட்டு
உள்ளது. அது "ஏரியா ஆப் ஆப்பரேஷன்" என்று வருகிறபோது
கிட்டத்தட்ட 10 கி.மீ. சென்றுதான் இந்தப் பகுதியினுடைய
விவசாயிகள் அந்த சங்கங்களுடைய சேவைகளைப் பெற வேண்டும்
என்கிற ஒரு சூழ்நிலை இருப்பதால்,அந்த விவசாயிகளுடைய நன்மை
கருதி, இந்தப் பகுதியில் மீண்டும் அந்தந்தப் பகுதியில் அந்தந்த
சங்கங்கள் அமைக்கின்ற அந்த வாய்ப்பு இருக்கிறது. எனவே,
அந்த இடங்களில் மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்து
வதற்கு அமைச்சர் அவர்கள் இனிமேலாவது பரிசீலிப்பார்களா
என கேட்டார்கள்.

அதற்குப் பதிலளிக்கையில் அந்த 3 கூட்டுறவுச் சங்கங்களும்
கலைக்கப்பட்டு, தற்போது அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள்
பக்கத்தில் இருக்கிற விவசாயச் சங்கங்களில் சேர்ந்து கடன்
போன்ற சேவைகளைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்
என்றும், இப்போது புதிதாக மறுபடியும் கூட்டுறவுச் சங்கங்
களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு சங்கத்தை
ஏற்படுத்துவதற்கு 3000 ஏக்சர் விஸ்தீரணம் உள்ளதாகவும், 2
இலட்சம் ரூபாய் லேவாதேவி செய்கின்ற வாய்ப்பு, அந்தச்
சங்கத்திற்கு இருக்க வேண்டும் என்றும், எனவே அரசு இதை
கருத்தில் கொண்டு, அந்த 3 இடங்களில் எந்த இடத்தில் அமைக்க
முடியுமோ அந்த இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்று
என்னால் தெரிவிக்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால், மேற்படி 3 இடங்களில் இந்த கூட்டுறவுச் சங்கங்கள்
நிர்வாக சீர்கேட்டினால் கலைக்கப்பட்டு, அமரகுந்தி மற்றும்
தொளசம்பட்டி ஆகிய இரு சங்கங்களின் உறுப்பினர்களிடமிருந்து
அச்சங்கங்களுக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும் வரவேண்டிய
கடன் தொகை அதிகமாக நிலுவையில் உள்ளதாலும், அக்கிராமங்
களில் புதியதாக விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கும்
கேள்வி எழவில்லை என்பதை தற்போது தெரிவித்துக் கொள்
கிறேன்.

## (5) கவன ஈர்ப்புகள்

அ. கோவை, சேலம் மாவட்ட பஞ்சாலைகள் மூடப்பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, கு. ரமணி, ஆர். செங்காளி
யப்பன், வி. பி. சிந்தன், ஜெ. ஹேமச்சந்திரன், ஆ. நடராசன்
பொன்,முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, மு. இராமநாதன்



ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் 5 பஞ்சாலைகள், சேலம் மாவட்டத்தில் ஒரு பஞ்சாலை, கோவையில் பஞ்சாலை இயந்திர தொழிற்சாலை ஒன்று உட்பட 8 தொழிற்சாலைகளில் சுமார் 8000 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலையிழந்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை

**கோவை மாவட்டம் சேலம் மாவட்டத்தில் தற்பொழுது மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளின் விபரங்கள் வருமாறு.**

| வரிசை எண். | ஆலையின் பெயர். | பணி நிறுத்தப் பட்ட நாள் | பாதிக்கப் பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | மூடபட்டுள்ளவை— | | |
| 1. | பத்மா மில்ஸ் லிமிடெட், கோவை. | 25-2-81 | 150 |
| 2. | தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், கோவை. | 8-6-81 | 250 |
| 3. | ஸ்ரீ ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட், கோவை. | 7-8-83 | 650 |
| 4. | ஸ்ரீ ஹரி மில்ஸ் லிமிடெட், கோவை. | 8-4-84 | 657 |
| 5. | வசந்தா மில்ஸ் லிமிடெட், கோவை. | 13-11-84 | 1,352 |
| 6. | ராமகிருஷ்ணா இண்டஸ்ரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 3-9-84 | 400 |
| 7. | மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ரீஸ், லிமிடெட், மேட்டூர் அணை. | 16-7-85 | 2,500 |
| 8. | பவானி மில்ஸ் லிமிடெட், கோவை. | 2-10-85 | 486 |
| | மொத்தம் | .. | 6,454 |

மேலே கூறப்பட்ட ஆலைகளில் வரிசை எண் 1 முதல் 5 வரை உள்ள ஐந்து ஆலைகளும் நலிவுற்ற ஆலைகளாக உள்ளன. மேலும் நிதி நெருக்கடியில் உள்ளன. இவ்வாலைகளை மீண்டும் திறப்பது பற்றிய பிரச்சனையை விவாதிக்க 12-6-1985 மற்றும் 13-6-1985 அன்று என் முன்னிலையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் நிருவாகங்கள், தொழிலாளர்கள், நிதி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கைத்தறி நெசவுத் துறை இயக்கு நரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஸ்ரீ ஹரி மில்ஸ், ஸ்ரீ ஜனார்த்தனா மில்ஸ் மற்றும் வசந்தா மில்ஸ் ஆலைகள் தொடர்பாக மீண்டும் நான், தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) ஆகியோர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன்.

கோவை, வசந்தா மில்ஸ் லிமிடெட் ஆலையைப் பொறுத்த வரை சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர்(நிருவாகம்) முன்னிலையில் 14-9-1985 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப் பந்தப்படி 3-10-1985 முதல் ஆலையில் உற்பத்தியைத் துவக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆலையைச் சுத்தப்படுத்தும் பணி 18-9-1985 முதல் துவக்கப்பட்டாலும் வங்கிகளிடமிருந்து நிருவா கத்தினால் நிதி உதவி பெற இயலாததால் ஆலையில் உற்பத்தியை துவக்கவில்லை. ஆலையை மீண்டும் இயக்கிடல் குறித்து மேற் கொண்டு முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட் ஆலையைப் பொருத்த வரை ஆலையை பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்தி தொடர்ந்து இயக்குதல் (viable) பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க அமைக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித் துள்ளது. இந்நிலையில் ஆலை நிர்வாகம் சமர்ப்பித்துள்ள புதிய பிரேரணைகள் (New Propos ls) மீது ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிபுணர் குழு கோரப்பட்டுள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீ ஹரி மில்ஸ் லிமிடெட் ஆலையைப் பொறுத்தவரை இந்த ஆலை தமிழ்நாடு ரிலீப் அன்டர்டேக்கிங்ஸ் (ஸ்பெஷல் புரொவி ஷன்ஸ்) சட்டத்தின் கீழ் ஒரு நிவாரண நிறுவனமாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஆலைக்குத் தேவையான நிதியை வங்கிகளிடமிருந்து பெற நிர்வாகம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிகிறது. இதன் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், மற்றும் பத்மா மில்ஸ் லிமிடெட் ஆகிய இரு ஆலைகளும் நிரந்தரமாக மூடப்பட்டவை களாகக் கருதலாம்.

மேற்கண்ட 5 ஆலைகளில் வசந்தா மில்ஸ் லிமிடெட் ஆலையைத் தவிர, மற்ற 4 ஆலையில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 200 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. வசந்தா மில்ஸ்



லிமிடெட் ஆலை தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேட்டூர் டெக்ஸ்டைல் இன்டஸ்டிரிஸ் லிமிடெட், மேட்டூர் அணை: இவ்வாலையில் சுமார் 2,500 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வாலை தற்பொழுதைய நிர்வாகத்தால் (ருக்மணி மில்ஸ் குரூப்) 1-1-1983 முதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆலையில் இயந் திரங்கள் சரியாக உபயோகிக்கப்படுவதில்லை. தொழிலாளர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை என தொழிலா ளர்கள் தரப்பில் புகார் கூறப்பட்டதின்பேரில் தனித் துணை ஆணையர் பல சுற்று பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டதின் பய னாக 11-10-1984 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் ஒப்பந்தப்படி இயந்திரங்களை இயக்குவதிலும் சிக்கன சீரமைப்பு பற்றிய பேச்சு வார்த்தைகளிலும் தேவையான முன்னேற்றம் ஏற் படாமல் இருந்தது.

இந்நிலையில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பொதுக் கோரிக் கைகளுக்காக 16-7-1985 முதல் ஈடுபட்ட பொது வேலை நிறுத்தத் தில் இந்த ஆலைத் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். நிர்வாகம் 16-7-1985 முதல் கதவடைப்பு செய்தது. கதவடைப்பு விலக்குதல் மற்றும் இதர நிலுவையிலுள்ள பிரச்சனைகளில் தனித் துணை ஆணையரால் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு சுமுக உடன்பாடு ஏற்படவில்லை. நிர்வாகம் நிதி நெருக்கடியில் உள்ளது. மேலும் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு சட்டப்படி செலுத்தவேண்டிய பணிக்கொடை, இ.பி.எஃப்., இ.எஸ்.ஐ. போன்ற நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்தாமல் உள்ளது.

இதற்கிடையில் ஆலையின் தன்மை பற்றி ஆராய்ந்து அதைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் இயங்கச் செய்வதற்கு உண் டான சாத்தியக் கூறுகளை கண்டறிந்து பரிந்துரைக்க அரசு ஆணை எண் 2593, நாள் 19-12-1985-ன்படி ITCOT என்னும் நிறுவனத் திடம் இப்பணியை அரசு ஒப்படைத்துள்ளது. இது தவிர நிர்வாகம் Indi n Overseas B nk, Centr l B nk of India and B nk of Madur Limited ஆகிய வங்கிகள் மூலம் ரூ. 75 லட்சம் நிதியுதவி கோரி அதற்கு அரசு உத்தரவாதம் (Gove nmen Gu rantee) கோரி விண்ணப்பித்துள்ளது. இந்த ஆலையைத் திறக்க அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

பவானி மில்ஸ் லிமிடெட், கோவை: இந்த ஆலையில் சுமார் 486 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஆலையில் கோன் வைண்டிங் பிரிவு தொழிலாளர்கள் கோரிக்கை களின் பேரில் 17-9-1985 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நிர்வாகம் 2-10-1985 முதல் கதவடைப்பு செய்தது, இதனால் ஆலையில் பணிபுரியும் 486 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள னர். சென்னை தொழிலாளர் துறை தனித்துறை ஆணையர் இப் பிரச்சனையில் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார். அடுத்த பேச்சுவார்த்தைகள் 23-1-1986 அன்று நடைபெற உள்ளது.

இராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ் லிமிடெட், கோவை: இந் நிறுவனத்தில் சுமார் 400 தொழிலாளர்கள் பணிபுரிகின்ற னர். நிர்வாகப் பங்குதாரர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக ஆலையில் 3-9-1984 முதல் வேலை தடைப்பட்டது. இப்பிரச்சினை கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் மற்றும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் தலையிட்டு ஒரு சுமூக உடன்பாடு ஏற்படவில்லை. இந்த நிறுவனம் தொழிலாளர் பிரச்சனையால் மூடப்படவில்லை. கம்பெனிகள் மனுவின் மீது உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி இந் நிறுவனம் தற்பொழுது அபிசியல் லிக்விடேடாரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிறுவனத்தை திறந்திட சாத்தியக்கூறுகளை பரி சீலிக்க 2-1-1986 அன்று நான் அரசு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். இது பற்றிய முடிவு விரைவில் எடுக்கப்படும்.

அரசு ஆணை எண் 90, தொழிலாளர் துறை,நாள் 10-1-1986-ல் மூடப்பட்டுள்ள துணி ஆலைகளை மீண்டும் திறப்பது பற்றிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளது. ஆணையர் மற்றும் செயலர், நிதித்துறை, தொழில்துறை, தொழி லாளர் துறை, கைத்தறி, துணிகள் மற்றும் காதித்துறை ஆகியோர் இக்குழுவில் உள்ளனர். இக்குழு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலிருந்து மூடப் பட்டிருக்கிற தொழிற்சாலைகளின் நிர்வாகங்கள் அவற்றைத் திறந்து நடத்துவதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறும் இல்லை என்பது தெரிகிறது. மேலும் தமிழ்நாடு பஞ்சாலைத் தொழி லாளர்கள் அனைத்துச் சங்கப் போராட்டக் குழுவிடம் மத்திய நிதி அமைச்சர் அவர்களும், மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மத்திய ஜவுளி துணை அமைச்சர் அவர்களும் மாநில அரசு குஜராத் பாணி திட்டம் ஒன்றை வரைந்து கொண்டு மத்திய அரசை அணுகினால் மேற்கொண்டு 8 தொழிற்சாலைகளையும் திறந்து நடத்த தேவையான நிதி உதவிகளைச்செய்ய மத்திய அரசு முயற்சி செய்யும் என்று அறிவித்திருப்பது தமிழக அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வரைந்து, மத்திய அரசை அணுகி, உதவி பெற்று, மாநில அரசே இந்த 8 தொழிற்சாலைகளையும் ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்க்ள் சொல்வது போல டேல்லிக்கு சென்று மத்திய அமைச்சர்களிடத்திலே அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களும் இதுகுறித்து விவாதித்து பரிகாரம் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்து, அந்த



அடிப்படையில் இரண்டு குழுக்கள் போடப்பட்டு, அரசு ஆராய்ந்து வருகிறது, இன்னும் இரண்டு வாரங்களுக்குள் ஒரு ஸ்திரமான முடிவை இந்த அரசு எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, இந்த 8 தொழிற் சாலைகளும் சேலம் மாவட்டத்திலும் கோவை மாவட்டத்திலும் மூடப்பட்டு பல ஆண்டுகள், பல மாதங்கள் ஆகியும் திறக்கப்பட வில்லை.குறிப்பாக மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்டீரீஸ் லிமிடெட் மூடப்பட்டு, பின்னால் திறக்கப்பட்டு, தொழிலாளர்கள் பல புகார்கள் தெரிவித்தார்கள். அதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இதுபற்றி பலதடவை அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் பொது கோரிக்கைகளுக்காக சுமார் இரண்டு லட்சம் தொழி லாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பித்தபோது இந்த ஆலைத் தொழிலாளர்களும் அதில் கலந்துகொண்டார்கள். நிர்வாகம் கதவடைப்பு செய்தது. பல கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றும் இன்னும் திறக்கப்படவில்லை என்ற நிலையில் 'ரிலீஃப் அண்டர்டேக்கிங் ஆக்ட்' படி இந்த ஆலை நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்து நடத்தலாம். ஊழல் பேர்வழி களாக இருக்கிற அந்த நிர்வாகஸ்தர்களை அப்புறப்படுத்திவிட்டு, மத்திய அரசை வற்புறுத்தி, தேசியமயமாக்கும் உரிமையைப்பெற்று அந்த நிர்வாகத்தை இந்த அரசு ஏற்று நடத்தலாம். அதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல இன்றையதினம் அந்த 8 தொழிற்சாலைகளில் ஏறத்தாழ 8,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூடப்பட்ட அந்தத் தொழிற்சாலைகளைத் திறந்து, இந்த 8,000 தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு கொடுக்க எல்லாவிதமான நடவடிக்கைக்ளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக பத்மா மில்ஸ்,கோவை, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய இரண்டு மூடப்பட்ட ஆலைகள் 1981-ல் இருந்து 5 ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. அதனால் 400 தொழிலாளர்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

நிர்வாகத்தை நடத்துவதில் சிரமம் இருக்கிறது என்றும் தங்களால் இயலவில்லை என்றும் தெளிவாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்கள் பெற வேண்டிய அதாவது சட்டப்படி அவர்கள் பெறவேண்டிய டெர்மினல் பெனஃபிட் இன்றைக்குக் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. அதை மிகுந்த அனுதாபத்தோடு இன்றைக்குப் பரிசீலனை செய்து மத்திய அரசை நமது அரசு நாடி இருக்கிறது. மத்திய அரசில் இன்றையதினம் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள், ஒரு கருத்துரு இருக்கின்றது. ஒரு

மறுவாழ்வு நிதி அதாவது ரீஹேபிலிட்டேஷன் ஃபன்ட் என்ற ஒரு நிதியினை அதற்காக ஒதுக்கி இப்படி மூடப்பட்ட, மீண்டும் நடத்தப்படமுடியாத ஆலைகளின் பாதிக்கப்பட்ட தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்க மத்திய அரசு ஒரு கருத்துரு வைத் திருக்கின்றது. அந்த மறுவாழ்வு நிதியிலிருந்து இந்த இரண்டு ஆலைகளிலும் பாதிக்கப்பட்ட 400 தொழிலாளர்களுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கின்ற வகையில் தமிழக அரசு முயன்று கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனார்த்தனா மில்லைப் பொறுத்தவரையில் கைத்தறித்துறை இணை இயக்குநர் அளவில், இதை மீண்டும் திறக்க ஒரு குழு மூன்று மாதங்களுக்கு முன்பு போடப்பட்டது. நிர்வாகத்துடன் பேசப்பட்டது. நிர்வாகமும் இதுசம்பந்தமாக ஆலோசனைகளை எல்லாம் சொல்லியிருக்கிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் அறிக்கையினை அரசுக்குக் கொடுக்குமாறு இன்றையதினம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை ஒரு வாரத்திற்குள் வந்ததற்குப் பிறகு ஜனார்த்தனா மில்ஸ் பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும்.

ஸ்ரீஹரி மில்லைப் பொறுத்தவரையில் நிர்வாகம் மற்றும் வங்கிகள் ஆகியோருடன் பேசப்பட்டிருக்கின்றது. நிர்வாகமும் சில யோசனைகளைக் கூறியுள்ளது. இதுசம்பந்தமான வங்கிகளின் அறிக்கையை நாம் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைத்தவுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. இந்த ஆலையை நிவாரண நிறுவனமாக தமிழக அரசு அறிவித்து இருக்கின்றது.

வசந்தா மில்லைப் பொறுத்தவரையில் வங்கி நிதியுதவியைப் பெற தங்களால் இயலவில்லை என்று சொல்லியிருக்கிறது. மீண்டும் இந்த வாரத்திற்குள்ளாக அந்த வங்கியை அழைத்து சாத்தியக்கூறுகளைச் சொல்லி, இரண்டு தரப்பாருக்கும் ஆலோசனைகளைச் சொல்லி தக்க நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது.

மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதைச் சட்டப்படி சிப்காட் நிறுவனம் எடுக்க வையபிலிட்டி இருக்கிறதா என்று கேட்டிருக்கிறோம். 4 செயலாளர்கள் அமைந்த குழு ஏறத்தாழ 10, 12 நாட்களுக்குள் அறிக்கை கொடுத்தவுடன் நீங்கள் சொன்ன ஆலோசனைகளையும் வைத்துக்கொண்டு 2,500 தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க அரசு முடிவெடுக்கும்.

பவானி மில்ஸ், கோயம்புத்தூர் அதைப் பொறுத்த வரையில் 23-1-1986-ல் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது வேலை உடனடியாகத் துவக்கப்பட முடியும் என்றும் ஓர்க் லோட் குறித்து 3 மாதத்தில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்பதையும் தொழிலாளர் நலத்துறை அவர்களுக்குக் கூறியது. இந்த



நெசவாலை வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்று ஆலை அமைதியாகத் தொடர்ந்து செயல்படுவதற்காக தனது நிறுவனத்தை நிவாரண நிறுவனமாக அதாவது ரிலீஃப் அண்டர்டேக்கிங்-ஆக அறிவிக்கக் கோரியுள்ளனர். அந்தக் கோரிக்கையை அரசு இன்றைக்குப் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறது. கைத்தறித் துறை ஏற்றுமதி சம்பந்தமாக இந்த ஆலையிலிருந்து புள்ளிவிவரங்களைக் கோரியுள்ளது. அவை கிடைத்தவுடன் இந்த பவானி மில்லைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல முடிவை அரசு எடுக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பதிலில் நான்கு ஆலைகளில் பணிபுரியும் தொழி லாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 200 ரூபாய் கொடுக்கப்பட இருப்பதாக இருக்கிறது.

வசந்தா மில்ஸ் லிமிட்டட் என்ற ஆலையைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை கொடுக்கப்படுவதாக இருக்கிறது. ஆனால் கோவை, சேலம் மாவட்டங்களில் 8 மில்கள் மூடப்பட்டு இருக்கின்றது. அவற்றிலே 5 மில்களில் பணியாற்றும் தொழி லாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி கொடுக்கப்படுவதாக இருக்கிறது. மீதமுள்ள மில் களுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும், பிரதமர் பொது நிவாரண நிதியிலிருந்தும் உதவி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

தொழிற்சாலைகள் அதிக அளவில் மூடப்படுவதற்குக் காரணம் தொழிற்சாலைகளின் நிர்வாகம் மட்டுமே இல்லை என்றும் சில தொழிற்சங்கங்களின் தலைவர்கள் * * என்னும் கருத்து பரவலாக இருக்கிறது என்று தெரிகிறது. எனவே இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. கு. ரமணி:** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களின் மீது இவ்வாறு குற்றச்சாட்டு சாட்டிப் பேசுவது சரியா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி குற்றச் சாட்டுகள் ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி குறிப்பேட்டில் பார்த்து பின்னர் தீர்ப்பளிக்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 சனவரி 27

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வசந்தா மில்ஸ் போன்ற மில்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிப்பது பற்றி அரசு தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டம் மொடையூர் குழந்தைகள் நல மையத்தில் வழங்கப்பெற்ற உணவை உண்ட பல குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள். சு. பாலன் மற்றும் செ. ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டு வருவார்.

(முற்பகல் 10–30)

திரு சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "7-1-1986 அன்று திண்டிவனம், செஞ்சி, மொடையூர் கிராமம் அருகே மதிய உணவு சாப்பிட்ட குழந்தைகளில் சில கவலைக்கிடமாகவும் சுமார் 115 பேர் மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம், மொடையூர் கிராமத்தில் செயல்படும் குழந்தைகள் நல மையத்தில் 250 குழந்தைகள் பயன் பெறு கின்றனர். இந்த மையம் அந்த ஊர் மக்களினால் கட்டப்பட்டு இனாமாக அளிக்கப்பட்டு உள்ளது. இது ஒரு கூரை வேய்ந்த மையமாகும்.

5–1–1986 அன்று வழங்கப்பட்ட உணவில் இறந்த பல்லி காணப்பட்டது. அன்று உணவு உட்கொண்ட 115 குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். மேல்சித்தாமூர் கிராமத்தில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரால் அனைத்து குழந்தை களுக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு தீவிர சிகிச்சைக்காக அன்றே மூன்று குழந்தைகள் செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சைக்கு பின்னர் மறுநாள் 6-1–1986 அன்று பூரண நலத்துடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

இச்சம்பவத்திற்கு காரணமான குழந்தைகள் நல உதவி யாளர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



மையம் தொடர்ந்து செயல்பட மாற்று ஏற்பாடுகள் செய்யப் பட்டு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

காவல் துறையில் இது குறித்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் அந்த மொடையூர் கிராமத்தில் உள்ள சத்துணவு மையத்தில் உணவில் பல்லி விழுந்து அதைக் குழந்தைகள் சாப்பிட்டதன் காரணத்தால் தாஸ், செல்வம், ஹிக்கில்ஸ் என்கிற மூன்று குழந்தைகள் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு பின்பு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர் என்று சொல்லியிருக் கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இப்போது மையங்களில் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி அடிக்கடி ஏற் படுவதால் அங்கே உணவு சாப்பிடுகிற குழந்தைகளுக்கு அருவருப்பு ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் சாப்பிடுகின்ற இடத்திற்கு அருகில் வேறு ஏதாவது கரப்பு போன்ற பூச்சி இருந்தாலும் அந்தச் சாப்பாட்டை அப்படியே தள்ளி விடுகிறார்கள், ஆகவே இதுபோன்ற நிலைமை ஏற்படுகிறபோது, அப்படிப்பட்ட பூச்சிகள், பல்லிகள் விழுவதால் உணவின் நிலைமையில் ஏதாவது விஷத் தன்மை ஏற்படுகிறதா என்று ஆராயப்பட்டிருக்கிறதா, அதற்கான அறிக்கை ஏதாவது பெறப் பட்டிருக்கிறதா?

அந்த மையத்தின் உதவியாளர்கள் பட்டம்மாள், மங்காரம் மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பொறுப் பாளர் தேடப்படுகிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட அவர்கள்மீது என்ன குற்றப்பிரிவு போடப்பட்டிருக் கிறது? அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதாக சொல்லியிருக் கிறார்கள். அந்த வேலை நீக்கத்தை எந்தத் துறையின் கீழ் செய்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் பல்லி, கரப்பான் போன்றவைகள் உணவில் விழுவதன் மூலமாக ஏற்படுகின்ற தன்மையில் ஏதாவது விஷத் தன்மைகள் அந்த உணவிலே ஏற்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து அறிக்கைகள் பெறப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். அப்படி முறையாக ஆய்வுகள் செய்யப்பட கிங் இன்ஸ்டிடியூட்டிற்கு பல முறை அனுப்பப்பட்டு, அவர்கள் ஆய்வு செய்து அறிக்கையை மக்கள் நல்வாழ்வுத் துறைக்குத் தந்திருக்கிறார்கள்.

அடுத்து அங்கே உதவியாளர்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அமைப்பாளர் தேடப்பட்டு வருகிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சமைக் கப்பட்ட பொருள்களிலே விஷத்தன்மை கலந்திருக்குமானால்,

சமையல் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் தான் அதற்கு முழுக்க முழுக்க பொறுப்பு ஏற்க வேண்டும். உதவியாளர்கள்தான் பொறுப்பானவர்கள். அவர்களிடத்திலே சமையல் செய்ய அரிசி, பருப்பு ஆகியவற்றை எடுத்துத் தந்த உடனேயே, அதைச் சுத்தம் செய்து சமைக்கின்ற பொறுப்பு அவர்களிடத்திலே போய் சேருகிறது. ஆகவேதான் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கப் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அத்தகைய நிலமைகள் அடிக்கடி ஏற்பட்டால் குழந்தைகளுக்கு அது அருவருப்பை உருவாக்கிவிடாதா என்றும் கேட்டார்கள். அத்தகைய நிலைமைகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத் தான், ஆங்காங்கு இருக்கின்ற அலுவலர்களின் மூலமாக அவ்வப்போது பார்வையிடப்பட்டு, சத்துணவுக் கூடங்களை சுத்தம் செய்கின்ற பணிகளும் மேற்கொள்ள, ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சத்துணவு கூடத்தின் சுற்றுப்புறங்களையும் சுகாதாரமாக வைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டிலே கூட பேசப்பட்டிருக்கிறது. பொதுமக்களும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தருவார்களேயானால், மையங்களை சுத்தமாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க அது உதவியாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லா உணவு மையங்களும் இருள் சூழ்ந்த மையங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினாலும், கூரையில் இருக்கின்ற பல்லிகள் மற்ற பூச்சிகள் சமையல் செய்கிற நேரத்தில், அவர்களுக்கே தெரியாமல் விழுந்து விடுகின்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் எல்லா மையங்களிலும் விளக்கு வசதிகளை ஏற்படுத்த ஏற்பாடு செய்வார்களா? அதே நேரத்தில் இந்தச் சத்துணவுத் திட்டம் ஒரே இலாகாவில் இருப்பதாகத் தெரியவில்லை. இதில் பல இலாக்காக்கள் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் பல்வேறு குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளையும் ஒரே இலாகாவின் கீழ் கொண்டு வரும் வகையில் இதை மாற்றி அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்கள் என்ற வகையில் 28,105 மையங்களும், பள்ளி மாணவர்களின் மையங்களாக 38,399 மையங்களும் ஆக மொத்தம் 66,504 மையங்கள் தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.



அத்தனை மையங்களையும் சுத்தமாக வைத்து பராமரிக்க வேண்டுமென்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது. இந்த இலாக்காவை ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்து, இன்றைக்கு அதற்குரிய உத்தரவுகளைப் பெறுவதற்கு கோப்புகள் எல்லாம் அனுப்பப்பட்டுள்ளன. விரைவிலே இந்த இலாக்கா தனியாகச் செயல்படுவதற்கு வழிவகைகள் செய்யப்படும். முன்பே சொன்னதைப் போல 66,504 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் மின்விளக்குகள் தரப்பட வேண்டுமென்று ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது சில இடங்களில் மின்விளக்குகள் தரப்பட்டு விட்டன. அருகிலே மின்கம்பங்கள் இல்லையென்பதால் ஒருசில இடங்களில் மின் இணைப்பு தர முடியாத நிலை இருக்கிறது. அவைகளுக்குக் கூட முன்னுரிமைத் தந்து அந்த மையங்களுக்கு மின் இணைப்பு தர வேண்டுமென்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவிலே அனைத்து சத்துணவு மையங்களிலும் மின் விளக்குகள் எரிய வசதிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

#### இ. பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

(1) தமிழ்நாடு அரசின் 1963-64. 1969-70, 1970-71, மற்றும் 1971-72-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)-யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது போக்குவரத்துத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினொன்றாவது அறிக்கை.

(2) 1973–74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகளைப் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை.

(6) அரசினர் தீர்மானம்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு திரு.ப. உ. சண்முகம்: துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:—

1. திரு. மா. சின்னராசு
2. திரு. கே. கல்லன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப.உ.சண்முகம்: துணைத்தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : "1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"



திரு ப, பொன்னுரங்கம்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன், காரணம் இந்த ஆட்சி அமைந்ததிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தவில்லை. முன்பு என்ன சொல்லப்பட்டதென்றால், 'காம்ப்ரஹென்சிவ் ஆக்ட்' வரப் போகிறது, அதற்குப் பிறகு உடனே தேர்தல் நடத்திவிடுவோம் என்று சொன்னார்கள். அந்த காம்ப்ரஹென்சிவ் ஆக்ட் வந்து இதே சட்டமன்றத்தில் 1983 ஆம் ஆண்டு நிறைவேற்றினோம். இப்போது என்ன சொல்கிறோம் என்றால் 'ரூல்ஸ்டு பி ஃமட்' என்று சொல்கிறோம். சட்டத்திற்கு ரூல்லை உருவாக்குவதற்கு நான்கு வருடம் தேவையாக இருக்கிறது. எதைக் கேட்டாலும் 'ரூல்ஸ்பி டு மேட்' என்று சொன்னால் என்ன அர்த்தம்? ரூல்சை போடுவதற்கு அத்தனை கஷ்டமா? முதலில் காம்ப்ரஹென்சிவ் ஆக்ட், இப்போது ரூல்ஸ் ஆகவே பொருந்தமற்ற காரணங்களைச் சொல்லி டெமாக்கரேட்டிக் செட் அப் கழுத்தை நெறிப்பது நல்லதல்ல என்பதால் இதனை எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். 1983—லே இருந்து, இன்னும் இந்தச் சட்டத்திற்கு விதிகள் கொண்டுவரப்படாதது வேதனைக்குரியது. அதே நேரத்தில் பொது நலனை முன்னிட்டு, இது கொண்டுவரப்படுகிறது என்று தலைப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படிப் பொது நலனை முன்னிட்டு என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இந்தக் கூட்டுறவு அமைப்புகளிலே இருந்தால்தானே நல்லது. நீங்கள் சொல்கின்ற காரணம் பொருந்தும். எனவே, இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ரு. சுப்பராயன்; துணைத் தலைவர் அவர்களே, முற்றிலும் ஜனநாயக விரோதமான சட்டத்தை அறிமுகப்படுத்துவதை நான் துவக்க கட்டத்திலேயே எதிர்க்கிறேன்,

திரு, கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வகை செய்யும் சட்டத்தை, இங்கே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததை, இந்தச் சபை நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆரம்ப கட்டத்திலே நான் எதிர்க்கிறேன். இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். சட்டம் வந்ததற்குப் பிறகு, விதிகள் அமைக்கப்பட்ட பிறகு தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு கேட்டபோது, அடுத்த ஆண்டு விதிகள் தயாராகிவிடும் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, இப்போது, தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்

ளத்தக்கது அல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறை வேற்றுவதற்குப் பதிலாக, விதிகளை ஏற்படுத்தி, தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுவர சீக்கிரத்தில் தேர்தல் நடத்தவேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது எந்தவிதத்திலும் நல்லதல்ல. எனவே இந்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுக்கிற நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ், ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுனவடிவு, 1986.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, அறிமுகக் கட்டத்திலேயே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இதை எதிர்க்கிறேன்.

திரு கோ. வீரய்யன்: துணைத் தலைவர் அவர்களே. இந்தச் சட்டத்தை அறிமுகக் கட்டத்திலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.



திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதை, ஜனதா கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன். தமிழ்நாடு மாநிலத் திலே உள்ள வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை மேலும் நீட் டிக்கும் இந்தச் சட்டத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

திரு. சு. பாலன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தை, நாங்கள் ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்; இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1986 (தொடர்ச்சி)

[illegible]: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு மசோதாக்கள் மீது, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் கூட குழந்தை பிறந்துவிட்டது என்று சொன்னால், மகிழ்ச்சி அடையக் கூடிய நிலையில் இல்லாமல், அவர்கள், பிறந்ததிலேயிருந்து, வளர்ந்த திலேயிருந்து, தொடுப்பினை, கொள்வினையிலேயிருந்து, வரதட் சணையிலேயிருந்து, அது, சக்களத்திச் சண்டை மாமியார் கொடுமை, அம்மா அவஸ்தை என்று இதையெல்லாம் சொல்லி, மேலும், வரவு—செலவு, இருப்பு, கடன், எல்லாவற்றையும் பேசக்கூடிய நிலையிலே, இங்கே பல்வேறு விவாதங்களை ஆட்சிக் கட்சிக்கு எதிரான வகையில், அரசாங்க நடவடிக்கைகளுக்கு மாறான போக்கில், அவரவர்களுடைய உணர்வுகளை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகின்றபோது, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றபோது, சில கருத்துக்களைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு ஏற்பட்ட பிறகு, நடைபெற்ற இடைத்தேர்தலிலே, அண்ணா நகர் தொகுதியில் தோல்வியுற்றது ஒரு காரணம் என்றும், பாராளுமன்ற தேர்தலில் 2 இடம் பெற்று அங்கே தோல்வி அடைந்தீர்கள் என்ற காரணத்தையும் இங்கே சுட்டிக்காட்டி பேசினார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 1977-ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டது என்று சொன்னால் அப்போதும் அண்ணா நகரில் அ.இ.அ.தி.மு.கழகம் தோல்விபெற்றது, தி.மு.க. வெற்றிப் பெற்றது. அடுத்து, 1980-ஆம் ஆண்டு இரண்டாவது முறை அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைந்தது என்றாலும் அப்போது அண்ணா நகர் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. தோல்வி பெற்றது, தி.மு.க. வெற்றி பெற்றது. அடுத்து 1984-ஆம் ஆண்டில் அ.இ.அ.தி.மு.க. அரசு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டிலே இல்லாத நேரத்தில் கூட வெற்றிப் பெற்று வந்தபோது கூட அண்ணா நகர் தொகுதியில் தி.மு.க. வெற்றிப் பெற்றது. இதிலே எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் அங்கே ஏதோ இடைத்தேர்தல் நடைபெற்றபோது கலைஞர் கருணாநிதி அவர்கள் வேறு ஒரு விஷயமாக இலங்கைப் பிரச்சினை விஷயமாக ராஜினாமா செய்து விட்டதன் காரணமாக இடைத்தேர்தல் நடந்தபோது அ.இ.அ.தி.மு.க. தோல்வி அடைந்தது மீண்டும் தி.மு.க. அங்கே வெற்றி பெற்றது. அதற்காக உள்ளாட்சித் துறை தேர்தல் நடத்தாமல் இருக்கிறார்கள் என்று திரு. ரகுமான் கான் அவர்கள் சொன்னார்கள். அந்த வெற்றியில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு உடலில் பலவீனமான அதாவது அங்கஹீனமான ஏதாவது ஒரு கட்டி என்ற வகையில் ஒரு ஆள் இருக்கலாம். அது திருஷ்டி கழிப்பதைப் போல் இருக்கும். அ.இ.அ.தி.மு.க. அரசுக்கு அண்ணா நகர் ஒரு திருஷ்டி கழிப்பதைப் போல் இருக்கலாம். ஆனால் எந்தவிதமான பலகீனமும் அங்கஹீனமும் அ.இ.அ.தி.மு.க. அரசில் இல்லை என்ற அடிப்படையில் பெரும்பான்மையான வெற்றி பெற்று தமிழ்நாட்டில் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களுக்குத்தேர்தல் நடத்தாமல்இருப்பதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், 1977-ல் நாங்கள் வெற்றி பெற்றோம். வெற்றி பெற்ற உடன் பொதுத் தேர்தலை முடித்துவிட்டு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காக சில நடைமுறைகளில் முயற்சி செய்துகொண்டு இருக்கும்போது இடையிலேயே 2. 2½ ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டதால் தடைப்பட்டது. பிறகு 1980-ல் இடைத்தேர்தல் நடைபெற்றது. அந்த இடைத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். ஆட்சியின் காலம் 5 ஆண்டுகள் என்பது போய் 2½ ஆண்டுக் காலத்தில் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி



வெற்றி பெற்று வந்த பிறகு நாங்கள் மீண்டும் அந்த நிலையை உருவாக்கினோம். ஒவ்வொரு முறையும் இந்த நிலையை மேற்கொள்ளும் போது யார் யார் ஆட்சி செய்யவேண்டும், அதிகாரத்தை பெறவேண்டும் என்ற முறையில் தாழ்த்தப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும், தாய்மார்களும் ஆட்சிப் பீடத்தில் வரவேண்டும் என்ற முறையில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு தயாரித்து அதற்கு வேண்டிய பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து முடிப்பதற்கு முன்பாக அடுத்த தேர்தல் இந்திய பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் மரணம் அடைந்த காரணத்தால் ஒரு ஆண்டு முன்பாகவே நடைபெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே அப்போதும் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. இங்கே ஒருவர் ஏன் சட்டமன்றத் தேர்தலை மட்டும் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பே நடத்திவிட்டீர்கள் அதேபோல் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த மறுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். ஒரு ஆண்டு முன்பாக அதாவது 1984-ல் இந்தத் தேர்தலை நாம் நடத்தியதன் காரணம் ஒரு தேசிய நஷ்டம் இந்த நாட்டுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக நடத்தினோம்.

அகில இந்திய அளவில் தேர்தல் நடக்கும்போது நாம் மட்டும் ஒத்தி வைத்து மீண்டும் தனியாக தேர்தலை நடத்தினால் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் பொருளாதார சேதம் ஏற்படும். அதுவும் மக்களின் வரிப்பணம் வீணாக போகும். அப்படி போகக் கூடாது என்பதற்காக எங்கள் ஆயுட்காலத்தையும் ஒரு ஆண்டு குறைத்துக்கொண்டு நாங்கள் தேர்தலை நடத்தமுன் வந்தோம் என்று சொன்னால் மக்களிடத்தில் நாங்கள் வெற்றி பெறக் கூடிய வாய்ப்பை பெற்று இருக்கிறோம் என்பதை உறுதிப் படுத்துகிற வகையில் அமைந்ததே தவிர வேறு எதுவும் அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டு இருக்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தவேண்டும் என்று வருகிறபோது நாம் போட்ட பல்வேறு திட்டங்கள், சட்டங்களின் மீது சந்தர்ப்பவாதங்களால் ஆங்காங்கு வழக்கு மன்றங்களுக்குச் சென்று தோல்வி ஏற்படக்கூடிய நிலையை உருவாக்கினார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கக் கூடிய பல்வேறு வழக்கு மன்றங்கள், ரிட் சோர்ட்டுகள், ஸ்டே சோர்ட்டுகள் என்று விளங்கக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால் சந்தர்ப்பவாதிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு வழக்கு மன்றங்களுக்குச் செல்லக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதே தவிர ஆட்சியால் ஆட்சிக் கட்சியால் எந்தவிதமான பலவீனமும் அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) (பணியடிக் கப்பெற்றது.)

ஆகவே அந்த அடிப்படையிலேதான் இப்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில், புரட்சித் தலைவர் இயக்கம் தோல்விக்குத் தோல்வியேதரும் தொண்டர்களைக் கொண்ட இயக்கம். எந்த காரணத்தை முன்னிட்டும், எந்தத் தேர்தலிலும் அது வெற்றி பெறக் கூடிய வாய்ப்பை பெற்றிருக்கக்கூடிய இந்த இயக்கம் தேர்தலைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

அப்படி தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தால், அவசியம் இருந்தால், உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் விளக்கமாகச் சொன்னது போல, நாங்கள் நேரடியாகச் சொல்லிவிட்டு, மக்களிடம் வாதுப்போம். ஆகவே அந்த நிலைக்கு நாங்கள் எப்போதும் போகமாட்டோம் என்று சொன்னார்கள். பார்லிமெண்ட் தேர்தலில் நாங்கள் இரண்டு தொகுதிகளிலே இடம் பெற்றவுடன் சட்டமன்றத்தையே கலைத்துவிட வேண்டுமென்று, அங்கே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொன்னார்கள். 'கொக்கென்று நினைத்தனையோ? கொங்கணவா?' என்று பாராளுமன்றத்திலே காங்கிரசோடு சேர்ந்துள்ளதால் திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி பெற்றார்கள். அதற்கு அப்போது துணையாக திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவதற்கு இந்த நாட்டு மக்கள் ஓட்டு போட்டார்கள். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரை பார்க்கிறபோது, இந்த நாட்டு மக்கள் சொன்னார்கள். சட்டமன்றத்தை ஆளுகின்ற தகுதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் உண்டு, காங்கிரஸ், திராவிட முன்னேற்றக்கழகம் சேர்ந்தாலும் அது போகாது என்று உறுதி படுத்திச் சொன்னார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் காலம் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும் கூட, உள்ளாட்சித் துறையிலே பல்வேறு பணிகள் தேர்தல் நடக்காமலே இருந்த காலத்திலே, நடைமுறைபடுத்தப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித்துறை முதலீடு இன்றையதினம் ரூ. 42 கோடியாகும். இன்றையதினம் ரூ. 340 கோடிக்கு மேலாக அதனுடைய பொருட்கள், அதனுடைய சொத்து இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாவிட்டாலும், குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, நிறைய குழாய்கள் அமைக்கப்பட்டது இப்போதுதான். மின் விளக்குகள் எல்லா வகையிலும் சிறப்பு பெற்றுள்ளன. எல்லாவிதமான நாட்டு நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது இப்போதுதான். சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் தேசிய வேலைவாய்ப்புத்திட்டம் என்று பல்வேறு திட்டங்களை நாம் போட்டிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு



நாட்டு மக்கள், ஏழை எளியவர்கள் என்ன நினைக்கிறார்களோ அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அவை செயலாற்றக் கூடிய வகையிலே, ஆட்சி சக்கரம் நின்றுவிடாமல், ஆட்சி சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. ஆக நலத்திட்டங்கள் எல்லாம் பொது மக்களைப் போய்ச் சேர்கிறது.

அதிகாரிகள் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று நினைக்கக் கூடிய நிலையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. ஆனால் தேர்தல்கள் நடந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பேற்கும் வரை, தனி அதிகாரிகள் தேவை என்ற மசோதாவை நாம் வரவேற்கிறோமே தவிர, வேறு அல்ல. இப்போது கூட, ஆட்சிக் கட்சியாக இருந்து, எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமாக பேசியிருக்கிறார்கள். தேர்தல் நடக்குமா, இது நிறுத்தி வைக்கப்படுமா, நாங்கள் தனியாக சட்டம் போட்டு அமைப்போம், வசூல் செய்வோம் என்று பல்வேறு வகைகளிலே பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசுவதைப் பார்த்தால், இந்தத் தேர்தலை நிறுத்திவைப்பதற்கு மறைமுகமாகவோ நேரடியாகவோ துணையாகவோ, தூபமூட்டவோ, தூது அனுப்பவோ செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறது. அப்படிப்பட்ட நிலை வந்தால், அதன் காரணத்தால், இங்கே தேர்தல் ஒத்திவைக்கப்படக் கூடிய நிலையில் இருக்குமானால், அவர்களுடைய முகமூடியை கிழித்தெறிய தயங்கமாட்டோம் என்பதை எடுத்துச் சொல்லி, மசோதாவை வரவேற்று, அமர்கிறேன், வணக்கம்.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு சட்டமுன்வடிவுகளின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சுருக்கமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முனைகிறேன்.

இங்கே என்னுடைய ஆளுங்கட்சி தரப்பைச் சார்ந்த நண்பர்கள் பலரும், பெருமைப்பட்டுக்கொள்வதற்கும், கைகொட்டி வரவேற்பதற்கும் ஏற்றவாறு அவ்வளவு விசேஷமான அம்சங்கள் ஏதும் இந்த மசோதாக்களில் இல்லை. நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டிருந்த உள்ளாட்சித் தேர்தல், நீண்ட இடைவெளிக்குப் பின்னர், நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களால் சிறை மீட்கப்பட்டது தற்காலிகமானது என்றாலும்கூட, நம்பத்தக்க பலவிதமான வதந்திகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, இன்னும் ஓரிரு தினங்களில் அது தள்ளி வைக்கப்படும் என்று இதை நான் உறுதிப்படுத்திச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நம்பத் தகுந்த, மிக, மிக நம்பத் தகுந்த வதந்திகள் பரவலாக உலவுகின்ற காரணத்தினால், மீண்டும் இத்தகைய தவறு நேர்ந்திடா வண்ணம் தடுக்கப்பட வேண்டும் என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. கு. சுப்புராயன்] [1986 சனவரி 27

மேலும், உள்ளாட்சித் துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சீரழிவை, இன்று என்னைக் காட்டிலும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள் என்று கருதுகிறேன். ஏன் என்றால், திராவிட இயக்கத்திலேயே, மிகக் குறைந்த வயதிலேயே நகர்மன்றத் தலைவர் பொறுப்புக்கு வந்து, அந்தத் துறையிலே இருக்கிற பல்வேறு பலவீனங்களைப் பற்றியும் நுட்பமாக அறிந்தவர் என்ற முறையிலே இன்றைக்கு இருக்கக்கூடிய அந்தப் பலவீனங்களை ஆளுகிற தரப்பில் இருந்து அவர்கள், நியாயப்படுத்தினால்கூட, நியாயத்தின் அடிப்படையில் நியாயப்படுத்த முடியாத தவறுகள் இவை என்பதை அறிவார்கள் என்று நம்புகிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சித் துறை நிறுவனங்களின் கீழ் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை எதிர்தரப்பிலே இருக்கிற நான் மட்டுமல்ல, ஆளுகிற தரப்பிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மனக்காயம் பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களால் எடுத்துச் சொல்ல முடியவில்லையே தவிர, வீதிக்குப் போனால், மக்களை பார்க்கவே அஞ்சுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? உள்ளாட்சித் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிர்வாகங்கள் தான்.

ஆகையால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில், விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. பல கட்டுக்கட்டான கதைகளும், உண்மைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரே ஒரு விஷயத்தை அவசியத்தின் தன்மை கருதி நான் வலியுறுத்திட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் துறை தனி அதிகாரிகளின்கீழ் இயங்கிய காலத்தில் ஏற்பட்ட நடவடிக்கையைப் பற்றிய முழுமையான விசாரணை நடத்துவதற்குரிய ஒரு விசாரணைக் கமிஷனைப் போட வேண்டும். ஏனென்றால் தனி அதிகாரிகள், தான் எடுத்த மூப்பில் அதிகார வர்க்க தர்பார் நடத்தி இருக்கிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய நிதி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய செய்யப்படாத ஒரு பலவீனம் இந்த தனி அதிகாரிகளின் கீழ் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில், மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையும் கூட, புறக்கணித்துவிட்டு, அதிகாரிகள் தங்கள் நோக்கில் செயல்பட்டு இருக்கிறார்கள். ஒரே ஒரு உதாரணம்— திருப்பூர் நகரமன்றத்தைப் பொறுத்த வரையில், அங்கே இருக்கக்கூடிய இரண்டு லாரிகள் 'கன்டெம்ட்' ஆகி கிடக்கிறது. ஒரு டிராக்டர் 'கன்டெம்ட்' ஆகி விட்டது. 'கன்டெம்ட்' ஆன நிலையில் நகராட்சி தன்னுடைய சொந்த நிதியிலிருந்து அரசு அனுமதியைப் பெறாமலேயே லாரியை வாங்கிக் கொள்ள முடியும். ஆனாலும், வாங்கவில்லை. வருடக்கணக்கில் என்ன செய்கிறார்கள் தெரியுமா?



1986 சனவரி 27] [திரு கு. சுப்பராயன்]

மாதம் ஒன்றுக்கு 80,000 ரூபாய்க்கு தனியாரிடமிருந்து வாடகைக்கு லாரிகள் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். திருப்பூர் முனிசிபாலிடியிலே லாரியை வாடகைக்கு எடுத்துக் கொள்வதற்கு என்ன நோக்கம்? ஒரு லட்சம் ரூபாயில் எவ்வளவோ வாங்கியிருக்கலாம். வருஷம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 12 இலட்சம் ரூபாயை வாடகையாக செலவழிக்கிறார்கள். அந்த வாடகையாக செலவழிக்கிற பணம் யாருடைய பணம்? அதிகாரிகளுடைய பணமா? வாடகைக்கு செலவழிக்கிற அதிகாரத்தை அவர்களுக்கு அளித்தது யார்? என்ன காரணம், ஒரு நோக்கம் இல்லாமல் வாடகைக்கு வாங்குவார்களா?

மக்களின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற செலவழிக்க வேண்டிய பணத்தை தனியாருக்கு வாடகையாகக் கொட்டிக் கொடுக்க அந்த அதிகாரிகள் திட்டமிட்டு இருக்கிறார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே தான் இதை நடத்தி இருக்கிறார்கள். ஆகவே, குறிப்பாக, நான் வலியுறுத்த விரும்புவது, இது ஒரே ஒரு உதாரணம் தான். ஆனால் மூடி மறைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான உதாரணங்கள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, இந்தத் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்ற நிர்வாகத்தின் முழுமையான பணிகள் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷனை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அநேகமாக, மக்களின் உணர்ச்சிகளை மதித்த அண்ணாவை நேசிக்கின்றவர்கள் நிறைந்த கட்சி தான் ஆளுகிறது என்று நான் நம்புகிறேன். அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் ஓரளவுக்காவது இன்னமும் மனசாட்சியை விலைக்கு விற்கமாட்டார்கள் என்று நம்புகிறேன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சமரசம் ஆரவாரமாகச் சில கருத்துக்களை எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஏதோ எதிர்தரப்பிலே இருக்கக்கூடிய கலைஞர் அவர்களைப் பற்றியும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பற்றியும் எல்லாம் குறிப்பிட்டார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால், ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரை மனசாட்சி உறுத்தி இருக்கிறதா? வரி வசூலிக்கிறீர்கள் அல்லவா? மக்களிடமிருந்து வரி வசூலிப்பது எதற்காக? மக்களின் வசதிகளை நிறைவேற்றத் தான் வரி வசூலிப்பது மக்களின் தேவைகளை நிறைவேற்றத்தான் என்றால், நீங்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது இல்லையே. வரி வசூலிக்காமல் விட்டு விட்டீர்களா?

மக்களுக்கு ரோடு போடவில்லை, சாக்கடை வசதி செய்ய முறைப்படியான விளக்கு வசதி செய்யவில்லை. இந்த நிலையில் வரி வசூலிக்கலாமா? உங்களுக்கே, மனசாட்சி உறுத்தி, ஒன்று செயல்பட்டு இருக்க வேண்டும் அல்லது வரி வசூலிக்காமல் இருந்திருக்க வேண்டும். இந்த நடைமுறை எந்த வகைப்படி நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதே போல, இன்றைக்கும் இருக்கக்கூடிய இந்த நகராட்சிகளிலே இருக்கக்கூடிய இந்த பலவீனங்களுக்குக் காரணமாக இருப்பது, தேர்தல்கள் நடைபெறாத இந்தக் காலம் தான். இந்தத் தேர்தல் நடைபெறாத காலங்களிலே தான் இத்தகைய விஷப் புதர்கள் மண்டிப்போய்க்கிடக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஒரு முற்றுத் தீர்வாக தேர்தல் வரும் என்று அறிவித்திருக்கிற நிலையில் நம்பிக்கையோடு பலரும் நாமினேஷன் தாக்கல் செய்து கொண்டிருக்கிற இந்த நிலையில் மீண்டும் இந்தப் பிரச்சினையின் தன்மையைக் கருதி, எந்த விதமான தங்கு தடையுமின்றி இந்தத் தேர்தல் நடக்கும் என்ற உத்திரவாதத்தை அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-00)

திரு ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு துணை நாயகர் அவர்களே, இந்த மாநகராட்சி சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நல்க விரும்புகிறேன். நம்முடைய சென்னை மாநகராட்சியில் மலேரியாக் கொசுக்கள் அதிகமாகப் பரவி வருவதைப் பார்க்கிறோம். இதற்கு அடிப்படைக் காரணங்களை நாம் உணர்ந்தாக வேண்டும். மலேரியா பற்றி ஆராய்வதற்காக National Institute of Malaria என்ற ஒரு அமைப்பு டில்லியில் இருக்கிறது. அந்த அமைப்பு 3 மாதங்களுக்கு பயிற்சி தந்து ஒரு சான்றிதழ் வழங்குகிறது. அப்படி சான்றிதழ் வழங்கப்பட்ட அதிகாரிகளை மாநகராட்சி வைத்துக் கொண்டு என்ன செய்கிறது? தமிழகத்திலே தான் மலேரியாவுக்கென்று தனித்துறை இல்லை. மற்ற மாநிலங்களிலே எல்லாம் இருக்கிறது. தனித் துறையை அமைத்து நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிலேயே நம்முடைய சென்னையிலேதான் அதிக அளவுக்கு மலேரியா இருப்பதாக National Institute of Communicable Diseases Centre என்ற அந்த இயக்கம் தெரிவித்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுக்காலமாக மலேரியா முறையாக ஒழிக்கப்படவில்லை. Abate என்ற மருந்தை அடித்து கொசுக்களை ஒழிக்கவில்லை. அந்த கொசுக்களுக்கு மூலமாக இருக்கிற காரணம் இப்போது உணர்த்தப்பட்டு இருக்கிறது. Fogging ஆல் கொசுக்களை ஒழிக்க முடியாது என்ற நிலையிலே டில்லி போன்ற இடங்களிலே Natural Fogging System இருக்கிறது. அதனால் அங்கே அந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டிலே அப்படியில்லை. இது உஷ்ண பகுதியாக இருப்பதால் இங்கே இருக்கின்ற ஃபாக்கிங் பூமிக்கு அடியில் இருப்பதில்லை. அது புகைய க மேலேசென்று விடுகிறது. ஆகவே அந்த மருந்து மூலமாக கொசுக்களை ஒழிக்க முடியாது என்ற நிலை இருக்கிறது. தமிழ்நாட்டின் சீதோஷ்ணம் உஷ்ணமானது, அதனால் புகையாகிறது. Techinical Melathoen என்ற ஓர் அமைப்பு 4 லட்சம் ரூபாயில் ஒரு இயந்திரத்தை



வாங்கி பொருளாதார பாழ் ஏற்பட்டிருக்கிறதே தவிர உண்மையிலேயே மலேரியா ஒழிக்கப்படவில்லை. மலேரியாவை ஒழிப்பதற்காக பம்பாயிலிருந்து டாக்டர் தியோ பாங்கர் என்ற அதிகாரியை இங்கே வரவழைத்து அவர் சென்னை மாநகராட்சியைப் பார்த்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவருக்கு 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு திட்டத்தைத் தந்தார்கள். விஞ்ஞான ரீதியில் மேல்நிலைத் தொட்டிகளை மூடவும் கிணறுகளைக் காற்றுப் புகாமல் மூடவும் அறிவுறுத்தப்பட்டது. அந்த மாதிரி ரிப்பன் மாளிகையில் வைத்திருக்கிறார்கள். அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்த திரு. திரவியம் அவர்கள் எழுதியுள்ளார்கள். 3 ஆண்டுக்காலம் ஆகியும்கூட இதுவரையில் ஒன்றுகூட செய்யவில்லை, என்ன பயன்?

கார்ப்பரேஷனில் அன்றைய தினம் இருந்த அதிகாரிகள் கொசு ஒழிப்பதற்காக Bye-Laws–Malaria and Mosquitoe Control இதற்கான பைலாஸ்களை சாங்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்டு Secretary to the council Thiru A. Francis இடமிருந்து விண்ணப்பம் 30–12–1980 இல் போயிருக்கிறது. அதை இடப்பிலே வைத்திருக்கிறோம். 1948 ஆம் ஆண்டிலே இதுபற்றி Corporation of Madras அழகாக பிரசுரம் செய்திருக்கிறது. அதிலே காற்றுப்புகா தொட்டி என்று ஒரு அமைப்பு உருவாக்க வேண்டுமென்று சொல்லி The well should be hermetically sealed with Cuddappah slabs என்ற ஒரு அழகான விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த விளம்பரத்தின்படி காற்றுப்புகா கிணறுகள் அமைக்க வேண்டுமென்று 1948-ல் அறிவித்து இருந்தாலும் இன்றைய தினம் வரை அது நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தினுடைய சுற்றுலாப் பொருட்காட்சியிலே ஒரு நோட்டிஸ் வழங்கி இருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களின் அனுமதியின் பேரில் அந்த நோட்டீஸைக் காட்ட விரும்புகிறேன். அதிலே, காற்றுப்புகா மேல் தொட்டி என்று போட்டிருக்கிறார்கள். காற்றுப் புகாமலேயே மேலே தண்ணீர் ஏறுமா அல்லது கீழே தான் இறங்குமா? இப்படி அடிப்படையிலேயே தவறாக வெளியிட்டிருக்கிறார்கள். காற்றுப்புகா கிணறு என்று போட்டிருக்கிறார்கள், அது சரிதான். தண்ணீரை மேலே கொண்டு வருவதற்கு காற்று புகாமல் இருக்க வேண்டும். ஆனால் காற்றுப்புகா மேல் தொட்டி என்று ஒரு நோட்டீசை, விஞ்ஞான ரீதியாக மாற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இது மாபெரும் தவறு. இதை வெளியிட்ட மாநகராட்சியின் வெளியீட்டு அதிகாரியின் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கொசுவை ஒழிக்க வேண்டுமென்றும், மலேரியாவிற்குத் தனி டிபார்ட்மெண்டை உருவாக்க வேண்டுமென்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, புல் பண்ணை

பால் பண்ணை என்று இருப்பதைப் போல மாநகராட்சி கொசுப் பண்ணை என்று வைத்து கொசுக்களை வளர்க்கிறதா என்ற கேள்வியைத் தமிழக மக்கள் கேட்கின்ற அளவிற்கு நிலைமைகளை உருவாக்க வேண்டாமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் என்ற ஒரு அமைப்பை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி 15 இலட்சம் ரூபாயைக் கடனாகக் கொடுத்திருக்கிறது. ஆனால் ஏழு ஆண்டுகளாக இந்தத் திட்டம் முடங்கிக் கிடக்கிறது. இந்தத் திட்டத்திற்காக ஆறு, ஏழு இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்தும் கூட அது நிறைவேற்றாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

என். ஆர். சுப்பிரமணியம் என்கின்ற என்ஜினியர், சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் என்ற குப்பையை எருவாக ஆக்கும் மிகப் பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார்கள். உலக வங்கியாலேயே பாராட்டப்பட்ட அந்தத் திட்டத்தைச் சிறப்பான திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் நம்முடைய பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய புரஃபசர் பிச்சை அவர்கள் மிகச் சிறந்த விஞ்ஞானத் திட்டம் என்று பாராட்டியிருக்கிறார்கள். இப்படி உலகத்திலேயே சிறந்த திட்டமாக இருக்கின்ற, அந்தத் தமிழறிஞருடைய திட்டத்தை யார் புறக்கணிக்கிறார்கள், அவருடைய திட்டத்தை ஏற்காத காரணம் என்ன, இடையிலே இருப்பவர்கள் யார், இதற்குத் தடையாகப் பின்னாலே இருப்பவர்கள் யார் என்று நாம் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய சென்னை மாநகரத்திலேயிருந்து குரல் கொடுத்தான், மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு என்று. அதே சென்னையில் நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும் என்று வள்ளல் பெருமான் அவர்கள் சொன்னார்கள். மருந்து இல்லாமலேயே இந்தச் சமுதாயத்தை நல்லபடியாக வைக்க முடியும் என்று சொன்ன அந்தச் சென்னையில்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை தயவுசெய்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் இன்னொன்றையும் சொல்வதற்கு நான் கடமைப் பட்டு இருக்கிறேன். எலக்ட்ரிகல் கிரிமேஷன் என்று இரண்டு இடுகாட்டிலே—சுடுகாட்டிலே அமைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த இரண்டும் வேலை செய்யவில்லை. இரண்டு இலட்சம், இரண்டு இலட்சம் என்று வாங்கி அவைகள் வேலை செய்யாமல் இருக்கின்றன. மேலும், 4, 6 எலக்ட்ரிகல் கிரிமேஷன் அமைக்கப் பட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள், மாநகராட்சியின் செயல்களில். அந்தச் செயல்கள் வரும்பொழுது அவைகளும் இயங்காமல் போகுமா என்பது தெரியவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபொழுது தயவு செய்து அதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஏ.சி. திரையரங்குகளிலே மக்கள் சினிமாப் பார்க்கின்ற பொழுது ஏ.சி.யை உடனே அணைத்துவிடுகிறார்கள். படம் பார்க்கின்ற அந்த வேகத்திலே ஏ.சி. வேலை செய்கிறதா இல்லையா என்று தெரியாமலேயே படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம், அப்படிப்பட்ட திரையரங்கங்களிலே குளிர் சாதன அளவு மானி என்ற கருவியை வைக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. அந்த ஆணையை, 2357 ஓ—சினிமா டிபார்ட்மெண்ட், 11-11—83 அன்று வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் திரைப்பட உரிமையாளர்கள் யாரும் இதுவரையில் அப்படிப்பட்ட கருவியை வைக்கவில்லை. ஆகவே, ஏ.சி.யை அணைத்தவுடன், திரைப்படம் பார்த்துக்கொண்டிருக்கின்ற தாய்மார்களின் குழந்தைகளுக்கு ஆக்சிஜன் குறைவினால் ஒருவிதமான கிடினெஸ், ஒரு மயக்கம் ஏற்படுகிறது; சிலவிடங்களிலே மரணம்கூட உண்டாகிவிடலாம். அப்படியொரு துர்பாக்கியமான நிலைமை ஏற்படுமேயானால் நமக்கு மிகுந்த கவலையை அது அளிக்கும் விஷயமாக இருக்கும். எனவே, எல்லாத் திரையரங்குகளிலும் குளிர் சாதன அளவு மானியைப் பொருத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படங்களைப் பார்ப்பதற்காகக் காரிலே வருகின்றவர்களிடமிருந்து இரண்டு ரூபாய் கட்டணமும் ஸ்கூட்டரிலே வருகின்றவர்களிடமிருந்து ஒரு ரூபாய் கட்டணமும், சைக்கிளில் வருகின்றவர்களிடமிருந்து 50 காசு கட்டணமும் வசூலிக்கிறார்கள். ஆனால் அப்படி வசூலிக்கின்றபொழுது எந்தவிதமான ரசீதுகளையும் அதற்காகக் கொடுப்பதில்லை; ஆனால் ஒரு டோக்கனைத் தருகிறார்கள். நான் கேட்கிறேன், மூன்று ரூபாய், இரண்டு ரூபாய் என்று கொடுத்து திரைப்படம் பார்க்க வருபவர்கள் ஸ்கூட்டர் ஸ்டாண்டுக்கும், கார் ஸ்டாண்டுக்கும் 1 ரூபாய் இரண்டு ரூபாய் என்று கொடுப்பது நீதியா? அப்படி வாங்கப்படும் பணத்திற்கு முறையான கணக்கை அரசினிடத்தில் காட்டுகிறார்களா? அதற்குக் கணக்கு வைத்திருக்கிறார்களா? அதற்கு வருமானவரி கட்டுகிறார்களா? ஆகவே, கறுப்புப்பண சந்தையாக இது மாறிவிட்டதா? அப்படி வசூலிக்கின்ற தொகையை, நம்முடைய மாநகராட்சி நிர்வாகமே ஒரு தனி அலுவலரைப் போட்டு வசூலித்தால், அது மக்களுக்குப் போய்ச் சேரும். இல்லாவிட்டால் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களிடம் அப்பணியை ஒப்படைக்கலாம். (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11-10)

உணவு விடுதிகளுக்கென்று அரசு ஒரு சட்டம் போட்டிருக்கிறது. உணவு விடுதிகளில் சுகாதாரம் இல்லை. Corporation should make a bye-law under Section 107 of the Tamil Nadu Public Health Act, என்கின்ற அந்தச் சட்டத்தை மதிக்காமலேயே நம்முடைய உணவு விடுதிகள் இயங்குகின்றன. அந்தச்

சட்டத்தை மதித்து அவர்கள் நடந்தால், அங்குள்ள தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள். அது மட்டுமின்றி அங்கு ஈ எறும்பு இல்லாமல், கரப்பான் பூச்சிகள் இல்லாமல் மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வராமல் மக்களைக் காப்பாற்ற முடியும். அரசாங்கம் போட்ட சட்டத்தை, மாநகராட்சி ஒரு பை லாவில் போட்டு, அந்த உணவு விடுதிகளுக்கு அனுப்ப வேண்டும். ஆனால், அத்தகைய ஒரு சூழ்நிலை இதுவரையில் உண்டாக்காமல் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அடுத்து, மலேரியா துறையில் வேலை செய்கிற தொழிலாளர்கள் 6 மணிக்கு வந்து 1 மணிக்குச் சென்று விடுகிறார்கள். 1 மணிக்குப் பிறகு தனி வேலைகளைக் கவனிக்கிறார்கள். தனி வேலையில் பணம் வரும்போது, இது பென்ஷன் வேலை தானே என்ற ஒரு கருத்தில் அக்கறை இல்லாமல் செய்கிறார்கள். ஆகவே, கன்சர்வன்ஸி பணியாளர்களுக்கு வைத்திருக்கிற வேலை நேரத்தை — காலை $6\frac{1}{2}$ முதல் $10\frac{1}{2}$ வரை, மாலை $2\frac{1}{2}$ முதல் $4\frac{1}{2}$ வரை என்று இவர்களுக்கும் வைக்க வேண்டும்.

சவுன்ட் பொலூஷன் சென்னை நகரத்திலே அதிகமாக இருக்கிறது. லாரிகளில் வாக்குவம் ஏர் ஹாரன் வைத்து, அதனால், அதிகமான சவுன்ட் பொலூஷன் வருகிறது. லாரிகளில், பெட்ரோலில் கெரோசின் கலந்து, அதனால் புகை வந்து, ஏர் பொலூஷன் உண்டாக்குகிறார்கள். அவை நோய்களுக்குக் காரணமாக இருக்கின்றன.

''எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்''

என்று திருவள்ளுவர் சொன்னதைப் போல, நோய்க்குக் காரணமாக இருக்கிற இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சாலைகள் எல்லாம் சரியாக இல்லை. பாம்புகள் போல வளைந்து இருப்பதைப் பார்க்கிறோம். அவற்றைச் சரி செய்ய வேண்டும்.

நகராட்சிப் பள்ளிகளிலே, மாநகராட்சிப் பள்ளிகளிலே, கல்வியின் தரம் உயர, கல்வித் துறை ஆய்வாளர்கள், குறிப்பாக, பள்ளி மேற்பார்வை ஆய்வாளர்கள், அதிகமாக ஆய்வு செய்ய உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.... (மணியடிக்கப் பெற்றது)

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பதற்காக அரசாங்கம் ஏற்கனவே பிறப்பித்திருக்கும்படியான அவசரச் சட்டங்களை முழு சட்டமாக்குவதற்கு இப்பொழுது நமது அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டங்களை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றக் கேட்டிருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே



இப்படிப்பட்ட நீடிப்பு சரியல்ல என்று நாங்கள் எதிர்த்தோம். நாங்கள் எதிர்த்ததனுடைய காரணம் எல்லோருக்கும் தெரிந்த காரணம்தான்; ஆளுகிற கட்சியினருக்கும் தெரியும், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

நான் குறிப்பாக, கோவை மாநகராட்சியைப் பற்றி மட்டும் சில விவரங்களைச் சொல்லி, முடித்து விடுகிறேன். எல்லா மாநகராட்சிகளுக்கும் அதே போலத்தான், இப்பொழுது, அவசரச் சட்டங்களை ரீப்ளேஸ் பண்ணி முழு சட்டமாக ஆக்குவதற்கு சட்டங்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து கவுன்சில்களுக்கும் அப்படித்தான்.

கோவை மாநகராட்சி ஆரம்பித்த 3 வருஷத்திற்குள்ளே, அதற்குத் தேர்தல் நடத்தி, கவுன்சில் மன்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவாதத்தோடு, தனி அதிகாரி நியமிக்கப் பட்டிருக்கிறார். அப்படிச் சொல்லி $3\frac{1}{2}$ வருஷம் ஆயிற்று, 4 வருஷம் ஆயிற்று; $4\frac{1}{2}$ வருஷம் ஆயிற்று; இப்பொழுது 5 வருஷத்திற்கு நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது. அப்படி இப்பொழுது சட்டம் நிறைவேற்றப் போகிறோம், அந்த 5 வருஷத்திற்குப் பிறகும் என்ன நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பை ஏற்று, இந்த அவையிலே வந்து பேசுகிற நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். இப்பொழுது அதை நினைவு படுத்துகிறேன். 'நான் குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடத்தவில்லையென்றால், என்னுடைய பதவியை ராஜிநாமா செய்து விடுவேன்' என்று அவர்கள் இங்கே பேசினார்கள். அப்படி அவர்கள் குறிப்பிட்ட தேதியையும் மாற்ற வேண்டிவந்தது, அதற்குப் பிறகும் மாற்றப்பட்டு வந்தது. இன்றைக்குத் தேதிகள் அறிவிக்கப்பட்டு, இப்பொழுது மனுக்கள் தாக்கல் பண்ணும்படியான நாட்களை 3 நாட்கள் அதிகப்படியாக நீட்டித்து இருக்கிறார்கள், தேர்தல் நடக்கும், நிச்சயமாக நடக்கும், நடக்காமல் போகாது என்ற அறிவிப்பு உறுதியாக, பல வார்த்தைகளில் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறோம்; ஆனால், இன்றைக்கும் என்ன நிலைமை? சந்தேகம், சந்தேகம் என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். சந்தேகம் அல்ல, யதார்த்த நிலை தான். சென்னை உயர்நீதிமன்றத்தில் அந்த ரிட் மனுவுக்கு அனுமதி அளிக்காமல் நிராகரித்தார்கள். நல்லது. ஆனால் மறுபடியும் அதன் மீது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்களா? இல்லையா? போய் இருக்கிறார்கள். அங்கே என்ன நடக்கும் என்று தெரியாது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இது எல்லாம் ஏன் நடக்கிறது? சிலர் இப்படி பண்ணுகிறார்கள், சிலர் ஏதோ செய்கிறார்கள், அங்கே இப்படி நடக்கிறது, இங்கே அப்படி நடக்கிறது என்று பேசிப், பேசி சிவலிங்கத்தைத் தடவுவது போல செய்து பயனில்லை இது தான் இன்றைய யதார்த்த நிலையாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் ஏன் தேர்தலை நடத்தி மக்களுடைய பிரதிநிதிகள் கையிலே பொறுப்பை ஒப்படைக்கவில்லை? ஜனநாயக நெறிமுறையை ஏன் இப்படி வதை செய்ய வேண்டும்? உரிய காலத்தில் தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கையில் உரிமையை ஒப்படைப்பது ஒரு அரசின் கடமை இல்லையா அதை ஏன் செய்யவில்லை? நாங்கள் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம், மற்றவர்கள் இப்படிச் செய்து விடுகிறார்கள் என்று எத்தனை நாளைக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியும்? எத்தனை தடவை இப்படி உருவாக்க முடியும்? அது அம்பலப்பட்டுவிடும், ஜனங்கள் மத்தியில் இடம் பெறாது. காலாகாலத்தில தேர்தலை நடத்துவதற்கான அஸ்திவாரத்தைப் போடாமல் இப்படிப்பட்ட சட்டங்களைப் போட்டு, வளைத்து, வளைத்து, ஒடித்துக்கொண்டு போகக்கூடிய அளவுக்கு ஏன் செய்கிறீர்கள்? இப்படிப்பட்ட காரியங்களினால் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியவில்லை.

கோவை மாநகராட்சியை எடுத்துக் சொண்டால் ஒரு ஆலோசனைக் கவுன்சில் கூட இல்லை. முன்னால் ஆலோசனைக் கவுன்சில் இருந்தது. ஆலோசனைக் கவுன்சில் கூட இல்லாதது மிகப் பெரிய கொடுமை. நான் இதுபற்றிக் கேட்டபோது அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். 'கட்டாயம் ஆலோசனைக் கவுன்சில் உருவாக்கப்பட நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அப்படி என்றால் நிர்வாகத்தை யார் நடத்துகிறார்கள்? அங்கே இருக்கிற தனி அதிகாரி, கமிஷனர், இன்சினீயர்கள் கொண்ட ஒரு கமிட்டியை அவர்களே வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் இன்றைக்கு நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், இருக்கிற இந்தச் சூழ்நிலையில், அதிகாரிகள் ஆட்சி நடத்துகின்ற நேரத்தில், இப்போது புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற அந்தக் கார்ப்பரேஷனுக்கு எக்கச்சக்கமான பிரச்சனைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற வளர்ச்சியுற்ற பகுதிகள் இருக்கின்றன. புதிதாக அவற்றோடு சேர்க்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகள்—வளர்ச்சியடையாத பகுதிகள்—இருக்கின்றன. புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் எல்லாம் மாநகராட்சி எல்லைக்குள் அவர்கள் வந்தவுடனே என்ன கேட்கிறார்கள்? வளர்ச்சியுற்ற பகுதிகளில் இருக்கிற மாதிரி ரோடு வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி, பள்ளிக்கூட கட்டிட வசதி, டிஸ்பென்சரீஸ் வசதி போன்ற எல்லா விதமான வசதிகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த அடிப்படைத் தேவைகளை அவர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள், கேட்கிறார்கள்.

புதிய பகுதிகள் கார்ப்பரேஷன் எல்லைக்குள் வந்தவுடன் அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் பல்வேறு வரிகளைப் போட்டிருக்கிறார்கள். வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள், தண்ணீர்



வரி போட்டிருக்கிறார்கள். இப்படி எல்லா வரிகளையும் போட்டிருக்கிறார்கள், இந்த வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. வரியை உயர்த்தினால் வசதி பெருக வேண்டாமா? அந்த மக்களிடம் அதிகாரிகள் பேசி, நியாயமான பதிலைச் சொல்ல வேண்டாமா? அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நிரந்தரமான திட்டத்தைப்போட்டு, காரியங்களைச் செய்ய வேண்டாமா? இந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்கிறது? அரசாங்கம் அல்லது அமைச்சர்கள் அந்த அதிகாரிகளிடம் சொல்லி, இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டாமா? இதுவரையில் அப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகையால் இது ஜனங்கள் மத்தியில் பிரதிபலித்து, அதிருப்தி ஏற்படுகிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற போது ஜனங்கள் மத்தியிலே நாங்கள் சென்று ஓட்டு கேட்க முடியவில்லை, அவர்களுடைய குறைகளைத்தான் கேட்க முடிந்தது. சட்டமன்றத்தில் மக்களைப் பாதுகாக்க என்ன என்ன சட்டங்களை உருவாக்க வேண்டும், என்னென்ன திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம், எதுவும் நடப்பதில்லை. மாநகரத்தில் இருக்கிற குறைகளை எடுத்துச் சொல்கிறோம். அடிப்படைத் தேவைகளைப் பற்றி ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திலும் சொல்கிறோம். எதுவும் நடக்காத காரணத்தால் நாங்கள் மக்கள் மத்தியில் போக முடியவில்லை; மக்கள் எங்களை தடுத்து நிறுத்தி, கேள்விகள் கேட்டு பதில் வாங்குகிறார்கள். நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று தெரியல்லை. இன்றைக்கும் அந்த நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. அண்ணா தி.மு.க. ஆட்சி எப்போது உள்ளாட்சித் தேர்தலை நடத்தும்? எப்போது மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ளாட்சி நிர்வாகம் ஒப்படைக்கப்படும்? யாருக்கும் தெரியாது. இதிலே குரோதம், விரோதம் கிடையாது. அந்த மக்களுடைய மனம் அப்படி இருக்கிறது. யதார்த்த நிலை அப்படி இருக்கிறது. இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு எவ்வளவு சிக்கிரமாக தேர்தலை நடத்தமுடியுமோ அவ்வளவு சிக்கிரமாக நடத்த வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை செய்யாமல், சட்டம் கொண்டுவந்து தேர்தலைத் தள்ளி வைப்பதற்கான வழிவகை இருக்கிறதா என்றுதான் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில், இந்த மன்றத்திலேயே அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். இப்போதும் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. அப்போதே நான் குறிப்பிட்டேன். இப்போதும் நான் குறிப்பிட விரும்புகிறேன், தேர்தல் வரும் என்று இன்றைக்கும் நாங்கள் நம்பவில்லை; தேர்தல் நடந்தால்தான் நம்புவோம் என்று.

அப்போது அவரே கேட்டார் என்னிடத்திலே நம்பிக்கையே இல்லையா என்று. ஆனால் சொல்லைவிட செய்கை மேல் என்பது தான் என்னுடைய கருத்து. இவ்வளவுதான் சொல்ல முடியும். இன்றைக்குப் போட்டிருக்கின்ற சட்டத்தின்படி மாநகராட்சிக்கு ஆபத்துதான். ஏனென்றால் 6 மாதத்திற்குப் பிறகு என்ன நிலைமை நாட்டிலே இருக்கும் என்பதை யார் கண்டோம்? என்ன நெருக்கடி இருக்கும் எப்படிப்பட்ட நிலைமை உருவாகும் என்பது யாருக்குத் தெரியும்? மறுபடியும், மறுபடியும் 6 மாதம் என்று தள்ளி வைக்கப்படுகிறது இப்படி. ஆறாறு மாதத்திற்கு என்று தவணை தாண்டுவதைப் போல தாண்டிக்கொண்டே இருப்பதால் எத்தனை காலத்திற்குத்தான் தாண்டும் என்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறதே என்ற ஒரே எண்ணத்திற்காக மட்டும் நாங்கள் இதை எதிர்க்கவில்லை. இருக்கும்படியான நிலைமையைப் பார்க்கின்றபோது எங்களுடைய கருத்து இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

எனவே இந்த நடைமுறை ஜனநாயகத்திற்கு ஒத்துவராது, இது சரியல்ல. ஆகவே ஜனநாயக முறைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அப்படி நிலைநாட்டினாலும் கூட பல தொல்லைகள் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அந்த மக்கள் கவனித்துக் கொள்ள வழி இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளிடத்தில் அவர்கள் பேச முடியும். ஆனால் இன்றைக்குள்ள நிலைமையில் அவர்கள் அப்படிப் பேச முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற நிலைமையில் நாங்கள் இருப்பதன் காரணத்தால் எங்களிடத்திலே கண்ட, கண்ட இடத்தில் அவர்களால் பேச முடியுமே தவிர அதிகாரிகளிடத்திலே போய் அவர்களால் பேச முடியாது. அப்படிப் பட்ட நிலைமை இருப்பதால் தான் இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வருவதை நாங்கள் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துக் கொண்டு இருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்காவது நீங்கள் மாநகராட்சிக்கு எப்போது தேர்தல் நடத்த முடியும் என்ற வகையில் ஒரு மாதமோ அல்லது தேதியோ குறிப்பிட்டுச் சொல்ல உங்களால் முடியுமா? அப்படிச் சொன்னால் அதையாவது காதில் கேட்டுக்கொள்ளலாம். அதையாவது தமிழ்நாட்டு ஜனங்கள் உணர்ந்துகொள்வார்கள். எனவே அதை யாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டம் பாஸ் ஆகும்போது சொல்வார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டே போவது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து. இது ஜனநாயகத்திற்கு ஒத்தது அல்ல என்பதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஆகியவற்றின் தனி அதிகாரிகள் நியமனத்தை நீட்டித்துக் கொண்டு போகிற வகையில் இந்தச் சட்டங்கள் கொண்டு



வரப்பட்டிருக்கின்றன. இவைகளை எதிர்த்துக் கொடுக்கப்படுகின்ற தீர்மானத்தை ஒட்டி ஓரிரு கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன். இவ்வாறு தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டே இருப்பது நியாயமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் நியாயம் இல்லை என்று ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் காலத்தின் காரணமாக, காலக் கட்டாயத்தின் காரணமாக ஆதி திராவிட மக்களுக்கு உதவி செய்யவேண்டும், அவர்களுக்குரிய மரியாதை செய்யவேண்டும் என்ற காரணத்தால்தான் தனி அதிகாரிகள் நீட்டிக்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்பட்டது.

சென்ற செப்டம்பர் மாதத்தில் தேர்தலை நடத்தி உள்ளாட்சித் துறை அமைப்புக்களுக்கு உரியவர்களைக் கொண்டுவரவேண்டும் என்ற வகையில், நாங்கள் எல்லாம் தேர்தலுக்கு ஆயத்தமாகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் உறுதியாகச் சொன்னதற்குப் பிறகு ஓராண்டு கடந்ததற்குப் பிறகு நாம் தேர்தலை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போதும்கூட அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னால் மூன்று நாட்கள் அதிகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் சொல்கிறபோது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்காகத் தான் இவ்வாறு நாட்களை எல்லாம் நாங்கள் நீட்டித்திருக்கிறோம் என்றெல்லாம் அறிவித்திருக்கிறார்கள்.

நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒரு கோர்ட்டுக்கு மட்டும் அதிகாரம் இருக்கின்றது என்பதல்ல; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த வசதி வாய்ப்புக்களைத் தருவதற்கு அந்த வகையில் அவர்கள் இன்னும் பல கோர்ட்டுகளுக்குச் செல்லவேண்டி இருக்கிறது. இன் ஜக்ஸன் பெஞ்ச் இருக்கிறது. ஃபுல் பெஞ்ச் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் இருக்கிறது. இப்படி குறைந்தது 5 அப்பீல்கள் வருமானால் ஒரு அப்பீலுக்கு நான்கு நாட்கள் என்று வைத்துக் கொண்டாலும்கூட இன்னும் 20 நாட்கள் நீட்டித்துக்கொடுத்தால் வசதியாக இருக்கும். ஆதிதிராவிட மக்களின் நலனிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிற அரசு அந்த வகையிலே ஒரு நாட்கள் என்று நீட்டித்துக் கொடுத்தால்தான் அது முழுமனதான உதவி யாக இருக்கும். எதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு செய்யக்கூடிய அமைச்சர் அவர்கள் இதை ஏனோ இவ்வாறு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆதிதிராவிட மக்களுக்காகத்தான் இவ்வாறு நீட்டித்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்வது உண்மையாக இருந்தால் சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்தினால் அதன்மூலம் தாழ்த்தப்பட்டவர் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. எனவே இட ஒதுக்கீடு என்பது இல்லை என்றாலும்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றால் ஏன் மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்த வில்லை? இங்கே அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக வருவதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமையிலே கூட அவர்களுக்கு வாய்ப்பு வருகின்ற வகையில் அதிகமாக இடம் வைத்திருக்கிறோம், அதிகமாக வருவார்கள் என்றெல்லாம் உத்தரவாதம் தந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பேரூராட்சியினைப் பொறுத்தவரையில் இதுவரை தாழ்த்தப்பட்டவர் இருந்த ஒரு தொகுதி இன்றைக்கு இல்லாமல் செய்யப்பட்டிருப்பதுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மரியாதையா என்பதை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எனவே தாழ்த்தப்பட்டவர்கள் மீதும், மற்றவர்களின் மீதும் பழியைப் போட்டு பழியைப் போட்டு, இந்த கால நீட்டிப்பு செய்வதன் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பது கிராமப்புறத்து மக்கள் தான். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக தள்ளி வைக்கப்படுவதாகச் சொல்லும் அந்த உள்ளாட்சி அமைப்புகள் அரசியல்வாதியின் அதிகாரிகளின் கொள்ளைக் கூடாரமாக ஆகிக் கொண்டிருக்கின்றன. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டதற்குப் பின்னாலும் கூட முறையாக கிராமப்புற சாலைகள் பராமரிக்கப்படவில்லை. பாதுகாக்கப்பட்ட சுகாதாரத்தோடு கூடிய நல்ல குடிதண்ணீர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. தெரு விளக்குகள் எரிவதில்லை, இப்படிப் பல குறைபாடுகள் இந்த ஊராட்சி மன்றங்களில் நகராட்சிகளில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன என்று சொன்னால், இதற்குக் காரணம் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகள் அம்மன்றங்களில் இல்லாததுதான். அப்படி ஜனநாயகத்தினுடைய கடைசித் தொட்டிலாக இருக்கக் கூடிய உள்ளாட்சி அமைப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரமுடியாத நிலையிருப்பதன் காரணத்தினாலே, சீரழிந்து கொண்டிருக்கின்றன.

இப்படி சீரழிந்து கொண்டிருக்கின்ற மன்றங்களிலே, தனி அதிகாரிகளை வைத்து நடத்துவதனாலே பிரச்னைகள் தீர்ந்து விடவில்லை. தண்ணீர் தட்டுப்பாடு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது, அரசியல்வாதி அதிகாரிகளின் வாழ்க்கை சிறப்படைந்து கொண்டிருக்கிறதே தவிர, உள்ளாட்சித் துறையின் மூலமாக கிராமப்புறத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகள் கிடைக்காமல் கிராமங்களே பாழ்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி பாழ் அடைவதற் காகவா அதிகாரிகளைத் தொடர்ந்து நியமித்துக் கொண்டு வருகிறீர்கள்? அதுதான் நியாயம் என்று சொன்னால் இப்படித் தான் இந்த ஆட்சி தொடர்ந்து அக்கிரமங்களையும் அநியாயங் களையும் வளர்த்துக் கொண்டிருக்கும் அதிகாரிகளைப் பெருக்கிக் கொண்டேயிருப்பார்களோ என்று மக்கள் தவறாக நினைத்துக் கொள்ள அது வாய்ப்பாக இருக்கும்.





காரணம் உண்மை என்று சொன்னால், நீங்கள் சொல்கிற சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு கட்டாயமாக தாழ்த்தப்பட்ட நடவடிக்கை என்று மரியாதை கொடுக்கத்தான் இத்தகைய வழக்கிற்கு, எத்தனை சொன்னால், சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற தீர்ப்பு விரைவிலே முறை தீவிர முயற்சி எடுத்து அதற்கான மேற்கொண்டீர்கள்? அந்த தரப்படும் வகையில் பணிகளை எடுத்திருக் வகையில் இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை தடையாக கிறதா? ஒதுக்கீடு கொடுப்பதற்கு அந்த வழக்கு நடத்த இருக்கிற காரணத்தினால்தான் உள்ளாட்சி தேர்தலை என்று முடியவில்லை, அதனால் தீர்ப்பை விரைவுபடுத்துங்கள் முயற்சியாவது இந்த அரசு கேட்டிருக்கிறதா? அல்லது அதற்கு எடுத்திருக்கிறதா?

சமுதாயத்திற்கு மரியாதை உண்மையாக தாழ்த்தப்பட்ட நினைத்திருந்தால் சுப்ரீம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு காத்திருந்து தேர்தலை கோர்ட் தீர்ப்பு வருகிற வரையில் அவர்களுக்கு மரியாதை நடத்துவதுதான் சரியான முறையில் நான் ஏற்றுக் கொடுத்ததாக ஆகும் என்பதை உளப்பூர்வமாக சொன்னால், ஏதோ கொள்ள முடியும். அப்படி இல்லை என்று தாழ்த்தப்பட்ட மரியாதை கொடுக்கிறோம் என்ற பெயரால் சொல்வதற்கு—பயன்படுத்திக் சமுதாயத்தை—சாக்கு போக்குச் சரியான கொள்கிறவகையில், காலத்தைப் போக்குவதற்கு ஒரு அதிகாரி வழியாக பயன்படுத்திக் கொண்டு, அரசியல்வாதிகள்— வசதியாக களின் கொள்ளை கூடாரங்களைப் பெருக்கிகொள்வதற்கு தவிர, கால நீட்டிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே மரியாதை மனப்பூர்வமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு முடியாது. கொடுப்பதாகச் சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள

தொடர்ந்து நீங்கள் செய்து இப்படிப்பட்ட தவறுகளைத் பழி தீர்ப்பதற்காகத் கொண்டிருந்தால் கிராமத்து மக்களை நீங்கள் முடிகிறது. தான் இப்படிச் செய்கிறீர்கள் என்று என்னால் கருத வசதிகள் ஏனென்று சொன்னால் கிராமப் பகுதிகளில் சாலை இருந்தாலும் சரி, சரியாக இருப்பதில்லை. அது எந்த இடமாக நிதி ஆதாரமும் அத்தோடு அவற்றைப் பராமரிப்பதற்கு தேவையான அப்படி பல பல ஊராட்சி ஒன்றிய மன்றங்களிலே இல்லை. கொள்ளை அடிக்கப் ஊராட்சி மன்றங்களிலே நிதி ஆதாரங்கள் வசதியும் அற்று பட்டிருப்பதனாலே மக்கள் எந்தவித அடிப்படை திட்டங்களை இருக்கிறார்கள். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. அமைப்பு ஏற்று செயல்படுத்துகிற நேரத்திலும் கூட முறையான சீரழிக்கப்பட்டுக் இல்லாத காரணத்தினால் அந்தப் பணம் எல்லாம் அந்தப் பணம் கொண்டிருக்கிறது. சீரழிந்து கொண்டிருப்பது அதனால் சீரழிந்து மட்டுமல்ல, கிராமப்புறத்து மக்களே கவனத்திற்குக் கொண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் வர விரும்புகிறேன்.

இப்படி தவறுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மக்களுக்கு ஆதரவு காட்டவா நீங்கள் தனி அதிகாரிகளை நியமித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அது உண்மையிலேயே ஆதிதிராவிட மக்களின் மீது கொண்ட அக்கறை காரணமாகவா இப்படி கால நீட்டிப்பு செய்து வருகிறீர்கள். அந்த உள்ளாட்சி அமைப்புகளில் உண்மையாகவே அந்த மக்களின் பிரதிநிதிகள் வரவேண்டும் என்பதுதான் உங்கள் எண்ணமாக இருந்தால், உங்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், 2 ஆண்டுகள் பொறுத்திருந்து, அந்தத் தீர்ப்பை எதிர்பார்த்திருந்து, அதன் பிறகு இந்த நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கவேண்டும் என்கிற நியாயமான குற்றச்சாட்டை இந்த அரசின் மீது நான் சுமத்தி, உடனடியாக நீங்கள் தேர்தலை நடத்த வேண்டும். இனிமேலும் இத்தகைய சாக்குபோக்குகள் சொல்லிக் கொண்டே போகக்கூடாது என்று சொல்லி, கிராமப்புறத்து மக்களிடத்திலே உண்மையாகவே அக்கறை கொண்டு, வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு இந்த அரசு உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டு, இப்படிப்பட்ட திருத்தங்கள் செய்வதை நாங்கள் முன்கூட்டியே எதிர்த்திருக்கிறோம். இன்றைக்கும் எதிர்க்கிறோம். இப்படி தனி அதிகாரிகளை வைத்து ஜனநாயக அமைப்புகள் நடத்துவதை நாங்கள் தடை செய்யும் வகையில் முன்கூட்டியே தடங்களை செய்திருக்கிறோம். இனிமேலாவது இந்த அரசு தடையில்லாமல் உடனடியாக உள்ளாட்சி தேர்தல்களை நடத்துவதற்கு முன் வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நகராட்சி ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு கொண்டு வந்த அவசரச் சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்பட்ட இந்த சட்ட முன் வடிவுகள், இதுவே கடைசி நீட்டிப்புச் சட்டங்களாக இருக்க வேண்டும் என்று முதலிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில், நகராட்சிகளில் கடந்த 10 ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதனால், எந்த வேலையும் சரியாக நல்ல முறையில் ஒழுங்காக நடைபெறவேயில்லை. என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஆத்தூர் நகராட்சியை எடுத்துக்கொண்டால், அங்கே வாரத்திற்கு இரு முறைதான் குடிதண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. அதைப் போலவே குப்பைகள், சாக்கடைகள் கழிவுநீர் அகற்றுவது போன்ற பணிகள் ஒழுங்காக சரியான முறையில் செயல்படவில்லை.

(முற்பகல் 11-30)

சீர்கேடுகள் பல நடந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே தேர்தல் நடந்தால்தான் ஜனநாயக அமைப்புகள் நல்லமுறையில் இயங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். மக்களுடைய குறைகளைப்



போக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கிறது.

சாலைகளைப் பொறுத்தவரையில், சாதாரண ஜல்லியைப் போட்டால் போதுமென்ற அளவில் வேலையை செய்கிறார்கள். அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களைக் கேட்டால் அவர்கள் எந்த வேலையும் முறையாகச் செய்வதில்லை. குடி தண்ணீர் பொறுத்தவரைக்கும் பார்த்தால் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரே ஒரு எலக்ட்ரிஷியன் தான் நியமித்து உள்ளார்கள். ஏற்படுகிற ரிப்பேர் சரிசெய்வதற்கு அந்த எலக்ட்ரிஷியனிடம் தான் கொட்டேஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு ஊரிலே மின் மோட்டார் பழுதடைந்து விட்டால் அதைச் சரிசெய்வதற்கு பல மாத காலம் ஆகிவிடுகிறது. இதுபோன்ற குறைகள் இந்த தனி அதிகாரிகள் இருப்பதால்தான் ஏற்படுகிறது. மாதக்கணக்கிலே பணிகளை கிடப்பிலே போட்டு விடுகிறார்கள். 1000 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டுமென்றால் டி.டி.ஓ.-விற்கு பேப்பர் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சி மாவட்டமாக இருக்கிறது. அங்கே குடிதண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. ஒரு ஊராட்சியில் கிட்டத்தட்ட 100 ஆழ்துளை கிணறு இருக்கிறதென்றால் ஒரே ஒரு ஃபிட்டர் போதுமென்று சொல்கிறார்கள். இருக்கிற ஒரு ஃபிட்டரால் அத்தனை வேலையையும் சரிவரசெய்யமுடிவதில்லை. இதன் காரணமாக குடிதண்ணீர் பொறுத்தவரையில், பணிகள் நடைபெறுவதில் சிரமங்கள் மக்களுக்கு அதிகமாக இருந்து வருகிறது. இந்தச் சிரமங்களைப் போக்குகிற வகையில் இந்த தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தெருவிளக்குகளை எடுத்துக்கொண்டால், அவைகளும் சரிவர எரிவதில்லை. மின்சார இலாக்காவிலே தெரு விளக்குகளை மாற்றும்போது அதற்கு பல மடங்கு கட்டணங்களைப் போடுகிறார்கள். ஒரு முறை ட்யூப் லைட்டுகளை மாற்றினால் அதற்கு இரண்டாயிரம், நான்காயிரம் ரூபாய் என்ற அளவில் ஊராட்சிகள் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் கேட்டு அவர்கள் பல்புகளை மாற்றினால்தான் பொருத்தமாக இருக்கும். அப்படி இல்லாமல் அவர்களாக பணிகளைச் செய்து பில்களை கொடுக்கிறபோது அதற்கான பில் தொகையை கட்டுவதற்கு ஊராட்சி, நகராட்சிகளுக்கு முடிவதில்லை.

அது மட்டுமல்லாமல் 10 15, ஆண்டுகளாகவே ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளின் நிதி நிலைமை சரியாக இல்லை. நிதி நிலைமை பற்றாக்குறையாக இருந்து வருகிறது. அரசாங்கத்தில் ஊழியர்களின் சம்பளத்தை அவ்வப்போது உயர்த்திக் கொண்டே போகிறார்கள். நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும், மற்ற ஊழியர்,

களுக்கும் அந்தச் சம்பள உயர்வை கொடுக்க வேண்டியுள்ளது சில நேரங்களில் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கே நிதி நிலைமை சரியாக இருக்கிறது. ஆகவே அரசு ஏதாவது நிதியுதவியை அளித்தால்தான் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் நல்லமுறையில் செயல்பட முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஊராட்சிக்கு 2 லட்சம் ரூபாய் வருவாய் வருகிறதென்றால் சாலைகளையும், விளக்குகளையும், மற்றவற்றையும் பராமரிப்பதிலேயே பாதித் தொகை செலவாகி விடுகிறது. மக்களுக்குத் தேவையான மற்ற பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்கும்போது, அதிகாரிகள் போதிய பணம் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். ஆகவே குடிதண்ணீர் போன்ற அவசியமான பணிகளைச் செய்வதற்கு ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்து செலவு செய்ய வேண்டுமென்று கேடடுக்கொள்கிறேன்.

என்னுடைய ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மின்சார மோட்டாருக்கு மின் இணைப்பு கொடுத்து ஆறு மாதங்களாகியும் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. காரணம், மின்சார மோட்டார் வைத்தவுடனேயே காயில் தீய்ந்து விடுகிறதென்று சொல்கிறார்கள். ஆகவே இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற குறைகளைப் போக்குவதற்கும், மக்களுக்கு நன்மைகளைச் செய்வதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிப்பதை இத்துடன் நிறுத்திக்கொண்டு, உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவை முன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப் பட்டு இருக்கக்கூடிய, மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், மற்றும் இதுசம்பந்தப்பட்ட 7 சட்டங்களைக் கொண்டுவந்து, தனி அதிகாரிகளுடைய ஆயுட் காலத்தை நீட்டித்துத் தரவேண்டும் என்று இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நானும், நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

குறிப்பாக, நம்முடைய ஆளும் கட்சியின் தரப்பிலே மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். குழந்தைப் பிறந்ததற்குப் பிறகும், சந்தேகப் படுகிறீர்களே, தேர்தல் என்று சொன்னதற்குப் பிறகும் சந்தேகப் படுகிறீர்களே என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவர் களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது, உங்கள் மூலமாக இந்த அவையைக் கேட்டுக் கொள்வது, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. இன்னும் குழந்தை பிறக்க



வில்லை. தியேட்டருக்கு இப்போது கொண்டு போய் இருக்கிறார்கள். எனவே தாயும், குழந்தையும் நலமோடு வெளியே வருவதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல மருத்துவராக பணியாற்றி வெளியே தாயையும், சேயையும் நல்ல முறையில் கொண்டுவருவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் என்றால், பலமுறை கருவுற்று, கருச்சிதைவாகி, இப்போது தியேட்டருக்குச் சென்றிருக்கிறது. அந்தத் தியேட்டரிலிருந்து, தாயும், சேயும், நல்லமுறையில் வருவதற்கான உத்தரவாதத்தை, அவர்களுடைய பதில் உரையில் அளிப்பார்கள் என்று நான் நம்பு கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டது போல், பலவிதமான வதந்திகள், நம்பத் தகுந்த வதந்திகள் வெளியிலே உலவிக்கொண்டு இருக்கின்றன. மீண்டும் இந்தத் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்ற வதந்தி உருவாகியிருக்கிறது. நான் நேற்றைக்கு தஞ்சைக்குச் சென்றிருந்தபோது, பொறுப்பான சிலர் கூட சொல்கிறார்கள். தேர்தல் நடக்காது, ஏன் நீங்கள் அலைந்து கொண்டிருக்கிறீர்கள் என்று. எனவே அப்படிப்பட்ட நிலையில், ஒரு சுகப் பிரசவமாகி, குழந்தை வெளியே வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், வேலைகள் நடைபெறவில்லை. சிறப்பான திட்டங் களை எல்லாம், தன்னிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் நாங்கள் செயல்படுத்தவில்லையா என்று ஆளும் கட்சியினர் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்வது எப்படிப் பொருத்தமானதாக இருக்கும் என்பதை நான் அறிய விரும்பு கிறேன். அப்படி தமிழகத்திலே இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவந்து, திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக மட்டும் பார்த்து இந்த சட்டமன்றம் வேண்டாம். ஆளுநர் ஆட்சியே நடத்தி, நிர்வாகத்தை நடத்திவிடலாம், அது போதும், என்று சொன்னால், யாரும் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அந்த முறையில் நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இல்லாதபோது, சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், அவைகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

குறிப்பாக, இந்தச் சட்டம் துவங்கியது எந்த வருடம் என்று இந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தனி அதிகாரிகள் 1976-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளிலேயிருந்து

பொறுப்புக்கு வந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் என்பது, நமக்கு நன்றாக நினைவு இருக்கும். இந்த நாடு ஒரு அவசரகால நிலையில் இருந்தபோது, தமிழகத்திலே உள்ளாட்சித் துறை அமைப்புகள் தனி அதிகாரிகளின் பொறுப்புக்கு மாற்றப் பட்டது. அவர்கள் பொறுப்புக்கு வந்தபிறகு, தொடர்ந்து தனி அதிகாரிகளுடைய ஆட்சி என்பது ஆண்டுக்காண்டு நீட்டிக்கப் பட்டு, ஒவ்வொரு முறையும், இது அவசரச் சட்டத்தின் மூலமாக நீட்டிக்கப்பட்டு, அதற்குப் பிறகு, சட்டமாக மாற்றுவதற்கு இங்கே பலமுறை கொண்டு வரப்பட்டு இருக்கிறது. தற்போதும் வந்திருக் கிறது. இப்படி நீட்டித்துக் கொண்டே போய், 9 ஆண்டுகள், 9 மாதங்கள் வரையிலும் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டித்திருப்பதாக இந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டு உள்ளது. எனக்குத் தெரிந்த வரையிலும், நம்முடைய அமைச்சர் அவர் களுக்குத் தெரியும், இந்த மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும், மதத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்கள் கூட, ஒரு மனிதனுக்கு சனியன் பிடித்தால், 7½ ஆண்டுகள்தான் அந்தச் சனியன் அந்த மனிதனைப் பிடித்திருக்கும்: 7½ ஆண்டுகள் முடிந்ததற்குப் பிறகு, சனியன் விட்டுவிடும் என்று சொல்வார்கள். ஆனால் நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளைப் பிடித்த இந்த தனி அதிகாரிகள், 9 ஆண்டுகள், 9 மாதங்கள் ஆனதற்குப் பிறகும், விட்டுவிடுவார்களா, என்ற அந்த உறுதிமொழியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிட மிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால், 7½ ஆண்டுக்காலம் ஆன பிறகு, ஒரு மனிதனை இந்த சனியன் விட்டுவிட்டாலும், இந்தத் தனி அதிகாரிகள், 9¾ ஆண்டுகள் ஆகியும், விட்டுவிடுவார்களா என்ற உறுதிமொழியை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால். 9¾ ஆண்டுகள் ஆகிவிட்டதால். பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், அதிலே நடந்திருக்கக்கூடிய பல்வேறு சிரமங்கள், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களை எடுத்துக்கொண்டால், இப்போது கல்வராயன்மலை, இரண்டு ஒன்றியங்களாக அமைக்கப்பட்டு இருக்கின்றது. தென் ஆற்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் அமைந்திருக்கிறது அந்த மலை. அந்த மலைப் பகுதி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாக அமைக்கப்பட்டு இருக்கின்றன. வருகின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல் நிச்சயமாக நடைபெறுமானால், அதற்குப் நடைபெறு இருக்கிறது. ஆனால் அந்த ஊராட்சி ஒன்றியங்களின் கீழ், கிராம மன்றங்கள் கன்பது, கிராம பஞ்சாயத்துக்கள் என்பது; ஊராட்சி ஒன்றியங் களுக்குக் கீழே இருக்கிற, ஊராட்சி மன்றங்கள் என்பது, இன்று வரையிலும் அமைக்கப்படவில்லை.

(முற்பகல் 11-40)

அந்த கல்வராயன் மலையில் வாழ்கின்ற மக்கள் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை ஊராட்சி ஒன்றிய தேர்தலுக்கு வாக்களிக்காத மக்களாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இப்போது ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடக்க இருக்கிறது





இப்போது கூட அவர்கள் ஊராட்சி ஒன்றயத்துற்குத் தான் வாக்களிக்க முடியுமே தவிர, ஊராட்சி மன்றத்திற்கு வாக்களிக்கிற நிலையில் அவர்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் இன்னும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன.

குறிப்பாக என்னுடைய நாகை ஊராட்சி ஒன்றியத்தில்ரோடுகள் முழுவதும் பழுதுபட்டு அந்த ரோடுகள் பராமரிக்கப்படாமல் அந்த ரோடுகளில் சென்று கொண்டிருந்த நகரப் பேருந்துகள் முழுவதையும் ரோடுகள் சரியில்லாத காரணத்தால் நிறுத்தி விட்டார்கள் பேருந்து அதிகாரிகள். ஆனால் அந்த ஊராட்சி மக்கள் முழுவதும் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

அதுபோல் நாகை நகரம் என்பது ஒரு முக்கியமான இடத்தில் இருக்கிறது. பக்கத்தில் நாகூர் இருக்கிறது. அந்தப் பக்கம் வேளாங்கண்ணி இருக்கிறது. உலகத்திலிருந்து பல லட்சக் கணக்கான மக்கள் ஆண்டுதோறும் அங்கே வருகிறார்கள். அதற்குரிய சுகாதார வசதிகள், ரோடு வசதிகள் அந்த நகரத் திற்குச் செய்து கொடுக்க முடியவில்லை. அதன் விளைவாக மிகப் பெரிய அளவுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அதனால் அந்த நகரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு குடிநீரோ, சுகாதார வசதியோ, குப்பைகளை அகற்றுகின்ற வசதியோ, தெரு விளக்குகளோ இல்லாமல் இருக்கிறது. இதனால் அங்கே வரக் கூடிய பல லட்சோப லட்ச மக்கள் சுகாதார கேடுகளுக்கு ஆளாகக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நாகை நகரத்தில் இருக்கிற மேடான பகுதியில் அங்கே ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டவேண்டும் என்று நகராட்சி மன்றம் தீர்மானித்து அதற்கு அங்கே வாட்டர்போர்டும் மேல்நிலைத் தொட்டி கட்டித் தருகிறோம் என்று ஒத்துக்கொண்டு 2 லட்ச ரூபாய் நகர மன்றம் அதற்காக அளிக்க வேண்டும் என்று அவர்கள் உத்திரவிட்டும் அந்த குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகர மன்றம் 2 லட்ச ரூபா கட்டினார்கள். அப்படி அங்கே மேல் நிலைத் தொட்டி கட்டினால் அந்த மேடான பகுதியில் இருக்கக் கூடிய மக்களுக்கு குடிநீர் கிடைக்கும் நிலை இருந்தும், அங்கே பல ஆண்டுகளாக அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதனுடைய வேலை இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. எனவே தான் அங்கே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பு இருந்தால் இதுபோன்ற நிலைமைகள் நிச்சயமாக இல்லாமல் இருந்து இருக்கும். எனவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுவது நிச்சயமாக இப்படியே நீட்டித்துக்கொண்டு போகாமல் இந்த ஒன்பதே முக்கால் ஆண்டு காலமாக இந்த அமைப்புகளைப் பிடித்து இருக்கக்கூடிய அந்த தனி அதிகாரிகளை பொறுப்பிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1986 சனவரி 2

தமிழகத்தில் தண்ணிறைவுத் திட்டத்திற்காக 300 கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியங்களுக்கு செலவு செய்து இருக்கிறோம். இந்த 300 கோடி ரூபாயும் அந்த கிராமப்புற மக்களுக்குப் போய் சேர்ந்ததா? போடாத ரோடை போட்டதாக கணக்கில் இருக்கிறது. அதற்கு என்று ஒரு தனி விசாரணையை, இந்த தண்ணிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கியத் தொகை சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று இருக்கிறதா என்பதை அறிவதற்காக ஒரு விசாரணைக்கு நீங்கள் ஏற்பாடு செய்தால் நிச்சயமாக அந்த கிராம மக்கள் உங்கள் மீது மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். ஏன் என்றால், அங்கே தெரு விளக்குகள் எரிவதே கிடையாது, ரோடுகள் கிடையாது, குடிநீர் கிடையாது.

அங்கே திடீர் என்று ஒரு நாள் வயலில் பாலிடால் என்று மருந்து தெளிக்கும் ஸ்பிரேயரை கொண்டு போய் குளத்தில் கழுவி விட்டார்கள். அந்த குளத்தில் உள்ள தண்ணீரை குடித்த அந்த ஊர் மக்கள் கிட்டத்தட்ட 60, 70 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். இதனால் அந்த கிராமத்திற்கு அதிகாரிகள் எல்லாம் சென்று பார்த்து உதவிகளை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி அந்த மக்கள் குளத்துத் தண்ணீரை, வாய்க்கால் தண்ணீரைக் குடித்து பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத நிலைமை இருக்கிற காரணத்தால் மீண்டும் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது எல்லாம், ஒரு உத்திரவாதத்தை நீங்கள் கொடுக்கவேண்டும். இந்த ஒன்பதே முக்கால் ஆண்டுக்குள் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் முடிந்து தேர்தல் நடைபெறும் என்ற உத்திர வாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, இப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போது அவசரச் சட்டத்தைப் போட்டு ஆயுட்காலத்தை நீட்டித்து, நீட்டித்துவிட்டு அந்த அவசரச் சட்டத்தை அரசியல் சட்டமாக மாற்றுவதற்கு சட்டமன்றத்தை பயன்படுத்துகின்ற நிலைமையை தயவுசெய்து மீண்டும் செய்யவேண்டாம். இதை மாற்றி நேரடியாக இந்தச் சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டுவந்து, ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து, ஆர்டினன்ஸ் போட்டு பிறகு ஆக்ட்-ஆக மாற்றுங்கள். நேரடியாக ஆக்ட்-ஆக கொண்டு வரக்கூடிய மரபை அமைச்சர் அவர்கள் காலத்திலாவது ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல் பற்றிய சட்ட முன்வடிவின் மீது பேச வாய்ப்டளித்தமைக்கு ஜனதாக் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



1986 சனவரி 27] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

உள்ளாட்சித் தேர்தல், நகராட்சிகளுக்கு 1969-இலு , பஞ்சாயத்துக்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1970-இலும் நடந்தது. அதன் பிறகு இதுவரைக்கும் நடைபெறவில்லை. எத்தனையோ சட்டங்கள், தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீடித்து, நீடித்து, 6 மாதம், ஒரு வருஷம் என்று எது பொருந்துமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட, 27-ஆம் தேதி வரைக்கும் இருக்கக்கூடிய வேட்பு மனு தாக்கல் தேதியை 30-ம் தேதி வரை நீட்டித்து இருக்கிறார்கள்.

உயர்நீதிமன்றத்திலே 24-ஆம் தேதியே தீர்ப்புச் சொல்லியாகி விட்டது. அதற்குப் பிறகு உங்களுக்கு 3 நாள் டைம் இருக்கிறது. 25, 26, 27 ஆகிய மூன்று நாள் டைம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, எதற்காக மேலும் 3 நாட்கள் நீடித்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

இதுபற்றி வெளியே பேசப்படுவது எல்லாம், இந்த 3 நாள் இடைவெளியை வைத்து, சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு ஒன்று தாக்கல் செய்வார்களோ என்ற அச்சம் இருப்பதாக பேசப்படுகிறது. ஆளும் கட்சியினுடைய கூட்டுப் பேச்சுகள் இன்னமும் சரியாக முடிவடையவில்லை, ஆளும் கட்சியினுடைய ஜாபிதாக்கள் தயாராகவில்லை, இந்தத் தகராறுகளின் காரணமாகத் தான் தள்ளிவைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று பேசப்படுகிறது.

இதில் எது உண்மை என்று தெரியாவிட்டாலும் கூட, 3 நாள் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. அதேபோல், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆனதற்குப் பிறகு, ஒரு தேர்தல் கூட நடைபெற வில்லை. சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தல் நடக்கவில்லை. மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு பிரச்சினையும் இல்லை. அதை ஏன் நடத்தவில்லை என்று தெரியவில்லை.

இந்த அரசு 1977-இலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தேர்தல் நடத்திய ஒரே இடம் மதுரைக்குத் தான். 1978-இலே மதுரையில் அந்த நகராட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, 6 ஆண்டுகள் மேயர் இருந்திருக்கிறார்கள். பிறகு அது முறையாக காலாவதி ஆகி இருக்கிறது. அதன் பிறகு, தேர்தல் நடத்துவதற்கு முடியவில்லை. அதில் என்ன சிரமம் என்று தெரியவில்லை.

இதற்கெல்லாம் காரணம், உங்களுக்குள் இருக்கிற உள்கட்சித் தகராறுகள் என்று நினைக்கத் தோன்றுகிறது. இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. மேயர் தேர்தலிலே, இங்கே இருந்து முதல்வர் அவர்கள், அடைக்கப்பட்ட கவருக்குள்ளே சீட்டு ஒன்று எழுதிக் கொடுத்து, மாநகராட்சி மன்றத்திலே போய், திறந்து பார்த்து, மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியவரை, இங்கே இருந்து சீட்டு எழுதிகொடுத்து, அறிவித்தது எல்லாம் நடந்தது. அது

ஏனென்று தெரியவில்லை. அதைப் பற்றிக் கூட கவலை இல்லை. யார் மேயர் என்று மேயர் தேர்தலிலே தகராறு வந்துகொண்டே இருக்கிறது. அதனால் நடத்தாமல் வைத்து இருக்கிறார்கள். மதுரை மாநகராட்சித் தேர்தலையாவது நீங்கள் காலம் தாழ்த்தாமல், இன்னும் ஒரு மாதம் கழித்தாவது நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சிகளிலே பணமே கிடையாது. ஊராட்சி ஒன்றியங்களானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, பணம் இல்லை, பணம் இல்லை என்ற நிலைமை. நகராட்சிகளைக் கேட்டால், வருகின்ற பணம் சம்பளம் கொடுக்கவே சரி ஆகி விடுகிறது, என்ன செய்வது, ஒன்றும் செய்யமுடியவில்லை என்கிறார்கள், மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், மானியம் வாங்கிக் கொடுங்கள் என்று சொல்கிறார்களே தவிர, அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தால் என்னென்ன வகையில் பணத்தை மிச்சப்படுத்துவது, பணத்தை எந்தெந்த வகையில் செலவழிப்பது என்பதைஎல்லாம் அவர்கள் திட்டமிட்டுச் செய்வதற்கு மிகுந்த உதவியாக இருக்கும். அதிலே பலவாறாக பணம் வேஸ்ட் ஆக்கப்படுகிறது. நகரங்களிலே ஃப்ளஷ்-அவுட் கக்கூஸ்கள், கழிப்பறை கட்டப்பட்டு, முள்ளை வைத்து அடைக்கப்பட்டு இருக்கிறது. காரணம், தண்ணீர் இல்லை என்ற நிலை விருதுநகரிலே 5, 6 இடங்களிலே அவை கட்டப்பட்டு, முள்ளை வைத்து அடைக்கப்பட்டு இருக்கிறது பல மாதங்களாக.

அந்த மாதிரி, தேவையில்லாத செலவுகளைக் குறைத்து, நகராட்சித் தேர்தல் வந்தால், தண்ணீர் வசதியோடு கக்கூஸ்கள் கட்டப்படலாம். செலவைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கான சாலைகள், மக்களுக்கான குடிதண்ணீர் வசதி, மக்களுக்கான சுகாதார வசதி, இவைகளுக்கெல்லாம் செலவழிப்பதற்கு, மாநகராட்சியிலும், மாநகராட்சி தேர்தல் வந்தால் அதைச் செய்யமுடியும்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல மாவட்டங்கள் வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டாலும் கூட, அதிகமான மாவட்டங்கள் வறட்சியை எதிர் நோக்கியுள்ளன. வறட்சியினுடைய கெடுபிடி இப்போதே ஆரம்பித்து விட்டது. நீங்கள் எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, குடிதண்ணீர் சரியாகக் கிடைக்கவில்லை. குடிதண்ணீர் கிடைக்காத காரணத் தால், ஆங்காங்கே ஊராட்சி ஒன்றியங்கள் சரியாக வேலை செய்யவில்லை. ஊராட்சிஒன்றிய ஆணையர்கள் கிராமங்களுக்குச் செல்லவே பயப்படுகிறார்கள். அழைத்தாலும், சாக்கு போக்குச் சொல்லி வர மறுக்கிறார்கள். இன்றைக்கு எல்லாகிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி சரியாக இல்லை. ஓவர்டாங்குகள் ரிப்பேர் ஆகி இருக்கின்றன. பல இடங்களிலே சாலைகள் சரியாக இல்லை.



(முற்பகல் 11-50)

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொல்லியபடி ரோடு போடப்பட்டதா அல்லது போட்டதாக எழுதப்பட்டதா என்று தெரியவில்லை. இப்படிப் பல குறைகள் இருக்கின்றன. சுகாதார கேடுகளோ, சொல்லவே வேண்டாம், தொற்று நோய்கள் வந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

விருதுநகர் காமராஜ் மாவட்டத்தின் தலைநகர். அங்கே குப்பைகள் குவிந்துகிடக்கின்றன. அதை அள்ளிச் செல்வதற்கு லாரிகள் இல்லை. லாரிகளை வாடகைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதற்குக்கூட அங்கே பணம் இல்லை. இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தி.மு.க.விலே இருந்தபோது திருவண்ணாமலை நகராட்சியின் சேர்மனாக இருந்தவர்கள். ஆகவே நகராட்சியிலே உள்ள கஷ்ட நஷ்டம் அவர்களுக்குத் தெரியும். விருதுநகர் தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த ஊராகும். அங்கே வி.வி.ஆர். அவர்கள் நகராட்சி சேர்மனாக இருந்தபோது பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நகராட்சிக் வணிப்பாரற்று பணம் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கிறது. 73 லட்சம் ரூபாய் கடன் வாங்கியதற்காக 20 வருடமாக அதைக் கட்ட முடியாத காரணத்தினால் வட்டி ஏறிக்கொண்டே போகிறது. அந்த நகராட்சி அதைக் கட்ட முடியாமல் இருக்கிற காரணத்தினால் அதை மானியமாக ஆக்கவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வப்போது அங்கே ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வருகிறது வருகிறது என்று அறிவித்திருக்கிறார்கள்; பேருந்து நிலையம் ஊருக்கு வெளியே போகப்போகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி அறிவிப்பைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அதற்கான பணம் ஒதுக்கப்படவில்லை. பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து இந்த அரசு சொன்னபடி உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் என்று கருதுகிறேன். நடக்கும் என்ற உறுதியைக் கொடுக்க வேண்டும். அதைப்போலவே இந்த மாநகராட்சிக்கு 6 மாதம் நீட்டிப்புக் கேட்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் கூட்டம் முடிந்தபிறகு சட்டமன்றக் கூட்டம் இருக்காது, அப்போது நீட்டிப்புக்கு அவசரச் சட்டம் என்று கொண்டுவந்து நீட்டிப்புக் கேட்கக்கூடாது. இந்த 6 மாத காலத்திற்குள் நடத்தியாக வேண்டும். உங்களுக்குள்ளே இருக்கிற நிலை காரணமாக தள்ளிப்போடக்கூடாது. அதைப் போலவே உள்ளாட்சித் தேர்தல்களை பிப்ரவரி மாதத்திலே குறிப்பிட்டிருக்கிற தேதியிலே நீங்கள் நடத்தியாக வேண்டும், உங்கள் பட்டியல் இன்னும் வெளியாகவில்லை, ஆகவே எந்தக்

காரணத்தைக் கொண்டும் அதைத் தள்ளிப் போடக்கூடாது. என்று கேட்டுக் கொண்டு எனக்குக் கொடுத்த வாய்ப்புக்காக நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. தமிழரசன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இங்கே பஞ்சாயத்துத் தேர்தலை, நகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்தியாக வேண்டும், பஞ்சாயத்திலே, நகராட்சியிலே ஒன்றியங் களிலே பல்வேறு குறைகள் இருக்கின்றன, அவைகளைப் போக்கு வதற்காக உள்ளாட்சித் தேர்தல்களை விரைந்து நடத்தியாக வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் அவர் களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இட ஒதுக்கீடு முறையை அந்தக் கட்சிகள் விரும்புகின்றனவா, இல்லையா என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் தேர்தல் வந்தாக வேண்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு தேவையில்லை என்று சொல்கிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய இட ஒதுக்கீட்டோடு இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்த அரசு நல்ல தீர்மானத்தை 1981-இல் கொண்டு வந்தது. அன்றைக்கு ஒரே ஒருவர் மட்டும் இட ஒதுக்கீடு முறை தேவையில்லை என்று சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்தார்கள். சென்னை உயர்நீதிமன்றத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தது நல்ல திட்டம், அது செல்லும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஹைகோர்ட் பெஞ்சிற்குப் போனார்கள். அங்கேயும் இந்த அரசு கொண்டு வந்த அந்தத் திட்டம், நல்ல திட்டம், பலன் அளிக்கக்கூடிய திட்டம் என்று சொல்லி, அதற்குத் தடை தேவையில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அந்த ஒரே ஒரு தனி நபர் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றார். அங்கே அந்த வழக்கு முடியவில்லை, அந்த வழக்கை ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு ஹைகோர்ட்டிலே தடை வாங்கினார்கள். அந்த நிலையிலே 1981 ஆம் ஆண்டு கொண்டு, வந்த அந்த திட்டம் தடைபடுத்தப்பட்டது. ஒரேயொரு வரால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய ஒதுக்கீட்டைத் தரக் கூடாது என்று சொன்ன சிலரால், புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்த நல்ல திட்டத்திற்குத் தடை வாங்கப்பட்டது. பிறகு இப்பொழுது, அனைத்துக் கட்சிகளும், தேர்தலை நடத்தியாக வேண்டும், ஒதுக்கீடு இல்லாவிட்டாலும் பரவா யில்லை, தாழ்த்தப்பட்ட மக்கள் தவித்தாலும் பரவாயில்லை; தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை; ஒன்றரை கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் கண்ணீர் விட்டாலும்



பரவாயில்லை, நாங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் போதும், ஏதாவது சில ஊராட்சிகளில், நகராட்சிகளில் தாங்கள் வந்தால் போதும் என்று கருதி சில மாதங்களாக வற்புறுத்தி, நிர்பந்தப்படுத்தி வந்ததன் காரணமாகத்தான் அரசு பழைய முறையிலேயே தேர்தலை நடத்தலாம் என்று கொண்டு வந்தி ருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு உண்ணாவிரதங்களை நடத்தி, போராட்டங்களை நடத்தி, ஊர்வலங்களை நடத்தி, இந்த முறை தேவையில்லை, இட ஒதுக்கீட்டோடுதான் இந்தத் தேர்தல் வந்தாக வேண்டும் என்று அரசுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பக்கத்து மாநிலமாகிய ஆந்திராவில் இட ஒதுக்கீட்டு முறை இருக்கிறது; இன்றும் பல்வேறு இடங்களில் இட ஒதுக்கீட்டு முறை இருக்கிறது. இங்கே பஞ்சாயத்து மெம்பர்களுக்கு இட ஒதுக்கீடு இருக்கிறது; ஊராட்சித் தலைவர்களுக்கு நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இட ஒதுக்கீட்டு முறை இருக்கிறது. ஆனால் ஒன்றியத் தலைவர் பதவிக்கும், நகராட்சித் தலைவர் பதவிக்கும் இட ஒதுக்கீடு இல்லாமல் இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பேரவைத் துணைத் தலைவரவர்களின் மூலமாகக் கேட்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய ஜனதாக் கட்சித் தலைவரவர்களோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியோ, எந்தக் கட்சியாக இருந்தாலும், சட்ட மன்றத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் நான் கேட்கிறேன், அவர்கள் இட ஒதுக்கீட்டு முறையை ஆதரிக்கிறார் களா அல்லது எதிர்க்கிறார்களா என்பதைத் தெளிவாக, வெளிப் படையாக பேரவைத் தலைவரவர்களின் மூலமாகச் சொல்ல வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையிலும், அல்லது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையிலும், கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், இட ஒதுக்கீடு என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவைக்கும், தங்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இந்த இட ஒதுக்கீடு இல்லாத காலத்திலேயே கம்யூனிஸ்ட் இயக்கம், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த எங்களுடைய இயக்கத்தின் தலைவர்களை ஒன்றியப் பெருந்தலைவராக ஆக்கி வைத்திருந்த பேரியக்கம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்பொழுது நடக்கவிருக்கின்ற தேர்தலில் இட ஒதுக்கீடு இல்லாவிட்டாலும் கூட, நாகை ஒன்றியத்திலும், திண்டுக்கல் நகராட்சியிலும், இன்னும் சிலயிடங்களிலேயும், எங்கள் கட்சியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட

மக்களை வேட்பாளர்களாக நிறுத்தியிருக்கிறோம் என்பதைத் தமிழகத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு.எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது இட ஒதுக்கீட்டு முறையை ஜனதாக் கட்சி ஆதரிக்கிறதா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். நாங்கள் இட ஒதுக்கீட்டு முறையை ஆதரிக்கிறோம். ஆனால், சட்டம் போடுவதில் தமதம் ஆகிக்கொண்டே இருக்கின்ற அந்தக் காரணத்தினால்தான், அரசே அரிசனங்களுக்கும், பெண்களுக்கெல்லாம் இட ஒதுக்கீட்டுக்குப் பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது, அந்த முறையில் நடக்கிறது. இதையெல்லாம் உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இந்த நேரத்தில் ஜனதாக் கட்சி இட ஒதுக்கீட்டு முறையை எதிர்க்கிறது என்று சொல்லி அரிசன மக்களையும் எங்களையும் வேறுபடுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதால் நான் சொல்ல விரும்புகிறேன். இல்லாவிட்டால் நான் பேச மாட்டேன். "Reservation was made for S.Cs and S.Ts. by the D.M.K Government, that too by our leader Dr. Kalaignar." மூலச்சட்டத்தைப் பார்த்தால் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டு அதைச் செய்வதற்கு முன்னால் ஆட்சி கலைந்துவிட்டது. இது ஒன்று. இரண்டாவதாக, எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியதால் நான் இந்த நிலை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதுவல்ல. இதே சட்டமன்றத்தில்—மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தச் சபையில் உறுப்பினராக இல்லாத அந்தக் காலகட்டத்தில், முதலமைச்சரவர்கள் அடிக்கடி, பில்லைக் கொண்டு வந்தது தள்ளித் தள்ளிப் போட்டு, ஸ்பெஷல் ஆபீசர்களின் பதவிக்காலத்தை நீட்டித்துக் கொண்டு வந்த நேரத்தில், அவரே முன் வந்து அடுத்து யாராவது கோர்ட்டுக்குப் போனாலும் முந்தைய நிலையிலேயே தேர்தல்கள் நிச்சயமாக நடக்கும். உள்ளாட்சி மன்றங்களுக்கு என்று தந்த உத்தரவாதத்தைத்தான் நிறைவேற்றுங்கள் என்று நாங்கள் சொல்லுகிறோமே தவிர, ரிசர்வேஷன் வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று கொண்டு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்.

(நண்பகல் 12—00)

திரு. கு. தமிழரசன் : இட ஒதுக்கீடு முறையை ஆதரிப்பதற்காகவும், நாங்கள் எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் அல்ல என்று சொன்னதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழக



உறுப்பினருக்கும், ஜனதா கட்சித் தலைவருக்கும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அது நாளைக்கு பெஞ்சுக்குப் போகிற நிலைமை இருக்கிறது. நான், எதிர்க்கட்சிக்காரர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன், 13 ஆண்டுகளாக நடக்காத தேர்தல், இன்னும் 6 மாத காலம் தள்ளிப் போடப்படுமானால் என்ன நடந்து விடப் போகிறது? 13 ஆண்டுக்காலமாக இந்தத் தேர்தல் நடைபெறவில்லை. ஒதுக்கீடு கருத்தை அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்துகின்றன, வற்புறுத்துகின்றன, ஏற்றுக் கொள்கின்றன. இன்னும் 6 மாத காலத்திலே, சுப்ரீம் கோர்ட்டிலே அல்லது ஹைகோர்ட்டிலே, நாங்கள் தொடுத்திருக்கிற வழக்கு முடியப்போகிறது. அதுவரை, 6 மாத காலம் ஏன் தள்ளிப் போடக் கூடாது? இட ஒதுக்கீடு தந்தாக வேண்டுமென்று சொன்னால், அனைத்துக் கட்சிகள் சேர்ந்து போட்ட தீர்மானம், பல கூட்டங்களிலும் அனைத்துக் கட்சிகளும் ஒப்புக்கொண்ட, அந்த இட ஒதுக்கீடு முறையை ஏன் சட்டமன்றத்திலே வலியுறுத்தக் கூடாது? இட ஒதுக்கீடு முறை வந்தால்தான் இந்தத் தேர்தல் நடக்க வேண்டுமென்று, சட்டமன்றத்திலே ஏன் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தவில்லை என்று நான் அறிய விரும்புகிறேன். வெறும் வாயளவில் சொன்னால் போதாது. செயல் அளவில், அதைச் செயல்படுத்த வேண்டாமா? ஏன் கேட்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே தமிழகத்தின் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, ஏப்ரல் 16 ஆம் தேதி, பேரறிஞர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவிலே பேசும்பொழுது, 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இட ஒதுக்கீட்டு முறையை ஆதரிக்கிறது, உள்ளாட்சித் தேர்தல்களிலும், நகராட்சித் தேர்தல்களிலும், தலைமைப் பதவிக்கு, இட ஒதுக்கீடு முறையைத் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வரும்' என்று அன்றைக்கே சொன்னார்கள்.

அது மட்டுமல்ல, அவர் ஒரு படி மேலே போய்க்கூட சொன்னார். ராஜ்ய சபாவிலும், மேலவையிலும் கூட இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கலாம் என்று சொன்னார். அப்படி அண்ணா சொன்ன திட்டத்தை, தமிழகத்திலே, 1981-லே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். இதை ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை? ஏன் எதிர்க்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. வாயளவில் சொன்னால் போதாது. இன்றைக்குக்கூடச் சந்தர்ப்பம் இருக்கிறது, இப்பொழுதுகூட காலம் இருக்கிறது. இட ஒதுக்கீடு முறையோடு தேர்தல் நடத்த வேண்டும். தள்ளிப் போனால் பரவாயில்லை, 6 மாத காலம் தள்ளிப் போடுங்கள் என்று ஏன், கட்சிகள் சொல்லக் கூடாது, என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே, மாண்புமிகு

பேரவைத் துணைத் தலைவர் மூலமாக, நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, தமிழக அரசு இந்தத் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டும், இட ஒதுக்கீடு முறையோடு இந்தத் தேர்தலை மீண்டும் கொண்டு வரவேண்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு, உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும், அப்படிப்பட்ட தேர்தலைத்தான் இந்த அரசு நடத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த அளவில் உச்ச நீதி மன்றத்திலே போடப்பட்ட வழக்கிலே, உச்ச நீதிமன்றம் தடை ஒன்றும் கொடுக்கவில்லை. அப்படி இருக்க, அரசே தேர்தலை நடத்தி இருக்கலாமே, ஏன் மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கம், அப்படித் தேர்தல் நடப்பதற்கு உச்ச நீதிமன்றம் தடை கொடுக்காமல் இருக்கிற நேரத்தில், தேர்தல் நடத்துவதற்கு வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கான, தனி அதிகாரிகளின் கால நீட்டிப்புச் சட்ட முன்வடிவுகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அரசு சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு, தனி அதிகாரிகளிடத்திலேயே இந்த மன்றங்களை விட்டுவைக்க வேண்டுமென்று கருதவில்லை. ஒன்றை நான் துவக்கத்திலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். தனி அதிகாரிகளிடத்தில்தான் மாநகராட்சிகளோ, நகராட்சிகளோ, அல்லது உள்ளாட்சி அமைப்புகளோ இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்பவே இல்லை, எந்த ஒரு ஜனநாயகவாதியும் விரும்ப முடியாது. அதிகாரிகளை நம்பி, நாங்கள் இதைக் கொடுக்க முடியாது, விட முடியாது. ஆனால், காலத்தின் கட்டாய , சில நேரங்களிலே, தள்ளிப் போட வேண்டி வருகிறதே தவிர, வேறல்ல. தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாகத்தான் தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் துவக்கத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள், ஏன் 6 மாத காலம் தேர்தலைத் தள்ளி வைத்திருந்தால், என்ன என்று கேட்டார். அதன் பிறகு, இறுதியாக, ஒரு சந்தேகத்தைக் கிளப்பிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு பிரச்னையைச் சொன்



னார்கள். உச்ச நீதிமன்றத்திலே வழக்குதான் போனதே தவிர, உச்ச நீதிமன்றம் தடை விதிக்கவில்லையே, ஏன் அவர்கள் தேர்தலை நடத்தி இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். விவரம் தெரியாது சொன்னாரோ, அல்லது நான் அன்றையதினம் சொன்னதை கவனிக்காமல் விட்டு விட்டாரோ என்று கருது கிறேன். உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. அதன் பிறகு, தமிழ்நாட்டில், இங்கேயிருக்கிற உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் போட்டு ஸ்டே வாங்கினார்கள். உச்ச நீதிமன்றம் ஸ்டே கொடுக்க வில்லை என்றாலும் தமிழ் நாட்டில் இருக்கிற உயர் நீதி மன்றம் தடை ஆணை விதித்ததால் தேர்தலை நடத்த முடியவில்லையே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்வதைப்போல அரசாங்கம் தடை இல்லாமலே தேர்வை நடத்தாமல் பின்வாங்கிவிட்டது, திரும்பப்பெற்றுவிட்டது என்று கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் இன்னும் 6 மாதம் தேர்தலை தள்ளி வைத்தால் என்ன என்று கேட்டார்கள். 6 மாதம் அல்லது ஒரு வருடம் தள்ளி வைத்தாலும் இந்தப் பிரச்சனைக்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இது ஒரு சமுதாய சீர்திருத்தச் சட்டம். சமுதாயத்திற்கு நியாயம் வழங்குகிற ஒரு சட்டமாகும். இந்தச் சட்டத்தை யார் கொண்டுவந்தார் என்பதைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு சர்ச்சையை கிளப்பினார்கள். இதற்கு முன்பேகூட நான் சொன்னேன். இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் கொண்டு வந்த சட்டம் இது என்று அவர்கள் சொன்னார்கள். அது தவறான கருத்து. தவறான கருத்தை இந்த அவைக்குத் தரக்கூடாது. நாட்டுக்குச் சொல்லக் கூடாது. நான் அவர்களுக்கு தெளிவாகச் சொல்லுகிறேன். பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுதான். இவர் தான் கொண்டு வந்தாரே தவிர வேறு யாரோ கொண்டுவர வில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டம் கொண்டு வந்து, பிறகு ஆட்சி கலைக்கப்பட்ட பின்னால் இப்போது கொண்டுவந்திருக்கிறார்கள், என்று சொல்வது முறையல்ல என்பதை நான்தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் நியாயம் வழங்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட ஒரு யோசனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டு, அதன் காரணமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாரே தவிர, இதிலே தவறான நோக்கம் எதுவும் இல்லை. அவர்களுடைய நல்ல நோக்கத்தை நிறைவேற்றவிடாமல் நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கியதால் இந்தப் பிரச்சனை எழுந்திருக்கிறது.

இப்போது தேர்தலை நடத்த நாட்கள் குறிப்பிடப்பட்டு

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் வேலை நடந்துகொண்டிருக்
கிறது. ஜனதா கட்சித் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள்
பேசும்போது ஏற்கெனவே 25, 26, 27-ந் தேதிகள் என்று
குறிப்பிட்ட பின்னால் இப்போது ஏன் மேற்கொண்டு 3 நாட்கள்
நீட்டித்தீர்கள் என்று கேட்டார்கள். 25, 26 ஆகிய நாட்கள்
விடுமுறை நாட்கள். ஆகையால் அந்த நாட்களில் வேட்பு மனுக்கள்
தாக்கல் செய்ய முடியாது. அப்படியானால் வேட்புமனுக்கள்
தாக்கல் செய்ய இருப்பது ஒரே ஒரு நாள், 27-ந் தேதிதான்,
எனவே தான் சட்ட வரம்புக்கு உட்பட்டு, தேர்தல் தேதியை
தள்ளிவைக்காமல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய 3 நாட்கள்
நீட்டித்தோமே தவிர, வேறு அல்ல.

இந்த மூன்று நாட்கள் நீட்டித்துக் கொடுத்தது சுப்ரீம்
கோர்ட்டுக்குப் போய் தடை ஆணைப் பெற வழிவகுத்துவிட்டது,
அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துவிட்டதே என்று இங்கே
குறிப்பிட்டார்கள். தடை ஆணை வாங்க வேண்டுமென்றால்
எப்போது வேண்டுமானாலும் போகலாம். உயர்நீதிமன்றத்திற்கு
உச்சநீதி மன்றத்திற்குப் போகலாம். நியாயம் கேட்க எல்லோ
ருக்கும் உரிமை இருக்கிறது. நியாயம் இருக்கிறது என்று தெரிந்
தால் எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம். இந்த மூன்று
நாட்கள் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நீதிமன்றத்திற்கு
போகலாம். ஆகவே, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.
இருந்தாலும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று தடையாணைப்
பெற வழிவகுத்து விட்டார்கள் என்று இங்கே குறிப்பிட்டது
வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

நான் அன்றே கூறினேன். தேர்தலை தள்ளி வைக்க வேண்டு
மென்று அரசு விரும்பினால், தள்ளி வைக்கலாம். அரசுக்கு
அந்த அதிகாரம் இருக்கிறது. அதற்காக கால நீட்டிப்பு மசோதா
கொண்டு வந்து, நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்க வழி
வகை செய்ய வேண்டும் என்பது இல்லை. ஆக, சட்டம்
கொண்டு வராமலே தேர்தலை ஒத்திவைக்க முடியும். அந்த
எண்ணம் அரசுக்கு இல்லை. தேர்தலை நடத்த வேண்டும் என்ற
முடிவுக்கு வந்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்
கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட
முன்வடிவுகளைக் கொண்டுவந்து, அவற்றின்மீது கருத்துக்களைச்
சொல்லும்போது, சட்ட வரம்புக்கு உட்பட்டு கருத்துக்களைச்
சொல்ல வேண்டுமென்று விதிமுறைகள் இருந்தபோதிலும், இங்கே
பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சட்ட வரம்பிற்கு
அப்பால் சென்று சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.
நான் அதற்கு பதில் சொல்லாமல் விட்டுவிட்டால் அவர்கள்
தெரிவித்த கருத்துக்கள் நியாயமானவை என்ற அளவிலே
ஏட்டிலே அச்சாகிவிடும் என்பதால் அவர்கள் கூறியவற்றிற்கு
பதில் சொல்ல கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொள்கிறேன்.
தயவுசெய்து தாங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.



நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், சட்டம் கொண்டு வருகிறபோது சட்ட வரம்பிற்கு உட்பட்டு பேசவேண்டும் என்பதுதான் விதிமுறை. அது தெரிந்தும் சிலர் சட்ட வரம்புக்கு வெளியே போய் பேசினார்கள். அதற்கு நான் சில விளக்கங்களை சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. கொஞ்சம் நேரம் அதிகமானாலும், அதற்கு அவகாசம் அளிக்க வேண்டுமென்று துணைத் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தொடக்கத்தில் பேசும் போது ஏன் மாநாகராட்சித் தேர்தலை நடத்தக் கூடாது என்று கேட்டார்கள்.

(முற்பகல் 12–10)

நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். மாநகராட்சித் தேர்தலை குறிப்பிட்ட காலத்தில், அதை நடத்துவதற்கு ஏதுவான காலம் என்று கருதுகிற காலத்தில்தான் நடத்தமுடியும். நிச்சயமாகச் சொல்கிறேன். தேர்தல் உண்டு. நடக்கும். இதற்கு ஏதேதோ காரணங்களை எல்லாம் காட்டினார்கள். ஒத்தி வைத்துக்கொண்டே வருகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். மஸ்டர் ரோல் வழக்கா, அந்த வழக்கா, இந்த வழக்கா என்றெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தார்கள். அப்படி கேட்டுக்கொண்டே வந்த திரு. ரகுமான்கான் அவர்கள் என்னையும் கொஞ்சம் இடித்துச் சொல்லவேண்டும் என்றவகையில் அதாவது ஆங்கிலத்தில் டிக்கிங் என்று சொல்வார்களே அதுபோல் என்னை இடித்துச் சொல்லவேண்டும் என்பதற்காக இவர் மட்டும் அமைச்சராக இருக்கிறார்; நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கிறேன். இவர் மீதும் வழக்கு இருக்கிறது, என் மீதும் வழக்கு இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். வருத்தத்திற்குரிய வழக்கு. மறைந்துவிட்ட அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்களை கொலை செய்ய முயற்சித்ததாக போடப்பட்ட வழக்காகும் அது. நான் மறுக்கவில்லை. நான் குற்றவாளியாக இன்னும் இருக்கிறேன்.

ஆனால் நான் முதலமைச்சரிடத்திலோ அல்லது அரசாங்கத்தினிடத்திலோ என்னுடைய பெயரை குற்றவாளி என்ற பட்டியலிலிருந்து விடுவியுங்கள்; வழக்கை வாபஸ் பெறுங்கள் என்று கேட்கவில்லை. என்மீது எந்த வழக்கு சாட்டப்பட்டிருந்தாலும் வழக்கை வாபஸ் பெறுங்கள் என்று கேட்கிற அந்த எண்ணம் எனக்கு இல்லை. அப்படிப்பட்ட எண்ணம் ஒருநாளும் வராது. வாபஸ் பெறுவது என்பது கோழைத்தனம் என்று கருதுகிறவன் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் வழக்கு நீதிமன்றத்திற்குப் போன பிறகும்கூட அப்ரூவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும்கூட, வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்ற வகையில் மறைந்த இந்திராகாந்தி அம்மையாரிடத்திலே

சென்று வாதாடி, கெஞ்சி, கூத்தாடி வழக்கைத் திரும்பப் பெற்றவர்கள் எல்லாம் இப்படி நங்களை நியாயப்படுத்தி பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

எந்த அம்பை நாம் எய்கிறோமோ அந்த அம்புக்கு பதில் அம்பு வரும் என்று எண்ணிப் பேசவேண்டும். நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுதான் பேசுகிறேன். மேற்கொண்டு ஆராய விரும்பவில்லை. விவரம் புரிந்துவிட்ட காரணத்தால் நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு வந்ததால் நான் பதில் சொல்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நேற்றையதினம் பேசியதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளித்து இருக்கிறார்கள். ஆனால் இந்தச் சபையிலே அதிக மான நேரத்தை எப்போதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துக்கொள்வது வழக்கமாக இருக்கிறது. ஆகவே இனிமேலாவது உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு யார், யாருக்கு எவ்வளவு நேரம் என்று வைத்துவிட்டால் நல்லது. ஏனென்றால் எங்களுடைய உறுப்பினர்கள் தினந்தோறும் சண்டை போடுவது வழக்கமாக இருக்கிற காரணத்தால் எடுத்துக்கொள்கின்ற நேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அனுமதி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினை சார்ந்த சகோதரர்கள் கோபப்படவேண்டிய அவசியம் இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிற காரணத்தால் விளக்கம் சொல்வது என்னுடைய கடமை என்பதால்தான் தங்கள் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அன்றைக்கு பிரதமராக இருந்தபோது எங்கள் தலைவர் மீதும் மற்றவர்கள் மீதும் உள்ள வழக்கைப் பொறுத்தவரையில் அவர்கள் தான் காரணம் என்று சாட்சியங்கள் இல்லை, எனவே இந்த வழக்கு வாபஸ் பெறப்படுகிறது என்று அறிவித்து இருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள் மீது சுமத்தப்பட்ட 307 கேஸ் சம்பந்தமாக யாரிடத்திலும் முயற்சிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் கோர்ட்டிலே அவர்கள்தான் அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று அரசாங்க ஆதரவோடு மனு போட்டு திரு. சூர்யமூர்த்தி அவர்கள் வீரமாகப் பேசுகின்றவர்கள் கோழையாக இருக்கக்கூடாது என்று சொல்லி அந்த பெட்டிஷனை டிஸ்மிஸ் செய்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என் மீது இருக்கின்ற கோபத்தாலோ என்னவோ தெரியவில்லை, காது கொடுத்து வாங்க மாட்டேன் என்கிறார். நான் அரசாங்கத் திடம் கேட்கவில்லை என்றுதான் சொன்னேன். இப்படி அவர் பேசுவார் என்று தெரிந்துதான் வார்த்தையை எச்சரிக்கையாகப் பயன்படுத்தி இருக்கிறேன். அவர் பேசுவார் என்று தெரிந்து அதற்குப் பதிலையும் தயாரித்து வைத்து இருக்கிறேன். எனவே, நான் அரசாங்கத்தினிடத்தில் கேட்கவில்லை என்று தான் சொன்னேன். அந்த விவரம் எதையும் நான் மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. நானும் கொஞ்ச ஆழமாக அந்த வழக்கின் உள்ளே போக வேண்டிய அவசியம் இல்லை என்று கருதினேன். அந்த வழக்கைப் பொறுத்தவரையில் இந்திராகாந்தி அம்மையார் அவர் களைக் கொலை செய்ய முயற்சித்ததாக என்று அந்த முயற்சி தான் சொல்லப்படுகிறது. அந்தக் கூட்டத்தில் நானா கலந்து கொண்டதாக இல்லை. அன்றைய தினம் நான் என்னுடைய ஊரில் இருந்தேன். நான் பிரச்சினைக்குள்ளே போக விரும்ப வில்லை. ஒரு நீதிபதியின் பெயரைத் தேவையில்லாமல் இழுத்து இருக்கிறார்கள். அந்த நீதிபதி பற்றி எல்லாம் சொல்லி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் உறுதியாகச் சொல்கிறேன், என்னைப் பொறுத்தவரையில் நீதிபதி தண்டித்து தீர்ப்புக் கொடுத்தால் கூட--நான் தாய் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன் —நான் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்படுமேயானால் என்னுடைய பதவியை துறக்க நான் தயார். ஆனால் குற்றவாளிகள் என்று நீதி மன்றத்திற்குள் போய் ஏதோசாட்சி சொல்லவில்லை. ஆகவே நாங்கள் திரும்பப்பெறுகிறோம் என்று இந்திராகாந்தி அம்மையார் வாபஸ் பெற்றுவிட்டார்கள் என்ற தவறான கருத்தைச் சொல்லக் கூடாது. இந்திராகாந்தி அம்மையாரிடம், மறைந்துவிட்ட சஞ்சய்காந்தியைப் பிடித்துக் கொண்டு இதற்காக எப்படி எப்படி முயற்சிக்கப்பட்டது என்பது இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர் களுக்குத்தெரியும். (கரவொலி) ஏதோ கை தட்டுவதற்காக இதை நான் சொல்லவில்லை. அப்போது எவ்வளவு முயற்சிகள் எடுக்கப் பட்டன என்று எல்லோருக்கும் தெரியும். அந்த நேரத்திலேயே பல பொதுக் கூட்டங்களில் நான் பேசியிருக்கிறேன். அப்போது நான் குறிப்பிட்டேன், இன்றும் குறிப்பிடுகிறேன், 'இந்தியாவிலேயே ஒரே ஒரு வழக்குதான் அப்ரூவரை தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிறகு அப்ரூவர் சாட்சியை பதிவு செய்ததற்குப் பிறகு, அப்ரூவ ராக ஒருவர் ஆக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, நீதிமன்றத் திற்குக் கொண்டுபோய் சாட்சியம் பதிவு செய்ததற்குப் பிறகு திரும்பப் பெற்ற வழக்கு உண்டென்றால் அது இந்திய வரலாற்றி லேயே, இந்த வழக்கு ஒன்று தானே தவிர வேறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன். அப்படி இருக்குமானால் இதைத் திருத்திக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன்.

(திரு. ப. உ. சண்முகம்) [1986 ஜனவரி 27

பிரச்சினைக்குள் போக வேண்டாம் என்றுதான் இத்தோடு இதை முடித்துக் கொள்கிறேன் என்று சொன்னேன். அவர்கள் மேற்கொண்டும் பேசிய காரணத்தினால்தான், இதைச் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது.

மின்சாரத் துறையில் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்றும் கையொப்பம் வாங்கி ஃபோர்ஜரி செய்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களைக் கொடுத்தால் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் 'ஃபோர்ஜரிக் குற்றம் செய்தவர்கள் எவராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன்' என்று உறுதியளிக்கிறேன்.

அவர்கள் மேற்கொண்டும் சொன்னார்கள். அவருக்கே இருக்கிற சொல்லாற்றலைப் பயன்படுத்திக் கொண்டு கொசுத் தொல்லையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சென்னையிலே கொசுத் தொல்லை இருக்கிறது. நான் மறுக்கவில்லை. நானும் சென்னையிலேதான் இருக்கிறேன். என் வீட்டிலும் கொசு இருக்கிறது. கார்பொரேஷன் அமைச்சர் என்ற காரணத்தால் கொசு என்னை விட்டு விடவில்லை. எப்படி பராமரிக்க வேண்டும், எப்படி கொசுத் தொல்லையைப் போக்க வேண்டும் என்றுதான், அவரோடு சேர்ந்து உட்கார்ந்து நானும் ஆராய வேண்டும். அவர்கள் ஆலோசனை சொல்வார்கள் என்றால் நல்லது தான். நாங்களும் கொசுத் தொல்லையை சென்னையிலே தீர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்துக்கொண்டுதான் இருக்கிறோம். இப்போதும்கூட அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டுதான் இருக்கிறது. சென்னை நகர மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கூட, கொசுத் தொல்லையை எப்படி ஒழிப்பது என்பதைப்பற்றி பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அது தொடர்ந்து ஆராயப்பட்டு வருகிறது.

ஆனால் அவர் அத்தோடு நிற்கவில்லை. அவர் என்னையோ அல்லது ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையோ கொஞ்சம் குத்திப் பேசினால்தான் பேச்சுக்கே சுவை ஏற்படும் என்று கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. அவர் பேசினார், கொசுக்கள் எல்லாம் இப்போது ரத்தத்தின் ரத்தமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) எந்த அர்த்தத்திலே சொன்னாரோ தெரியாது. ஆனால் கொசுக்கள் எல்லாம் ரத்தத்தின் ரத்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன சொல்கிறார் என்று எங்களால் ஊகித்துக்கொள்ள முடியாதா? புரிந்து கொள்ள முடியாதா? அந்த அளவுக்குக் கூடவா அறிவு இல்லாமல் எங்களுக்கு அறிவு தந்த அண்ணா அவர்கள் எங்களை ஆளாக்கியிருக்கிறார்கள். எங்களுக்கு அறிவை கற்றுத் தந்த, எங்களுக்கு தமிழை கற்றுத் தந்த அண்ணா அவர்கள், இவைகளையெல்லாம் தெரிந்துக் கொள்ளும்படியா, புரிந்துக்கொள்ளும்படியாகத்தான் எங்களை வளர்த்திருகிறார்கள்.



1986 ஜனவரி 27] [திரு. ப. உ. சண்முகம்]

ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட இயக்கத்தில் இருந்தவர்களுக்கு தமிழை கற்றுத் தந்தவர் அண்ணா தான். பேசக் கற்றுத் தந்தவர் அண்ணா தான். உதாரணங்களைச் சொல்லவும் அவர் தான் கற்றுக் கொடுத்தார்கள். அண்ணா அவர்களிடத்திலே கற்றுக் கொண்ட முறையிலேயே, அவருக்கு பதில் சொல்வது, அதுவும் சமயத்திலே பதில் சொல்வது மிகவும் எளிதான விஷயம், ஆனால் எதிர்க்கட்சியை இப்படி புண்படுத்தித்தான் பேசுவது என்பது எந்த வகையிலே நியாயம் என்று புரியவில்லை.

மாற்றாரை மதிக்கின்ற மனப்பக்குவம் வேண்டும். அந்த மனப் பக்குவம் அற்றுப் போன காரணத்தினால்தான் இப்படி இடம் மாறி இடம் தேய்ந்து போய்க்கொண்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதை இன்னும் தெரிந்துக் கொள்ளவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு தத்துவமாகும். அந்த தத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு அறிவுரைகள் இருக்கின்றன. 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று அவர் சொன்னார். இது வெறும் சாதாரண அடுக்குச் சொல் மாத்திரம் அல்ல. அண்ணா அவர்கள் ஒன்று சொன்னால் அதன் பின்னால் பெரிய தத்துவமே அடங்கியிருக்கும்.

இதே அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சராக பதவியேற்றதற்குப் பிறகு —இந்த அவையில் அப்போது காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவராக, மறைந்து விட்ட எனது நண்பர் கருத்திருமன் அவர்கள் இருந்தார்கள் அந்த அவையில் அண்ணா பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி ஏன் தோற்றது என்பதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த நேரம் அது. அப்போது அண்ணா சொன்னார், மாண்புமிகு உறுப்பினர் சமது அவர்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். நான் அப்போது இங்கே உறுப்பினராக இல்லாவிட்டாலும் விவரம் அறிவேன். அப்போது அவர் சொன்னார்—''ஏன் காங்கிரஸ் கட்சி தோற்றது, அண்ணாதுரை வெற்றி பெற்றார் என்று ஆராய்ந்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்குப் பதில் நானே சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அண்ணா அவர்கள் இந்த அவையிலேயே சொல்லுகிறார்கள். ''நான் உங்களை மதிக்கக் கற்றுக் கொண்டேன் நான் வளர்ந்தேன், என்னை நீங்கள் மதிக்கத் தெரியவில்லை அதனால் தேய்ந்தீர்கள்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்.

கருத்திருமன் அவர்களுக்கு அண்ணா சொன்ன பொன்மொழி திராவிட முன்னேற்றக்கழகத்தினர் மறந்து விட்டிருக்கலாம். ஆனால் நான் ஆச்சரியப்படவில்லை. அண்ணா அவர்களையே மறந்து விட்டபிறகு, அண்ணா அவர்களுடைய பொன்மொழியை எப்படி அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஜனவரி

(பிற்பகல் 12–20)

அண்ணா சொன்னதை மறந்து விட்டிருக்கிறார்கள். எனவே நான்
கேட்டுக் கொள்கிறேன். மாற்றாரை மதிக்கின்ற மனப்பக்குவ
வேண்டும். முதலமைச்சர் ஆகிவிட்டிருக்கிறாரே. அவரை
கொஞ்சம் இடித்துச் சொன்னால்தான் நன்றாக இருக்கும் என்
கருதி முதலமைச்சர் அவர்களை இடித்துப் பேசுவது, என்னையோ
மற்ற அமைச்சர்களையோ இடித்துப் பேசுவது என்பது நல்லதல்ல.
தவறு செய்தால், குற்றம் செய்தால் தயவு செய்து கண்டிக்க
முன்வாருங்கள். ஆனால் ஏதோ திட்ட வேண்டுமென்பதற்காக,
என் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காக முயற்சிகள்
செய்வது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்னொரு விஷயத்தைக் கூடச் சொன்னார்கள்.
கோடம்பாக்கத்தில் இருக்கிற எம்.ஜி.ஆர். பள்ளிக்கூடத்திற்கு
வெளியே இருக்கிற காம்பவுண்ட் சுவர் மூலம் ஆக்கிரமிப்பு
செய்திருக்கிறார்கள், அதை ஏன் அப்புறப்படுத்தவில்லை என்று
கேட்டார்கள். அவர்கள் பத்திரிகையிலேகூட அதுபற்றி படம்
போட்டிருக்கிறார்கள். நானும் அதைப் பார்த்தேன். அதுபற்றி
விசாரித்தும் வைத்திருக்கிறேன். அந்த எம்.ஜி.ஆர். பாடசாலைக்கு
எதிரில் 12, 14 அடி நீளத்திற்கு நடைபாதை இருக்கிறது. அந்த
நடைபாதையிலே சிறுநீரை கழித்துக்கொண்டு அசுத்தம் செய்து
கொண்டிருந்திருக்கிறார்கள். அந்த இடத்தை எம்.ஜி.ஆர். பாட
சாலைக்குக் கொடுக்கவில்லை. அந்த இடத்தை சுத்தமாக
வைத்துக் கொள்வதற்கும், பூங்கா ஒன்று அமைப்பதற்கும்,
ட்ராபிக் ஐலேண்டுகளை எப்படி தொழிலதிபர்களுக்கு ஒப்படைத்து
அங்கே பூங்காக்களை அமைக்க வேண்டும். சுத்தமாக வைக்க
வேண்டுமென்று கொடுக்கிறோமோ அதைப்போல, இந்தப் பாட
சாலை நிறுவனம் 9,10 மாதங்களுக்கு முன்னாலே மனுச் செய்து
முறையாக மாநகராட்சி அவர்களுக்கு ஒப்படைத்திருக்கிறது.
ஒப்படைத்திருக்கிறது என்று சொன்னால் அடமானம் செய்கிற
அதிகாரம் மாநகராட்சிக்கு கிடையாது என்பதை எல்லோரும்
அறிவோம். ஆனால் இது நிபந்தனையோடு கொடுக்கப்பட்டிருக்
கிறது. அரசாங்கம் விரும்பினால் அந்த இடத்தை 24 மணி
நேரத்தில் காலி செய்து கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை
விதிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சாதாரண விஷயம். மாண்புமிகு
உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம்,
சட்ட மன்றத்தில் கேள்வி போட்டால் நான் பதில் சொல்லி இருப்
பேன். அல்லது மாநகராட்சியில் விசாரித்து இருந்தாலும்
தெரிந்திருக்கும். இருந்தாலும் கொஞ்சம் முதலமைச்சர் ஆயிற்றே,
எம்.ஜி.ஆர். பாடசாலை ஆயிற்றே, பாடசாலை என்றால் என்ன?
எம்.ஜி.ஆர். பெயர் இருக்கிறதே, அதுவும் எனக்கு பிடிக்கவில்லை,
ஆகவே இதை ஒரு சாடு சாடவேண்டுமென்று கருதி, மன்னாதி
மன்னனே தவறு செய்தால் என்ன என்று சொன்னார்கள். யார்
தவறு செய்தாலும் தவறு தவறுதான். அதை அவர் சொல்லிவிட்ட



1986 ஜனவரி 27] [திரு. ப. உ. சண்முகம்]

காரணத்தாலே நான் ஒன்றை சொல்ல வேண்டியிருக்கிறது. நான் பல இரகசியங்களை சொல்லக் கூடாதென்று, மூடிமூடி மறைத்துப் பார்ப்பேன். என்னுடைய கட்சியைச் சார்ந்த நண்பர்கள் எவ்வளவோ கேட்கிறார்கள். நான் சொல்வதே கிடையாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இது போன்ற நேரங்களில் என் நெஞ்சைக் குத்தும்போது சிலவற்றை நான் சொல்ல வேண்டிய கட்டாயம் வந்துவிடுகிறது. சொல்லி விட்டால் ஆத்திரப்படக்கூடாது. உண்மையை பேசுவோம். பதில் சொல்வதற்கே ஆத்திரப்படக்கூடாது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது நான் எழுந்திருக்கவே இல்லை. பொறுமையோடு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன் அதைப்போல அவர்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். மாநகராட்சியில் இடத்தைக் கொடுப்பதில் முறைகேடுகளை முதலமைச்சர் செய்துவிட்டார் என்று வருவதைப்போல இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசினார்கள்.

நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம்.எம்.டி.ஏ. ஆக்ட் என்று இருக்கிறது. இதற்கென்று சில சட்ட வரம்புகளை நாம் எழுதி வைத்திருக்கிறோம், கெசட்டிலே பதிவு செய்திருக் கிறோம். ஒரு புதிய கட்டிடம் கட்டுவதென்றால் எப்படி கட்ட வேண்டும், எவ்வளவு இடம் விட வேண்டும், எப்படி காற்று மற்றும் சுகாதார வசதிகள் இருக்க வேண்டும், எவ்வளவு உயரம் இருக்கவேண்டும், எத்தனை மாடிகள் கட்ட வேண்டு மென்றெல்லாம் விதிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறோம். இந்த எம்.எம்.டி.ஏ. சட்டம் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்திய தற்குப் பிறகு, சென்னையில் ஒரு கட்டிடம் அந்த எம்.எம்.டி.ஏ. சட்டத்தின்படி சாலைக்கு அடுத்திருந்தால் 5 அடி இடம் விட வேண்டுமென்பது விதிமுறை. இது அனைவரும் அறிந்த ஒன்றாகும். பக்கத்திலே சாலை இருக்குமானால், சுற்றுப் புறத்திலே சாலை இருக்குமானால் 5 அடி, 5 அடி விடவேண்டும். இது அனைவருக்கும் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். வியாபாரத்திற்காக ஒரு இடத்தைக் கட்டுகிறபோது கார்கள் நிறுத்துவதற்கு இடம் விடவேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. இதுவும் அனைவரும் அறிந்த ஒன்றுதான். சுற்றுப்புறத்திலே இடமும் விடாமல், கார் பார்க்கிங்கிற்கும் இடம் விடாமல் எம்.எம்.டி.ஏ. சட்டத்திற்கு விரோதமாக கட்டப்பட்டிருக்கிற கட்டிடத்தை நான் என்ன செய்யட்டும் என்று திரு. ரகுமான்கான் அவர்களே சொன்னால் பரவாயில்லை.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் எதை நினைத்துக் கொண்டு சொல்கிறார்கள் என்பதை என்னாலே ஊகிக்க முடியும். அவருக்கு நான், என்னுடைய கட்சியின் சார்பாக சொல்லுகின்ற பதில், இப்போது ஏற்கனவே அந்த இடத்திலே இடம் விட்டுக் கட்டப்படவேண்டும் என்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விதியைச் சொன்னார்கள். இன்னும்

சொல்லப் போனால், அரசாங்கத்திடம், அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்பட்டு, இன்றைக்குப் பிரச்சனைகள், விவகாரங்களுக்குள்ளே இருக்கிறது: ஒரு தரப்பின் பதிலை மட்டும் அமைச்சர் அவர்கள் சொன்னால், நீங்கள் அனுமதிக்க லாம். அதற்கான விளக்கத்தை இதே சபையிலே பதிவு செய்வதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இந்த இடம் சம்பந்தமாக ஏற்கனவே அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் சொல்வதற்குள்ளாக அவர்கள் சொல்லிவிட்டார்கள். அரசாங்கத்திலிருந்து அனுமதி வாங்கியிருக்கிறார்கள். எக்சம்ப்சன் கொடுக்கப்பட்டு இருக் கிறது என்றுதான் சொல்ல வந்தேன், அதை ஒத்துக் கொள் கிறேன். அது எந்த இடம் என்பதை அவர்களே யூகித்துக் கொண்டதாகச் சொன்னார்கள். நன்றி. (குறுக்கீடு). பலரும் கேட்கிறார்கள். ஜனதாகட்சித் தலைவர் ஆறுமுகம் அவர்கள் கேட்கிறார்கள். எங்களுக்குப் புரியவில்லை, சபைக்கு வந்து விட்டது, வெளியே வரட்டும் என்று சொல்கிறார்கள். ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள, பழைய முரசொலிக் கட்டிடம் (குறுக்கீடு). பழைய முரசொலிக் கட்டிடம். அண்ணா டிரஸ்ட் அல்ல. பழைய முரசொலிக் கட்டிடத்தைச் சொல்கிறேன். இப்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிற்கு விட்டு இருக்கிற அந்தக் கட்டிடத்தைக் குறிப்பிட்டேன். அந்தக் கட்டிடத்திற்கு சுற்றுப்புறத்திலே 5 அடி விடவேண்டும் என்பது விதிமுறை. பார்க்கிங்குக்கு இடம்விடவேண்டும் என்பது விதிமுறை. எல்லா விதிமுறைகளையும் மீறி அவர்களுக்கு எக்சம்ப்சன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டே பேசுகிறேன். (குறுக்கீடு). நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது சட்டப்படி என்றால், எக்சம்ப்சன் தேவையில்லை. நான் கேட்கிறேன். இந்தச் சட்டத்தை வைத்து, சென்னையிலே வீடு கட்டுபவர்களுக்கு எல்லாம் கொடுப்பது என்றால், ஒரு கட்டிடத்தைக் கூட கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடு). அன்றைக்கு கேட்டு இருக்கலாம் என்று சொன்னார்கள். அதை வெளியிலே சொல்லாமல் இருந்தேன். என்ன கோபமோ, ரகுமான்கான் அவர்களுக்கு, தன் தலைவர் மீது என்ன கோபமோ, என் வாயாலே அதை வரவழைத்துவிட்டார். (குறுக்கீடு). அதுதான் எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம். அவரே நேரிடையாகப் போய் கேட்டு இருக்கலாம், இப்படிச் செய்து இருக்கிறீர்களே என்று. (குறுக்கீடு). எப்படியோ இந்தச் சட்டத்தை மீறி இருக்கிறார் என் தலைவர். அதை என்னால் சொல்ல முடியவில்லை. அதை நீங்களே சொல்லுங்கள் என்று என்னை வரவழைக்கிறார்கள். பரவாயில்லை, சொல்லிவிட்டேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, சட்டப்படி, செய்யப்பட்ட காரியம் அது. சட்டத்தை என் தலைவர் மீறியிருக்கிறார்கள் என்று சொல்ல



136445



வில்லை. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன் [illegible] அரசாங்கத்திலே கூட பல்வேறு சட்டங்கள் வருகின்றன. திருத்தங்கள் வருகின்றன, எக்ஸெம்சன்கள் வருகின்றன. இன்னும் சொல்லப்போனால், இவைகள் எல்லாம் சட்டத்திற்கு உட்பட்டவையா இல்லையா, என்பதுதான் கேள்வி. சட்ட விரோதம் எப்படி? அமைச்சர் அவர்கள் விளக்கட்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மேற் கொண்டு இதிலே விளக்கிக் கொண்டு போனால், காலம் இடம் தராது. நான் விளக்கிச் சொல்லிவிட்டேன், விதிவிலக்கு என்று சொன்னாலே, விதிகளுக்கு விலக்கு அளிக்கிறோம் என்று பொருள். இருக்கின்ற விதிகளுக்கு அப்பாற்பட்டுதான் விதிவிலக்கு. சட்டப்படி கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான் கேட்கிறேன், எம். ஜி. ஆர். மன்றம்....(குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: ராமாவரம் தோட்டத்திற்கு எக்சம்சன் கொடுத்தார்களா, இல்லையா?.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ராமாவரம் தோட்டத்திற்கு என்ன விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, ஒரு நிலத்தை குத்தகைக்கு விடுகிறபோது, லீஸ் பீரியடுக்கு, இவ்வளவுதான் என்று வரையறை இருக்கிறது. ஆனால் ராமாவரம் தோட்டம் எவ்வளவு ஆண்டுகள் அதிகப்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ராமாவரம் தோட்டம், புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் சொந்தமாக வாங்கிய தோட்டம். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: சத்தியா தோட்டம். மன்னிக்க வேண்டும், சத்தியா தோட்டம். (மேசையை தட்டும் ஒலி). தலைவர் அவர்களே, அமைச்சர்களே, இங்கே கருத்துக்களைச் சொல்கிறபோது, சில நேரங்களிலே திருத்த அறிக்கை வைக்கிறார் கள், இப்படிச் சொல்வதற்குப் பதிலாக, இப்படி வந்துவிட்டது என்று. அதுபோல், என்னுடைய குற்றச்சாட்டு, சத்தியா ஸ்டூடியோவைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, ராமாவரம் தோட்டம் என்று மாற்றியிருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மாற்றிச் சொன்னார்கள். சத்தியா ஸ்டூடியோ பற்றி குறிப்பிடுகிறார்கள். அதைக்கூட திருப்பி கொடுத்துவிட்டார்கள். அது இப்போது அவரிடத்திலே இல்லை. கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு). வாங்கியது உண்மையா, இல்லையா என்றால், அதைக் கொடுக்கும்போது, உத்தரவு போட்டதிலே கையெழுத்தை நானும் போட்டேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஜனவரி 27

அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி கையெழுத்து போட்டார்கள். இறந்துவிட்ட மதியழகன் அவர்களும் கையெழுத்து போட்டார்கள். ஆகவே கையெழுத்து போட்டதெல்லாம் வேறு விவகாரம். இன்றைக்கு திருப்பப் பெற்றாகிவிட்டது.

திரு. அ. ரகுமான்கான்: அப்போது எக்சம்சன் கொடுத்தது நியாயமா? (குறுக்கீடு)

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் சொல்ல வருவது எக்சம்சன் அல்ல. (குறுக்கீடு). அது என்ன என்பதை விளக்கிச் சொல்கிறேன்.

வேலை இல்லாத விவகாரத்தில் உள்ளே புகுந்து போனால் விவகாரம் போய் கொண்டே இருக்கும். கோழிப் பண்ணைக்குச் சொந்தமான இடம் சத்தியா ஸ்டுடியோ பக்கத்தில் இருந்த இடம், அந்த இடத்தை வாடகைக்கு விடவேண்டும் என்று கேட்டார்கள். லாங் லீஸ் வேண்டும் என்று கேட்டார்கள். லாங் லீஸ்க்கு விட முடிவு செய்து அரசு கொடுத்தது. அது பிரச்சினையாக வந்த உடனே இன்றைய முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்தை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். இப்போது கிடையாது. இது பெரியப் பிரச்சினை அல்ல. நான் எக்ஸ்சம்சன் வாங்கியதை பெரிய குற்றச்சாட்டாக சொல்லவில்லை. எம். ஜி. ஆர். அவர்களுக்கு கொடுத்ததைப் போலவே அதே விகி விலக்கை வைத்துக்கொண்டு இப்போது கொடுத்து இருக்கிறோம். அதில் என்ன பெரியப் பிரச்சினை இருக்கிறது. சாதாரணமாக ஒரு புட் பாத்க்கு பக்கத்தில் இருக்கக்கூடிய ஒன்று, அங்கு சிறுநீர் கழித்து அசுத்தம் செய்யாமல் இருப்பதற்காக பாதுகாப்புக்காக கொடுக்கப்பட்ட ஒன்று. அதைப் போய் சட்டமன்றத்தில் பிரச்சினையாக ஆக்கி ஏன் இடிக்க வில்லை, மன்னாதி மன்னன் தப்பு செய்கிறார் என்று எல்லாம் சொன்னார்கள். மன்னாதி மன்னன் இல்லை, யார் தவறு செய்தாலும் தவறு தான், நாங்கள் ஒத்துக்கொள்ள தயாராக இருக்கிறோம். இது தேவை அற்ற விவகாரம், மேலும் சட்ட வரம்புக்கு அப்பால் போகிற காரணத்தால்தான் நான் இதைப்பற்றி பேசுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் கொசு என்று எல்லாம் சொன்னார். அதைப்பற்றி கவலை எனக்கு இல்லை.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிய காரணத்தால்தான் நகர சபை தேர்தல் ஒத்திவைக்கப்படுகிறதா?



1986 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசியதற்கு வருகிறேன். அதற்குள் அவசரப் படவேண்டாம். இப்போதுதான் திரு ரகுமான்கான் அவர்கள் சொல்லியதற்கு பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். உங்களுக்கும் பதில் சொல்கிறேன். ஒரே ஒரு வரியில் சொல்லி உட்காரவேண்டும் என்று சொன்னால் மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் பேசியது ரெக்கார்டில் இருக்கவேண்டும். நாங்கள் யாரும் பதில் சொல்லக்கூடாது என்று சொன்னால் சரியாக இருக்க முடியாது. எனவேதான் துவக்கத்திலேயே நான் சொல்லிவிட்டுதான் பேசுகிறேன், வேறு அல்ல. இதற்காகத்தான் தேர்தல் தள்ளிவைத்து இருக்கிறோம் என்று அல்ல. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஏன் தள்ளி வைக்கிறோம் என்பதற்கு காரணம் வேறு. இது வேறு விவகாரம். கொசு என்று சொன்னாலும் பரவாயில்லை, பிறகு புழு என்று சொன்னாலும் சரி. டாக்டர் நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் ரோஜாவை என்ன பெயர் வைத்து அழைத்தாலும் அது மணக்கும் என்று. எப்படி அழகாக தமிழில் அடிக்கடிச் சொல்வார்களோ (குறுக்கீடு) சேக்ஷ்பியர் ஆங்கிலத்தில் அடிக்கடிச் சொல்வார், நான் சேக்ஷ்பியரை படித்தது இல்லை. அடிக்கடி நாவலர் அவர்கள் பேசியதை கேட்டு இருக்கிறேன். இந்த மாண்புமிகு உறுப்பினர் முசிரிபுத்தன் அவர்களும் முஸ்லீம் லீக் தலைவர் திரு. அப்துல் சமத் அவர்கள் நாவலர் அவர்கள் பேச்சை கேட்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே எப்படி அழைத்தாலும் பரவ யில்லை. அ. இ. அ. தி. மு. கழக தொண்டர்களுக்கு இருக்கின்ற பெருமை எப்போதும் குறைந்து விடாது. எனவே அவர் அப்படி சொன்னதற்கு நான் வருத்தப்படவில்லை. ஆனால் காலம் இன்னும் திருந்த வில்லையே என்றுதான் வருந்தப்படுகிறேன். இது அன்பின் காரணமாக ஏற்படுகிற வருத்தமே தவிர வேறு அல்ல. தவறாக கருத வேண்டாம்.

வள்ளுவர் கோட்டம் அருகில் அமைந்து இருக்கிற அண்ணா சிலையை சுற்றி கடைகள் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி சிலையைச் சுற்றி கடைகள் இருக்குமானால் நிச்சயமாக அந்தக் கடைகளை அப்புறப்படுத்த பரிசீலனைச் செய்கிறோம். அப்புறப்படுத்தலாம், தவறு இல்லை.

மற்றும் சிலைகள் அகற்றுவது பற்றியும், கடைகளை அகற்றுவது பற்றியும் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா சிலை மட்டும் அல்ல, காந்தி சிலை இந்திரா காந்தி சிலை, நேரு சிலை, பெரியார் சிலை, என்று எல்லாம் சொன்னார்கள். யார் சிலை வைத்தார்கள் என்பது முக்கியம் அல்ல, சிலை இடையூறாக இருக்கிறதா என்பதுதான் முக்கியமே தவிர, யார் வைத்து இருந்தாலும், யாருடைய சிலையாக இருந்தாலும் சரி சிலைக்கு உரிய மரியாதையை இந்தக் கழகமும், இந்த ஆட்சியும் தவறாது நிச்சயமாக கொடுக்கும் என்பதை

தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இடையூறாக இருக்கிற நேரத்தில் அப்புறப்படுத்த வேண்டி வருகிறதே தவிர வேறு அல்ல என்பதை நான் பணிவோடு இந்த அவைக்கு தங்கள் மூலம் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் பேசும் போது சில பிரச்சினைகளை இங்கே சொன்னார்கள். குப்பையை உரம் ஆக்க காண்டிராக்டர்களிடம் கொடுக்கும் யோசனை இருக்கிறதா என்று எல்லாம் கேட்டார்கள். குப்பையை உரம் ஆக்குவதற்கு காண்டிராக்டர்களிடம் கொடுக்கின்ற யோசனை இந்த அரசிடம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அங்குள்ள தவறுகளை அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வருவார்களானால் நிச்சயமாக உறுதி அளிக்கிறேன், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என்னிடத்தில் கடிதம் மூலம் இங்கே இப்போது கூட கேட்டு இருக்கிறார்கள்.

அம்பத்தூர் நகரியத்திற்கு தேர்தல் எப்போது என்று கேட்டு இருக்கிறார்கள். பொதுவாக டவுன் சிப்புகளுக்கு தேர்தல் கிடையாது. தமிழ்நாட்டில் ஏராளமான டவுன்சிப்புகள் இருக்கின்றன- அம்பத்தூர் பற்றி கேட்டார்கள். அம்பத்தூர் நகராட்சியாக வருவதற்கு எல்லா தகுதிகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள், அது நகராட்சியாக ஆவதற்கு தகுதி இருக்கிறதா இல்லையா? அல்லது நகராட்சியாக ஆக்கலாமா என்பதை பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வர வேண்டும். ஆக பரிந்துரை செய்யவேண்டும். அதற்குப் பிறகு அரசாங்கம் அதைப்பற்றி யோசிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நகரியங்கள் நகராட்சிகளாக ஆவதற்கு தகுதியுடையவைகளாக இருக்குமானால், எந்த அரசியல் காரணங்களுக்காகவும், அவை புறக்கணிக்கப்பட மாட்டாது என்பதை உறுதியோடு சிந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே ஏற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அவருடைய தொகுதியான அம்பத்தூரில் வேறு சில பிரச்சினைகளை குறிப்பிட்டார்கள். அந்த இடங்களெல்லாம் சேர்க்கப்பட்ட பிறகு தெரு விளக்குகள் இல்லை என்று சொன்னார்கள். அது சேர்க்கப்பட்ட பகுதி. அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

அதேபோல் காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு வேணு கோபால் குறிப்பிட்டார்கள். தெரு விளக்குகள் உடனுக்குடன் கவனிக்கப்படவேண்டுமென்பதற்காக மாநகராட்சி டெலிபோனை வைத்து, ஆட்களை வைத்திருக்கிறோம். எவ்வளவு புகார்கள் வந்தாலும் உடனடியாக கவனிக்கப்படவேண்டுமென்று அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறோம். அப்படியிருந்தாலும் ஒரு சில



இடங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதைத் தவிர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சன் ஷேடு எடுக்கப்பட்டதற்கு மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சன் ஷேடு எடுக்கப்படவேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல. சன் ஷேடு என்ற பெயராலே ஆங்காங்கே வியாபாரிகள் பொருட்களைக் கட்டி தொங்கவிட்டார்கள். சன் ஷேடிற்கு வெளியே நடைபாதையே இல்லாமல் உட்கார்ந்துகொண்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதற்காகத்தான் அப்புறப்படுத்தப்பட்டதே தவிர, வேறு அல்ல. அதற்குப் பிறகு வியாபாரிகள் என்னைச் சந்தித்தார்கள். அதை சன் ஷேடாக உபயோகப் படுத்துகிறோம் என்று எழுதிக் கொடுத்தால் அனுமதிக்கிறோம் என்று சொன்னேன். அவர்களும் எழுதிக் கொடுத்தார்கள். நாங்களும் அனுமதித்தோம். அந்தப் பிரச்சினை ஒன்றும் இப்போது இல்லை. எனவே சன் ஷேடை அப்புறப்படுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய நோக்கமல்ல. சன் ஷேடுகளை அப்புறப்படுத்துவதிலே அன்றைய ஆணையாளர் சிறப்பாகச் செய்தார் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவர் அவசரப்பட்டு சன் ஷேடுகளை எடுத்துவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். பரவாயில்லை, அன்றைய ஆணையாளர் சிறப்பாகச் செய்தார் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் சுப்பராயன், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசும் போது நிறைய வதந்திகள் வருகிறது என்று சொன்னார்கள். அதுவும் நம்பத் தகுந்த வதந்திகள் வருகின்றன என்று குறிப்பிட்டார். வதந்திகள் என்றாலே நம்பக் கூடாது. அதுவும் நம்பத் தகுந்த வதந்திகள் என்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. எங்கே என்னை, சொல்லிச் சொல்லி நம்ப வைத்து விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. தேர்தல் ஒத்திப் போகும், ஒத்திப்போகும் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய எண்ணம் அரசாங்கத்திற்குக் கொஞ்சமும் கிடையாது. தயவு செய்து நம்புங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எண்ணம் கொஞ்சமும் இல்லை.

ஜனதா கட்சித் தலைவர் கேட்டார்கள், ஒரு கூட்டணி அமைப்பதற்கு ஒப்பந்தம் வரவில்லை என்றுதான் தள்ளி வைத்தீர்களா என்று கேட்டார்கள். ஒப்பந்தம் வருவதற்காகத் தள்ளி வைக்க வேண்டுமென்று எடுத்துக்கொண்டால், இன்னும் நான்கு நாள் சேர்த்து தள்ளி வைத்துவிட்டுப் போகிறோம். முதல் வேட்பு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தேர்தலுக்கு 21 நாட்கள் இடைவெளி இருக்கவேண்டுமென்பதுதான் விதிமுறையில் இருக்கிறது. அம்மாதிரி முதல் வேட்பு மனு வாங்கியது 23 ஆம்

தேதி. எனவே அடுத்த மாதம் 23 ஆம் தேதிதான் தேர்தலை நடத்த இருக்கிறோம். அதை இன்னும் ஒரு வார காலத்திற்குக் கூட தள்ளிப் போடவும் சட்டத்திலே இடம் இருக்கிறது. நாங்கள் அதைச் செய்யவில்லை. செய்யாததற்குக் காரணம், வேட்பு மனு தாக்கல் செய்த பிறகு, வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப் படவேண்டும். அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் கொடுக்கப் பட்டு, அவை அச்சடிக்கப்படவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது அதற்கு அரசாங்கத்திற்கு அவகாசம் தேவையாகயிருக்கிறது என்ற காரணத்தால் நாட்களை குறைத்திருக்கிறோமே தவிர, வேறு அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருப்பூரில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி குறிப் பிட்டார்கள். லாரிகளிலே குடிநீர் வழங்கியதைப் பற்றிச் சொன்னார்கள். அவையெல்லாம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. புதிய லாரிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி அதிகாரிகள் தவறுகள் செய்திருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் போடமுடியுமா என்றார்கள். ஒவ்வொன்றுக்கும் விசாரணைக் கமிஷன் போட்டுக்கொண்டே போனால், விசாரணைக் கமிஷனுக்கு மரியாதையே இல்லாமல் போய்விடும். அதிகாரிகள் தவறு செய்திருப்பார்களேயானால், எந்த அதிகாரி செய்திருந் தாலும், நிச்சயமாக உறுதியளிக்கிறேன் அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய் இருப்பதாக தகவல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். தவறான தகவல் சொல்லியிருக்கிறார்களா, உண்மையான தகவல் சொல்லியிருக் கிறார்களா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அப்படி யாரும் போயிருப்பதாக எனக்குத் தெரியாது. உச்சநீதிமன்றம் சென்றால் தடை விதித்துவிடும் என்றும் நாங்கள் நினைக்க வில்லை தடை விதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சட்டத்திலே எந்த ஓட்டையும் இல்லாத அளவிற்கு யோசித்து யோசித்து ஒவ்வொரு வார்த்தையையும் போட்டிருக்கிறோம். கால அவகாசத்தைக் குறைத்திருக்கிறோம்.

(முற்பகல் 12-40)

அடுத்து கோவைக்கு ஆலோசனைக் குழு போடப்படுமா என்று கேட்டார்கள். மானியம் வரும்போது விரிவாகப் பேசலாம்.

நான் அதைப் பற்றி அப்போது விரிவாகப் பதில் சொல்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் கொள்ளைக்கூடங்கள் ஆகிவிட்டன என்று குறிப்பிட்டார். சில ஊராட்சி ஒன்றியங்களில் தவறுகள் நடந்து இருக்கலாம் இல்லை என்று சொல்லவில்லை. எல்லா ஊராட்சி ஒன்றியங்களையும் குறை சொல்லிவிட முடியாது. போடப்பட்டிருக்கிற பாதைகள், கட்டப்பட்டிருக்கிற மேல் நிலை குடிநீர்த் தேக்க தொட்டிகள், ஆங்காங்கு கட்டப் பட்டிருக்கிற பாடசாலைகள், கட்டப்பட்டிருக்கிற சத்துணவுக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், இவைகள் எல்லாம் கட்டிடங் களாகவே காட்சி அளிக்கும்போது கொள்ளைக்கூடமாகிவிட்டது என்ற தவறான கருத்தை நாட்டிலே பரப்பக்கூடாது, அதைச் செய்ய வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அவர் பேசும்போது ஒன்றைச் சொன்னார். இரண்டு ஆண்டுகள் பொறுத்து கூட தேர்தலைத் தள்ளிப் போட்டிருக் கலாமே என்று சொன்னார். (குறுக்கீடு) என்ன சொன்னார் என்று சொல்கிறேன். ரிசர்வேஷன் முறை, ஒதுக்கீட்டு முறையை வைத்து இந்த இரண்டு ஆண்டுகள் தள்ளி வைத்துக் கூடத் தேர்தலை வைத்து இருக்கலாமே என்று அவசரத்திலே சொன்னார். (குறுக்கீடு) இல்லையென்று சொன்னால் நான் விட்டுவிடுகிறேன். அதைப்பற்றி பிரச்சினையே கிடையாது.

திரு. மா. மணிமாறன் : சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் வருகிற வரை என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வருகிற வரைக்கும் காத்திருக்கவேண்டும் என்றால், இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகள் கூட ஆகும். அதுவரையில் காத்திருங்கள் என்றால், அதையாவது கொஞ்சம் தெளிவாக— அவருடைய சொந்தக் கருத்தோ, கட்சியினுடைய அபிப்பிராய மோ எனக்குத் தெரியாது——அதுபோல் தெளிவாகத் தெரிவித்து இருக்கலாம்.

தேர்தலை நடத்தவேண்டும் என்றுதான் அரசாங்கம் விரும்புகிறதே தவிர, அரசாங்கத்தின் நோக்கத்தில் வேறு எதுவும் இல்லை. நகராட்சி நிதிநிலை பற்றவில்லை, போத வில்லை என்று சொன்னார்கள். நிதிநிலை பற்றாததற்குக் காரணம், ஆங்காங்கு இருக்கிற நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், வரியை உயர்த்தக்கூடாது என்று ஆணை யிட்டு இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அரசு ஊழியர் களுக்கு நகராட்சி ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிற ஊதியத்தை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறோம்.

'குவின்குவின்னியல் ரிவிஷன்' என்பது 15 ஆண்டுக்காலமாகச் செய்யப்படவில்லை. அப்படியே நின்றிருக்கிறது. இதனால் தான் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதும் உண்மை. தேர்தல் முடிந்து, பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

வந்த பிறகு நிதிப் பற்றாக்குறையைப் பற்றி, அவர்கள் கூடிப் பேசி முடிவு செய்யவேண்டும். அரசு உறுதுணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீரய்யன் அவர்கள் வேடிக்கையாகக் குறிப்பிட்டுச் சொன்னார். பலமுறை கருவுற்று, கரு சிதைந்து விட்டது என்று சொன்னார். தியேட்டருக்குப் போய் இருக்கிறது, என்ன ஆகுமோ என்று சொன்னார். பயப்பட வேண்டாம்.

30 ஆம் தேதி வேட்பு மனுத் தாக்கல் முடிந்து, 31 ஆம் தேதி 'ஸ்குரூட்டினி' முடிந்து, அடுத்த மாதம் 23 ஆம் தேதி தேர்தல் முடிந்து, 24 ஆம் தேதி குழந்தை வெளியே வரும். அதுவரையில் கொஞ்சம் பொறுத்திருக்கவேண்டும். வதந்திகளை நம்பவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசுத் தரப்பில்தான் என்னால் உத்தரவாதம் அளிக்க முடியும். வேறு ஒன்றும் இல்லை. உச்சநீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறது. உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தால் நான் என்ன செய்ய முடியும்? அந்தக் குற்றம் என்னுடையதோ, அரசினுடையதாகவோ இருக்க முடியாது. ஆனால் உச்சநீதிமன்றம் தடை விதிப்பதற்கு நியாயமே இல்லை என்றுதான் சொல்ல முடியும். வேறு எதுவும் சொல்வதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விருதுநகரில் கட்டப்பட்டிருக்கிற ஃப்ளஷ்-அவுட் கக்கூஸ்களைப் பற்றி, லெட்ரின்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) நான் அதைப் பற்றித் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதினார்கள். அவர்கள் உயிரோடு இருந்தபோது அதை எழுதினார்கள். கிராமப்புறத்திலே இருக்கிற பெண்களுக்கென்று தனியாகக் கழிப்பிடம் இல்லாமல் இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது என்று. (குறுக்கீடு)

திரு. கோ. வீரய்யன் : நகரியத்திலே இருக்கக்கூடிய வாக்காளர்கள் ஒன்றியங்களுக்கு வாக்கு அளிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகரியத்தில் உள்ளவர்கள் வாக்களிப்பார்கள். இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கடிதம் எழுதி இருந்தார்கள். பெண்களுக்கென்று கிராமப்புறத்திலே கழிப்பிடங்கள் இல்லாமல் இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது என்று. ஒவ்வொரு முதலமைச்சருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள். அதுமாதிரி தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள்.





கடிதம் கிடைத்த அடுத்த நாளே, தமிழக முதலமைச்சர் அவர்கள் 11 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டேன் அதற்காக என்று சொல்லி கடிதம் எழுதினார்கள். தமிழக அரசு 11 கோடி ரூபாயை ஒதுக்கி தமிழ்நாட்டில் ஏறக்குறைய 11 ஆயிரம் அப்படிப்பட்ட கக்கூஸ்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்படிக் கட்டப்பட்டிருக்கிற இடங்களில்—பாதிக்கு மேற்பட்டவைகள் — ஒத்துக்கொள்கிறேன் — தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. ஃப்ளஷ்-அவுட் கக்கூஸ்கள் தண்ணீர் இல்லாமல் இருந்தால் உபயோகப்படுத்த முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அவைகளுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று, எங்கெங்கே அப்படி இருக்குமோ, அங்கெல்லாம் தண்ணீர் வசதி உள்ளவைகளாக அவற்றை மாற்ற வேண்டும் என்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும், அவை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கிராமப்புறங்களிலே தாய்மார்களுக்கு வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்ததைப் பாராட்டி அன்றைய தினம் இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்களே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இதைச் செய்தது நல்ல நோக்கத்திற்காகத்தான், தவறான நோக்கத்திற்காக அல்ல. தண்ணீர் வசதி இல்லையென்றால் அதைச் செய்துகொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும், அவைகளை இடித்துவிடாது. இருப்பதே போதாது, இன்னும் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகூர் நகரியமாக்கப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. அதன் நியாயத்தை அரசும் புரிந்துகொண்டு அமைச்சர் அவர்களும் அதைப் பரிவோடு கவனிப்பதாக சென்ற முறை வாக்களித்தார்கள். இதுவரை அது நடைபெறவில்லை என்ற ஏமாற்ற உணர்ச்சி எங்களுக்கு இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கிடையில் தேர்தல் அறிவிப்பு வந்துவிட்ட காரணத்தினால் நோடிபிகேஷனுக்குப் பிறகு அவ்விதம் செய்யமுடியாது. தேர்தல் முடிந்த பிறகு —— நாகையின் சுற்றுப்புறத்திலேதான் அந்த நான்கு வார்டுகளும் இருக்கின்றன, ஆகவே நாகூரை நகரியமாக்குவதற்கு

எல்லாவிதமான சாத்தியக் கூறுகளும் உண்டு, நியாயமும் உண்டு, என்பதை அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் முடிந்தபிறகு அந்த 4 வார்டுகளையும் தனியாகப் பிரித்து அவ்வாறு ஆக்குவதிலே எந்தவித சிரமமும் இல்லை. எனவே தேர்தல் முடிந்ததற்குப் பிறகு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கிளப்பிய பல்வேறு பிரச்சினை களுக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். தனி அதிகாரிகள் அதிகாரத்தை நீட்டித்துக்கொண்டுபோக வேண்டுமென்பது அரசின் நோக்கமல்ல. அரசின் நல்ல எண்ணத்தை நயபுங்கள் என்று நான் மாண்புமிகு உறுப்பினர் களைக் கேட்டுக்கொண்டு இந்த மசோதாக்களை எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திருமதி தா. இராசாம்பாள் : துணைத் தலைவர் அவர்களே மறைந்த அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக முதல்வர் அவர்கள் கிராமப்புறப் பெண்களுக்காக கழிப்பறைகளை கட்டிக் கொடுத்ததற்காக நான் கிராமப்புறப் பெண்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் வசதியில்லாத இடங்களில் அவைகளை எடுத்துவிடவேண்டுமென்பது நோக்கம் அல்ல. நீர்வசதி இருந்தாலும்கூட சுத்தம் செய்வதற்கு ஆள் நியமிக்கப்படாததால் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. தண்ணீர் வசதி, ஆள் வசதி இருந்தும் அதைச் செய்து கொடுக்காத காரணத்தினால் ஆங்காங்கே இருக்கின்ற கிராமப்புற கழிப்பறைகளைப் பயன் படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. அப்படி இருப்பதால் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை விரையமாக்கிய நிலைமைக்கு அரசு ஆளாகாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 11 கோடி ரூபாய் செலவு செய்து கழிப்பறைகளைக் கட்டியிருக்கிறோம். ஆள் நியமித்தல், தண்ணீர் வசதி இரண்டும் இருந்தும் சரியில்லை யென்றால் அதைப் பராமரிப்பதுபற்றி இந்தத் துறை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப் படும். தண்ணீர் வசதி இல்லாத இடங்களிலே விரைவில் தண்ணீர் வசதி செய்துகொடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே ரிசர்வேஷன் சம்பந்தமாக ஒரு விளக்கம். நான் ரிசர்வேஷன் சம்பந்தமாகத் தெரிவித்தது தவறான தகவல் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மூலச்சட்டத்தை அவர்களே பார்க்கட்டும். Reservation must be made for women, scheduled castes and scheduled tribes என்று இருக்கிறது. நீங்கள் பர்சன்டேஜ் பிக்ஸ் பண்ணியிருக்கிறீர்கள்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் அந்தச் சட்டத்தை விளக்கிச்சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஏற்கெனவே இருந்த சட்டத் திலே நகராட்சிகளுக்கு இட ஒதுக்கீடு உண்டு. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு உண்டு. அதைப் போலவே ஊராட்சி மன்றங்களுக்கும் ஏற்கெனவே இருந்த சட்டத்திலே இட ஒதுக்கீடு உண்டு. அதன்படியே அப்போது தேர்தல் நடந்தது. அந்த ரிசர்வேஷன் அப்படியே இருக்க வேண்டுமென்ற சட்டம் இருந்தது. இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்றும் பெண்களுக்கு 15 சதவீதம் என்றும் சட்டத்தை, நான் தெளிவாகச் சொல்கிறேன், கொண்டு வந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான், மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது என்னவென்றால், ரிசர்வேஷன் உண்டு, மெட்ராஸ் கார்ப்பரேசனுக்கு உண்டு. 10 டிவிஷனில், ஒரு தொகுதியிலே ஒரு அரிசன் எலக்ட் ஆகவில்லை என்றால், ஒரு அரிசனை நாமினேட் செய்கிற ரிசர்வேஷன் அது, தி.மு.க. காலத்தில் கொண்டுவரப்பட்டது. மேலும் கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. சட்டத்தைப் பாருங்கள். 1973 அல்லது 1974 என்று கருதுகிறேன். Reservation for Women இருப்பது தெரியும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத்தலைவரவர்களே, நான்மீண்டும் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கனவே பெண்களுக்கு இருந்தது இல்லையென்று சொன்னதாகத் தவறாகக் கருதிக் கொண்டு சொல்கிறார்கள். ஏற்கனவே இருந்தது என்பதைத் தொவித்துக் கொள்கிறேன். இடையிலே எந்தச் சட்டமும் வந்ததாக நினைவில்லை, கொண்டு வர வில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றை மட்டும் அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன். தேர்தலை நடத்தவேண்டுமென்ற அவர்களுடைய எண்ணத்தை, உணர்வை நான் சந்தேகிக்கவில்லை. நாமினேஷன் பைல் பண்ணியபோது கட்டிய பணத்தைத் திரும்பக் கொடுத்த நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் உறுதியாகத் தேர்தல் நடத்தப்படும் என்ற உறுதி மொழியைத் தரவேண்டுமென்று கேட்டு என்னுடைய தீர் மானத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. அ. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

Thiru P. Ponnurangam: Sir, I move the following amendment standing in my name;.

"In clause 2, *for* the words, "Within a period of eleven years and six months'', *substitute* the words, within a period of eleven years and four months.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''முகப்புரை சட்ட முன்வடிவில் உரியபகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

The Hon. THIRU P. U. SHANMUGAM: Sir, I move the ollowing amendment standing in my name;



"In the enacting formula, *for* "Thirty-six year'', ***Substitute*** "Thirty-seventh year.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 3/1986) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

**(உ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. இரகுமான்கான் கு. சுப்பராயன் ஆகியோர் ''ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/1985) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் அதை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்,

''ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/1985) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 சனவரி 27

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த] சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 4/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு-2

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 2, *for* the words, "within a period of five years". *Substitute* the words "within a period of four years and ten months".

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: நான் அதை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

---

1986 ஆம் ஆண்டு சனவரி 11ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1986 சனவரி 27]

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In the enacting formula **for** "Thirty-sixth year", **substitute** "Thirty-seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.'' 4/1986)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஊ)மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு. சுப்பராயன் ஆகியோர் ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1985) இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்;

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1985) இப்பேரவை நிராகரிக்கிறது.''

திரு. அ. ரகுமான்கான்: நான் அதை வழி மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 2, *for* the words, "within a period of two years" *substitute* the words, "within a period of one year and ten months".

*''1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





திரு. சோ. மா. இராமச்சந்திரன்: நான் அதை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1.00)

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;—

''முகப்புரை சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In the enacting formula, for "Thirty-sixth year" *substitute* "Thirty-seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்டு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1986) திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்.''

[1986 சனவரி 27

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(எ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம். அ. ரகுமான்கான், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 23–11–1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைமொழிகிறேன்.

"ஆளுநர் அவர்களால் 23–11–1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. சோ.மா. இராமச்சந்திரன்: நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

*1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1986 சனவரி 27]

தீர்மானம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;—"பிரிவு-2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.—

(1) In clause 2, in sub-clause (i) *for* the words, "for a period of nine years and nine months", *substitute* the words, "for a period of nine years and seven months".

(2) In clause 2, in sub-clause (ii), *for* the words, "the said period of nine years and nine months", *substitute* the words, "the said period of nine years and seven months."

THIRU S. M. RAMACHANDRAN: I second it.

திருத்தம் பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

"In the enacting formula, *for* "Thirty-sixth year", *substitute* "Thirty-seventh year."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ் நாடு 1986-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

**(ஏ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், மா. மணிமாறன், ஜே. ஹேமச்சந்திரன், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 13—9—1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற



தமிழ்நாடு 1985—ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தை கொடுத்துள்ளனர் அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களால் 13-9-1985-ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. செல்வராசன், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 23—12—1985-ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985—ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) நான்காம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களால் 23—12—1985-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) நான்காம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1986–ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான்: அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1986–ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு-2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 2, *for* the expression, "the 31st March 1986" *substitute* the expression, "the 28th February 1986,"

திரு. சோ.மா. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

*1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி;

''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In the enacting formula, **for** "Thirty-sixth year" **substitute** "Thirty-seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1986) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், யா. மணியாறன், ஜெ. ஹேமச்சந்திரன், கு. சுப்பராயன் ஆகியோர் ''ஆளுநர் அவர்களால் 13–9–1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு

1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆளுநர் அவர்களால் 13-9-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. கோ. மா. இராமச்சந்திரன் : நான் அதை வழி மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. செல்வராசன், கு. சுப்பையா ஆகியோர், "ஆளுநர் அவர்களால் 23-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) நான்காம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 17/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆளுநர் அவர்களால் 23-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) நான்காம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 17/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. கோ. மா. இராமச்சந்திரன் : நான் அதை வழி மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1986) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

* 1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



திரு. அ. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு-2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 2, for the expression, "the 31st March 1986" substitute the expression, "the 28th February 1986".

திரு. கோ. மா. இராமச்சந்திரன் : நான் அதை வழி மொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1-10)

முகப்புரை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"முகப்புரை சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In the enacting formula, for "Thirty-sixth year", *substitute* "Thirty-seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1986) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(ஒ) ஊராட்சிகள் இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், மா. மணிமாறன், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 13-9-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1985) இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.



**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 13-9-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. செல்வராசன், கு. சுப்பராயன் ஆகியோர், "ஆளுநர் அவர்களால் 23-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1985) இப்பேரவை நிராகரிக்கிறது," என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 23-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1985) இப்பேரவை நிராகரிக்கிறது."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

---

*1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு-2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்:-

In clause 2, *for* the expression, "the 31st March 1986" *substitute* the expression, "the 28th February 1986". The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது. பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In the enacting *formula*, for "Thirty-sixth year", *substitute* "Thirty-seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

**நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.**



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 9/1986) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(ஒ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு 1986

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 8-10-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1985) இப்பேரவை நிராகரிக்கிறது." என்ற [illegible] கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை [illegible]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"ஆளுநர் அவர்களால் 8-10-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1985) இப்பேரவை நிராகரிக்கிறது".

[illegible] பாலன்: நான் அதை வழிமொழிகிறேன்.

[illegible] பேரவைத் துணைத் தலைவர் [illegible] தீர்மானத்தை மொழி கிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1986) [illegible] எடுத்துக்கொள்ள வேண்டும்".

துணை [illegible] அவர்களே, மாநில வாணிபக் கழகம் [illegible] அயல்நாட்டு மதுபான வகைகளையும், சாராயத்தின் [illegible] வியாபாரத்தையும் நடத்துகிற உரிமையை பெற்று [illegible] முதலிலிருந்து நடத்தி வந்தது. ஆனால் சாராய [illegible]

[illegible] ஆண்டு சனவரி 21 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சில்லறை விற்பனையை 14-11-1985 முதல் தன்னுடைய பணி யாளர்கள் மூலமாக மறைமுகமாகவோ அல்லது தனியாகவோ, முகவர் மூலமாகவோ அல்லது இரண்டு முறைகளின் மூலமாகவோ விற்பதற்கு உரிமை பெறுகிற சட்டம்தான் இன்றைய தினம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற சட்டமுன் வடிவாகும். ஏற்கனவே சட்டசபை இல்லாதபோது தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1985 பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பதிலாக வருவதுதான் இந்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதனுடைய நகல்கள் வழங்கப்பட்டிருக் கின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு நான் அவைகளுக்கு பதில் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மான மும், அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு ஆயத்தீர்வை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் மசோதாவின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இதில் சொல்லப்பட்டிருப்பது புதிய விஷயமில்லை. ஏற்கனவே நடைமுறையில் இருக்கக் கூடியது தான். தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒன்றை மூன்று மாத காலம் நீடிக்கிறோம் என்பதற்காக ஒரு சட்டம். அதுமட்டுமல்லாமல், அன்னிய மதுபான வகைகள் ஏற்கனவே ஒரு வாணிபக் கழகம் விற்பனை நடத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதோடு உள் நாட்டிலே தயாரிக்கக்கூடிய மது வகைகளையும் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு தான் இன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படி விற்பனை செய்யப்படுவதை, ஏஜென்சி மூலமாக விற்பனை செய்கிறது என்பதற்காக இந்தச் சட்டத்திலே பல் வேறு விதமான கருத்துக்களை எல்லாம் வரையறை செய்திருக் கிறோம். ஆகவே இந்தச் சட்டத்திலே புதியதாகவோ அல்லது மாற்றமாகவோ ஏதாவது இருக்கிறதா என்றால் ஒன்றுமில்லை. இங்கே சிலபேர் சொல்லலாம். இப்போது சட்டம் கொண்டு வருகிறோம். ஏற்கனவே ஏலம் போட்டார் கள். ஏலம் போடக்கூடிய காரணத்தால் கடைகள் மூலமாக அரசாங்கத்திற்கு மிகுதியாக இலாபம் வரும். அப்படி ஏலம் போடக்கூடியதை நிறுத்திய காரணத்தால், ஏஜென்சி முறையைக் கொண்டு வந்த காரணத்தால் அரசாங்கத்திற்கு இலாபமா, நஷ்டமா என்று கேள்விக் கணையை தொடுக்கக் கூடிய முறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசலாம்.



ஆனால் நான் அறிந்தவரையில் அரசாங்கத்திற்கு நஷ்டமில்லை. இந்தத் திட்டத்தால் நல்ல இலாபம்தான் வரும். இந்த திட்டத் தால் எந்த வகையிலும் நஷ்டம் ஏற்படாத நிலை இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

இதைச் சொல்வதற்குக் காரணம் ஏலம் போடுகிறபோது பலர் போட்டி போடுவார்கள். பலர் போட்டி போட்டு எடுக்கிற போது வருமானப் பெருக்கம் ஏற்படாதா? அதை விடுத்து ஏஜென்சி முறையென்று கொண்டு வந்து விட்டார்களே, இந்த ஏஜென்சி முறை ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுமென்றால் சாதகமாக இருக்கலாமே தவிர மற்றவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா என்ற கேள்வியைக்கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்கலாம்.

விவாதத்தைத் தொடங்கிவைத்து பேசுகிறபோது முதலாவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் பேசுவார்கள். அவர்கள் சொன்னதற்கு விளக்கம் அளிக்கிற வகையில் ஆளும் கட்சியினர் பதிலளிப்பார்கள். இது ஒரு மரபு. ஆனால் எந்தப் பிரச்சனையை எப்படி எதிர்ப்பது என்று ஒரு சந்தேகம் கூட எதிர்க்கட்சியில் இல்லாமல் இருப்பதால் ஆளும் கட்சியில் இருக்கிற நானே கேள்வியும் பதிலுமாக பல்வேறு விளக்கங்களைச் சொல்கிற அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமுன் வடிவை [illegible] செய்து பேசுகின்றபோது எதிர்க்கட்சித் தரப்பிலும் பேசலாம். ஆளுங்கட்சித் தரப்பிலும் பேசலாம். (குறுக்கீடுகள்)

(பிற்பகல் 1-20)

டாக்டர் கே. சமரசம்: அப்படிச் சொல்லவில்லை. அப்படி நான் சொல்லமாட்டேன். நீங்கள் எப்போதும் நிரந்தரமாக இருக்கவேண்டும். உங்களுக்கு நான் மறுப்பு சொல்லமாட்டேன்.

திரு. அ. ரகுமான்கான்: எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இந்தச் சட்டம் சம்பந்தமாக பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருக் கின்றன. பேச இருக்கிறார்கள். அது வேறு விவகாரம். ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஏதோ விஷயங்கள் இல்லை, சந்தேகம் எல்லாம் வருகிறது, ஆகையினாலே எங்களிடத்திலே விவாதத்தைத் தொடங்கிவிட்டார்கள். ஆகையினாலே, பரதமும் நானே, நாட்டியமும் நானே, கேள்வியும் நானே, பதிலும் நானே என்று சமரசம் அவர்கள் உரிமை கொண்டாடுவது, என்கிற அந்த ஏகபோக முறை சரியல்ல, என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, ஏகபோக உரிமையற்ற நிலையில் இங்கே கொண்டு வந்திருக்கிற காரணத் தால், எடுத்துச் சொல்வதற்கு அதிக வாய்ப்பு இல்லாத காரணத்தால், உடனடியாக பல்வேறு வகையிலே விவாதம் செய்வதற்கு உரிய பெரிய விஷயங்கள் ஏதும் இல்லை என்ற

காரணத்தால்தான், இப்படி இருக்கிறார்கள் என்று சொன்னேனே தவிர, ஏகபோக உரிமையை நான் எடுத்துக்கொள்ளவில்லை. இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு உறுப்பினரும் எந்த அளவிற்கு பல நல்ல உணர்வுகளைப் பெற்று இருக்கிறார்கள் என்பதையும் வாதத் திறமையை எந்த அளவிற்குப் பெற்று இருக்கிறார்கள் என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதிலே மிக நல்லமுறையிலே தெளிவாகவே சில விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"Provided also that where the licence for selling, by retail, arrack is valid on the 15th day of October 1985, and the licensee concerned is not willing to continue to sell, by retail, arrack beyond the 15th day of October, 1985, it shall be open to the licensee to surrender his licence to the licensing authority, and thereupon the Tamil Nadu State Marketing Corporation Limited shall arrange for the sale, by retail, of arrack by any of the methods specified in item (A), (B), or (C) of the immediately preceding proviso". என்றெல்லாம் மிக அருமையாகவே அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, இந்தக் கடைகள் நடத்துவதால், அரசாங்கத்திற்கு முன்பு இருந்ததை விட, லாபமா, நஷ்டமா, என்றால் லாபம் தான். நஷ்டம் இல்லை. இது கோர்ட்டிலே கூட கேட்கக்கூடிய கேள்வி. சொல்லக்கூடிய பதிலாகவே இருக்கும். இதை மீறி கோர்ட்டுக்கு சிலர் போய் இருக்கிறார்களே, என்று கூட சொல்கிறார்கள். 7,360 கடைகளுக்கு மேலாக இருக்கிற இதில், ஒரு 50 பேர்களுக்கும் குறைவாக கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். இது ஒரு பெரிய விஷயம் அல்ல. ஜனநாயக நாட்டிலே ஒரு கட்சி வெற்றி பெறுகிறது என்று சொன்னாலும்கூட, ஒருவர் வெற்றி பெற்று வருகிறார் என்று சொன்னாலும்கூட, எதிர்க்கட்சியிலே இருந்து வந்திருக்கக்கூடிய நண்பர்கள் கூட, நூற்றுக்கு நூறு வாக்குகள் பெற்று வருகிறவர்கள் அல்ல. மெஜாரிட்டி என்பதைப் போல. ஏதோ சிலர் போயிருக்கலாம். ஜனநாயகத்திலே, 'ரொட்டிக்கு சுட்டதெல்லாம் படம்'. எல்லாவற்றுக்கும் விமர்சனம் உண்டு, எல்லாவற்றுக்கும் கோர்ட் உண்டு, எல்லாவற்றுக்கும் ரிட் உண்டு, எல்லாவற்றுக்கும் ஸ்டே உண்டு. அது நடந்து கொண்டேயிருக்கும். தொடர்ந்து கொண்டேயிருக்கும். இவைகள் அத்தனையையும் நாம் முறியடித்து, நாம் நம்முடைய ஆட்சியை நடத்தவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்த அடிப்படையிலேதான். இன்றையதினம் இந்தச் சட்டம் மிக அருமையான சட்டம், இது எந்தக் காரணத்தை முன்னிட்டும், எந்த வகையிலேயும் ஒரு தவறான, குற்றமான சட்டம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதனாலே, அண்ணா தி.மு.க. மட்டும் மிகப் பெரிய அளவிற்கு ஒரு வாய்ப்பு பெற்றுவிட்டதா? பெருமை



பெற்றுவிட்டதா, இதிலே வருமானம் பெற்றுவிட்டதா? இல்லை. ஏஜென்சி முறை என்பது, தகுதியானவர்களை நியமிப்பது. இதிலே பரிந்துரையை எல்லாக் கட்சிகளும் கொடுத்திருக்கலாம். எல்லாக் கட்சிகளிலேயிருந்தும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதை வாங்கியிருக்கக்கூடியவர்கள் பல கட்சியிலே இருந்து வாங்கியிருக்கலாம். தகுதி உள்ளவர்களை, தேர்ந்தெடுக்கிறது வாணிபக் கழகம் அவர்களுக்கு ஃபுல் பவர், ஃபுல் மெரிட், புல் இன்ஜார்ஜ் இருக்கிறது. கவர்ன்மென்ட், இப்படித்தான் நடக்கவேண்டும் என்று ஒரு விதிமுறை வகுத்து, அவர்களிடத்திலே ஒப்படைக்கிறது. அதற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த தகுதியைப் பெற்ற, எல்லாக் கட்சியிலே இருப்பவர்களும் வாங்கியிருக்கிறார்கள். அவ்வளவுதானே தவிர, இதிலே யாரும் வாங்கவில்லை என்று சொல்லுகின்ற நிலைமை பொதுவாக இல்லை, என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சிலர் சொல்லலாம். பழைய முறை என்பது இருக்கலாம் அல்லவா என்று. பழைய முறையிலேதான்......

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சியினரும் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது சரியான தகவல் அல்ல.

டாக்டர் கே. சமரசம்: நான் இதை நிரூபிக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருப்பவர்கள் கூட இதிலே இருக்கிறார்கள். வேண்டுமானால் கொடுக்கிறேன். வேண்டுமானால் நிரூபணம் கொடுக்கிறேன். கடையின் பெயரைச் சொல்லத் தயார். காரிமங்களம், பொம்மஹல்லயில், (குறுக்கீடு) கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் எடுத்து இருக்கிறார். அவருடைய பெயர் இருக்கிறது. வேண்டுமானால் கொண்டு வந்து காட்டுகிறேன். எனக்குத் தெரியும். தெரியாதவற்றை வைத்து பேசக் கூடியவன் அல்ல நான். ஆகவே இயக்கத்திலே இருக்கக் கூடியவர்கள், அவர்களுடைய இயக்கத்தினுடைய ஆதரவைப் பெற்று, கேட்கிறார்களா, இல்லையா என்பது வேறு விஷயம். தொழில் செய்கிறார்கள். இப்போது பேசிய பெரியவர் சொல்கிறார்கள். அவர் இல்லை என்பது எனக்குத் தெரியும் காந்தி கூட காங்கிரஸ் என்றார். ஆனாலும், காங்கிரஸ் லட்சியம் பூராவும் காந்தியாகிவிட முடியாது. காந்தி கூட சொன்னார். காங்கிரசைக் கலைத்துவிடலாம் என்று. ஆனால் அவர் தான் தலைவராக இருந்தார்.

அதேபோல் அப்துல் சமத் பெரியவர் அவர்கள் சொல்கிறார்கள், அவர் இளம் வயதினர் அத்தனை பேர்களுடைய ஒட்டுமொத்தமான நிலையில் இருந்தாலும் கூட அந்த பெருமைக்குரியதாக எடுத்துக் கொள்கிறோம். பல தொழிலில் பலர் ஈடுபட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடுத்து இருக்கக்கூடியவர்கள் பெயரை கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயாராக இருக்கிறார்களா?

டாக்டர். கே. சமரசம்: எடுத்து இருப்பவர்கள் பெயர், இன்னும் என்ன விளக்கம் வேண்டுமானாலும் தருகிறேன். கட்சியில் வைத்து கொள்வதும், தள்ளிவிடுவதும் உங்களுடைய இஷ்டம். (குறுக்கீடு).

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் விடுதலைப் பெற்ற பிறகு காங்கிரஸை கலைத்து விட வேண்டும் என்று காந்தி சொன்னார்கள் என்று சொன்னார். அப்போது விடுதலைக் குழு என்று வைத்து இருந்தார்கள். அதைத் தான் கலைத்து விட வேண்டும் என்று சொன்னார்களே தவிர காங்கிரஸ் கட்சியை கலைத்து விட வேண்டும் என்று சொல்ல வில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன் தவறான தகவலை மன்றத்திற்கு தரக் கூடாது என்பதற்காக.

டாக்டர் கே. சமரசம்: பெருமைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் என்ற இயக்கமே கூட இல்லை. பாரத தேசம், பாரத இயக்கம் என்று தான் நடத்தியிருக்கிறார்கள் பாரதியார் எல்லாம். இந்தியா என்ற பெயர் கூட இல்லை. அது கூட இடையில் வந்தது தான். அது எப்போது வந்தது என்று உங்களுக்குத் தெரிந்து இருக்கவேண்டும். காங்கிரஸ் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். அதில் சொல்லியிருக்கக்கூடிய காங்கிரஸ் எப்படி நிறைவேற்று வருகிறது என்பதை எண்ணிப் பார்த்து பதில் சொல்ல வேண்டும். ஆகவே, வரலாற்றை முழுமையாக உங்களுக்குத் தேவை என்றால் சமர்ப்பிப்பதற்கு தயார். அது வேறு விஷயம். அந்த ஆராய்ச்சியில் போனால் ரிஷிமூலம், நதி மூலம் என்று ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று நம்புகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எங்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றி நன்கு தெரிந்து வைத்து இருப்பதற்கு நன்றி. ஆனால் காங்கிரஸ் வரலாற்றை நீங்கள் எவ்வளவு ஆராய்ந்து வைத்து இருக்கிறீர்களோ அந்த அளவுக்கு குறைந்தவர்கள் அல்ல நாங்கள். இருந்தாலும் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன், 'இண்டஸ் வேலி' என்ற ஒரு சொல்லிலிருந்து தான் இந்தியா வந்தது என்று நீங்கள் சொல்வீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஜவஹர்லால் நேரு



அவர்கள் காங்கிரசின் தலைவராகவும், இந்தியப் பிரதமராகவும் இருந்தபோது தான் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களாக இருந்ததை ஒன்றாகத் திரட்டி இந்தியாவை வலிமை பொருந்திய நாடாக மாற்றிக் காட்டினார். அந்தப் பெருமை காங்கிரஸ் இயக்கத்திற்கு தான் உண்டு. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த பேரவைக்கு தரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றை இடையில் படித்து விட்டு முழுமையாக அவர் ஆராய்ச்சி செய்யாமல் சொல்லியிருக்கிறார்கள். இந்தியா என்பது 56 தேசங்களாக இருந்தது. பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியா அவர்கள் அறிக்கைக்கு பிறகு தான் இந்தியா ஒன்றானது. அதற்கு முன்பு இந்தியா 56 நாடுகளாக இருந்தது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கடையைப் பற்றி சொல்லிவிட்டார். நேருவைப் பற்றி சொல்லிவிட்டார். இன்னும் என்ன வேண்டும்?

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தை உருவாக்கியவர்கள் நம் நாட்டினர் அல்ல. அது கூட வெள்ளைக்காரன், மேல்நாட்டினர் தான் என்பதை கூட உணர்ந்து கொள்ளவேண்டும். அது மட்டும் அல்ல, முழுமையான பல்வேறு விஷயங்களை வேண்டுமானால் எங்காவது மேடைப் போட்டால் அதைப்பற்றி பேசுகிறேன், அது வேறு விஷயம். ... அவர்கள் கூட காங்கிரஸ் பேரியக்கத் ... தேசியம் பல்வேறு வகையில் ... பிற்படுத்தப்பட்டவர்கள் பாதிக்காமல் சேர்வதற்கு ... காப்பதற்காக ... த்தை உருவாக்கினார்கள் (குறுக்கீடு).

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மதுவிலக்கு சட்டமா? அல்லது மகாத்மா காந்தி சட்டமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமுன்வடிவுக்கு உட்பட்டு தான் பேசவேண்டும் என்று பல்வேறு சமயங்களில் பேரவைத் தலைவர் அவர்களும், இந்த சேரில் உட்காருபவர்களும் ருலிங் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு உறுப்பினர்கள் அதிலிருந்து டீவியேட் ஆகி விடுகிறார்கள். இந்த நடைமுறையை அனைவரும் பின்பற்றினால் இந்த சேருக்கு மிகவும் நன்றாக இருக்கும்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே இன்றையதினம் நடைமுறைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுவது என்பது முடியாத காரியம். பழைய முறையில் இன்றைக்கும் நடந்து கொண்டு இருக்க வேண்டுமானால்

மனிதனுடைய ஆற்றல் மலைக்கு சமமாக போய்விடும். ஆகவே அந்த நிலையிலிருந்து மாறி 'பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல, அது காலவழுவல' என்று சொன்னார்கள். நிர்வாகத்தில் அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கு ஏற்ப அரசாங்கம் அதை அமைத்துக்கொள்ளவேண்டும். அதே நேரத்தில் அஸ்திவாரத்தையே பார்க்காமல் ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டு இருக்கக்கூடாது, காரணம் அஸ்திவாரத்தின் நிலை தெரியாமல் மிகப்பெரிய கோபுரத்தைக் கட்டினால் அது இடிந்து விடும் என்பதை நாங்கள் உணர்ந்து இந்தத் திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 1–30.)

முன்பிருந்த நேரத்தைப் பார்த்தேன். அப்போது இங்கே சட்டமன்றத்திலே சொன்னார்கள். இப்போது இருக்கக் கூடிய நிலை தொடர்ந்திருக்குமானால், பல்வேறு விளைவுகள் ஏற்பட்டு விடும் என்று.... (மணியடிக்கப்பெற்றது)..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் பேரவை அலுவல் நேரம் சிறுது நீட்டிக்கப்பெறுகிறது.

டாக்டர் கே. சமரசம்: வாணிபக் கழகத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளக் கூடாதா, அதை முடிவிற்குக் கொண்டு வரக்கூடாதா என்ற கேள்விக் கணைகளை எல்லாம் இதே சட்டமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்களாலே விவாதிக்கப்பட்டதன் காரணத்தால், எடுத்து வைக்கப்பட்ட காரணத்தால் இந்த முறையை வாணிபக் கழகத்துடன் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆசையைப் பெருக்கிக் கொண்டவன் ஆனாலும், அதே நேரத்தில் ஆற்றலை வளர்த்துக்கொண்டவன் ஆனாலும், பெருக்கிக் கொண்ட ஆசையையும், வளர்த்துக்கொண்ட ஆற்றலையும் இந்த நாட்டு மக்களுக்கு காணிக்கையாக்கக் கூடிய வகையிலே, அவ்வப்போது புதிய திட்டங்களைத் தந்திருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சுட்டிக்காட்டி, அது அரசினுடைய கடமை என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (28–1–1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



(8) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

116. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1984–85–ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் (1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

117. அண்ணா பொறியியற் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

118. சேரன் பொறியியற் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (ஆங்கிலம்).

119. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம்).

120. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ்).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

45. தமிழ்நாடு அரசின் 1963-64, 1969-70, 1970-71 மற்றும் 1971-72-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நாற்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)-யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது போக்குவரத்துத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் (1985-86) பதினொன்றாவது அறிக்கை (தமிழ்).

46. 1973-74-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

47. 1979-80-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

48. 1979-80-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

49. 1985-86-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

50. 1985-86-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

51. 1979-80 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

52. 1985-86-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

D
V211,31 N86
N86-17-131

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்தாள்.**

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 30-6-98 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 2[illegible]-6—1,00,000—30-1-84.